விலை ரூபா 20 பக்கங்கள் 36

# உதயன்

சுடர் 31 கதிர் 046 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 26, திங்கட்கிழமை 11.01.2016

28c - 24c
மேக மூட்டம்

### சாட்டிக் கடலில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.11
வேலணை, சாட்டிக் கடலில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர், கடலில் மூழ்கி சாவடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை பக். 32

## 30 நாள்களில் 100 பக்கக் கடிதத்துக்கு பதிலளிக்கவேண்டியுள்ளார் மகிந்த

கொழும்பு, ஜன. 11
30 நாள்களில் 100 பக்கக் கடிதத்துக்குப் பதிலளிக்க வேண்டிய நிலைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தள்ளப்பட்டுள்ளார். 10 ஆண்டுகால அவரது ஆட்சியில் நடந்த கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அனுப்பிய கடிதத்துக்கே அவர் இவ்வாறு பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிலிருந்து 100 பக்கங்களைக் கொண்ட கடிதமொன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
அவரது ஆட்சிக் காலத்தின் போது மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் செலவுகள் போன்றவற்றை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியே குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பக். 33

# ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் அரசமைப்பு

## உருவாக்கப்படுமென அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 11
ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என அரசு நேற்று அறிவித்துள்ளது.
அத்துடன், புதிய அரசமைப்பை உருவாக்க அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் நாடாளுமன்ற அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு அரசமைப்பு பக். 33



## சீனாவுக்கான பயணத்தை ஒத்தி வைத்தார் மகிந்த

கொழும்பு, ஜன. 11
உடல்நிலை சீரின்மை காரணமாக சீனாவுக்கான பயணத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திடீரென ஒத்திவைத்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு மாத கால பயணமாக சீனாவுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார். இந்த நிலையில் அவர் தனது பயணத்தை திடீரெனப் பிற்போட்டுள்ளார்.
மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும்; சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் நடந்து கொண்டிருக்கும் நிலையிலேயே, அவர் இந்தப் பயணத்தை ஒத்திவைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது, நாட்டை விட்டு வெளியேறினால், அதனை கோழைத் தனமான பக். 33

முச்சந்தி முரளி



அப்ப எங்கட மீனவர்களுக்கு பொங்கலுக்கு அப்புறம் நல்ல காலம் எண்டுறியளோ...

## பாக். போர் விமானங்களை வாங்கும் திட்டத்தைத் தள்ளிப்போட்டது அரசு

### புதுடில்லியிலிருந்து அனுப்பப்பட்ட இராஜதந்திரக் குறிப்பை அடுத்து

கொழும்பு, ஜன. 11
இந்தியாவின் எதிர்ப்புக்களை அடுத்து, பாகிஸ்தானிடம் ஜே.எவ்.-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை, இலங்கை அரசு தற்காலிகமாக கைவிட்டுள்ளது.
மூன்று வாரங்களுக்கு முன்னர், புதுடில்லியில் இருந்து கடிதத் தலைப்பில்லாத வெள்ளைத் தாள் ஒன்றில் இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்ட இராஜ தந்திரக் குறிப்பையடுத்தே மேற்படி முடிவை கொழும்பு எடுத்துள் பக். 32



## அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகள் பொங்கலுக்குப் பின்னர் கைப்பற்றப்படும்

### அமைச்சர் மகிந்த அமரவீர யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11
அயல் நாடான இந்தியாவுடன் பகைத்துக் கொள்ள முடியாது. பகைக்கவும் விரும்பவில்லை. அதற்காக இந்திய இழுவைப் படகுகளைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது எனத் தெரிவித்துள்ளார் கடற் றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர.
அத்துடன்,வடக்கு மாகாண கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய இழுவைப் படகுகளில் 500 படகுகளை தைப்பொங் பக். 33



## தாஜுதீன் வழக்கில் கைதாவார் யோசித

கொழும்பு, ஜன. 11
ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீன் கொலை வழக்குடன் தொடர்புடையதாகக் குற்றம் சுமத்தப்படும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோசித ராஜபக்ச விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமான பக். 32

### அரசமைப்புப் பேரவை குறித்த எதிர்க்கட்சிகளின் யோசனை ஏற்பு

கொழும்பு, ஜன.11
இலங்கைக்கான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்பு பேரவையாக மாற்றுவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தி, எதிர்க்கட்சிகள் முன்வைத்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான அரசின் அரசமைப்பு வரையும் முயற்சி, கூட்டு எதிர்க்கட்சிகள் புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான நடைமுறைகளில் சில மாற்றங்களைக் கோரியதால் சிறிய தடங்கல்களை எதிர்கொண்டது.
குறிப்பாக, நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றும் பிரேரணையில் பக். 33



## மூத்த ஊடகவியலாளர் கே.கே.இரத்தினசிங்கம் நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், ஜன. 11
தமிழ் ஊடகத்துறையின் மிக மூத்தவர்களில் ஒருவரும், உதயன் நாளேட்டின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியின் ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியருமான கே.கே.இரத்தின சிங்கம் காலமானார். அவருக்கு வயது எண்பத்தேழு(87).
ஆறு தசாப்தங்களாக தமிழ்ப் பத்திரிகை உலகின் பக். 32

## கிளிநொச்சியில் அடுத்த வாரம் கூடுகிறது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கு மறுநாள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டமும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக, கட்சித் தகவல்கள் தெரிவித்தன.
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் பக். 33

## பிரபாகரனின் ஈழக் கனவை நனவாக்குகின்றார் மைத்திரி

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11
புலி உறுப்பினரை விடுவிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கை, புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஈழக் கனவை நனவாக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆயுத ரீதியாக தோற் பக். 32

## வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை தீர்க்க யோசனை

கொழும்பு, ஜன. 11
வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய யோசனைகள் அடங்கிய அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.
இந்த அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் பிரதமரிடம் கையளிக்கவுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான தேசியக் கொள்கைத் திட்டமிடல் மற்றும் வர்த்தக இராஜாங்க அமைச்சர் நிரோன் பெரேரா தெரிவித்துள்ளார்.
அரச முகாமைத்துவம், நிதி, கல்வி, பக். 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கடந்த ஆண்டு 2,551 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன. 11
டெங்குத் தொற்றால் கடந்த வருடம் வடக்கில் 4 பேர் உட்பட நாடளாவிய ரீதியில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கில் 2 ஆயிரத்து 551 பேர் உட்பட நாடளாவிய ரீதியில் 29 ஆயிரத்து 690 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே டெங்குத் தொற்று மிக அதிகமாக ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறே இறப்பும் வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக இருந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்து 16 பேரும், வவுனியாவில் 197 பேரும், முல்லைத்தீவில் 141 பேரும், மன்னாரில் 105 பேரும், கிளிநொச்சியில் 92 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஜனவரியில் 614 பேரும், பெப்ரவரியில் 218 பேரும், மார்ச்சில் 113 பேரும், ஏப்ரலில் 48 பேரும், மேயில் 66 பேரும், ஜூனில் 63 பேரும், ஜுலை யில் 69 பேரும், ஓகஸ்ட்டில் 45 பேரும், செப்ரம்பரில் 51 பேரும், ஒக்ரோபரில் 76 பேரும், நவம்பரில் 216 பேரும், டிசெம்பரில் 437 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

மழை காலம் ஆரம்பிக்கும் காலம் தொடங்கி அது நிறைவடையும் காலம் வரையிலான செப்டம்பரிலிருந்து ஜனவரி வரையான காலப்பகுதியிலேயே டெங்குத் தொற்று அதிகமாக இருந்து வருகிறது. எனவே டெங்குத் தொற்று இந்த மாதமும் அதிகரித்த நிலையில் இருக்கும் என்பதால் அது பற்றிய விழிப்புடனும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதவிர 2014 ஆம் ஆண்டு 47 ஆயிரத்து 502 பேரும், 2013 ஆம் ஆண்டு 32 ஆயிரத்து 63 பேரும், 2012 ஆம் ஆண்டு 44 ஆயிரத்து 461 பேரும், 2011 ஆம் ஆண்டு 28 473 பேரும் 2010 ஆம் ஆண்டு 34 ஆயிரத்து 188 பேரும் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ற-4)



கல்முனை பொலிஸ் பிரிவில் கல்முனைக்குடி சாஹிபு வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு கார் மற்றும் மூன்று மோட்டார் சைக்கிள்கள் இனம் தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. அதனால் வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ஐ)

## கிணற்றில் விழுந்து குடும்பஸ்தர் சாவு

கிணற்றில் நீர் அள்ளச் சென்றவர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கச்சேரி ஒழுங்கையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊழியரும் இரு பிள்ளைகளின் தந்தையுமான சோமசுந்தரம் தேவராஜ் (வயது-53) என்பரே உயிரிழந்தவராவார். இவர் இரவு கடமை முடிந்து வந்து கிணற்றில் நீர் அள்ள முற்பட்ட வேளையில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டார் என தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-86)

## மதுபானத்துக்காக கலகம் செய்த பொலிஸுக்குப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 11
யாழ். தனியார் பஸ் நிலையத்தில் மதுபானம் கோரி கலகத்தில் ஈடுபட்டார் என்று குற்றஞ் சுமத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவரும் தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல யாழ். நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு தென்பகுதிக்குச் சென்றிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்லும் நிலையில் அவர் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளார். மதுபானம் வாங்கித் தருமாறு கோரியே அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரும், மற்றொருவரும் கலகத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த குற்றச்சாட்டுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தரை யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தற்காலிக இடை நிறுத்தம் செய்துள்ளார். (ஐ-4,101)

## இந்தியமீனவர் அத்துமீறலை தடுக்க முடியாதுள்ளமை ஏன்?

### *மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் யாழ். மாவட்ட மீனவ சமாசத்தினர் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜன.11
விடுதலைப் புலிகளை இல்லாது ஒழிப்பதற்கு நவீன ஆயுதங்களையும் உத்திகளையும் பயன்படுத்திய அரசு, ஏன் அத்துமீறும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த இந்த உத்திகளை பயன்படுத்தாமல் உள்ளது? - இவ்வாறு யாழ். மாவட்ட மீனவ சமாசத்தினர் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.



குடாநாட்டில் மீனவர்களின் பிரச்சினைகளை கண்டறிவதற்காக இரண்டுநாள் பயண மாக நேற்று மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர யாழ்ப்பாணம் வந்திருந்தார். அதன்போது அவர் நீர்வளத் திணைக்களம், குருநகர் மற்றும் நயினாதீவு பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார். இங்கு ஏற்பாடு செய்திருந்த சந்திப்பின்போதே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மு.ப 11 மணிக்கு கடத்துறை நீர்வளத் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்டு மாவட்ட மீனவர்களின் சிக்கல்கள் தொடர்பாக கலந்தாலோசித்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், விஜயகலா மகேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் சுகீர்தன், யாழ்.மாவட்ட உதவி அரச அதிபர், நீர்வளத்திணைக் கள அதிகாரிகள், மீனவர் சாமசத்தின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். இதன்போது சமாசத்தினர் மீன்பிடி தொடர்பில் தீர்க்கப்பட வேண்டியுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

பிற்பகல் 1.30 மணிக்கு குருநகர் பகுதிக்குச் சென்ற அமைச்சர் புதிதாக அமைக்கப்படவுள்ள இறங்குதுறையைப் பார்வையிட்டதுடன், மக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் நோர்தீஸ்ட் வலைத் தொழிற்சாலை, ஐஸ் தொழிற்சாலை என்பவற்றையும் பார்வையிட்டார். இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மீனவர்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், யாழ்.பிரதேச செயலாளர், கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் என்று பலரும் கலந்து கொண்டனர். மாலை 3 மணிக்கு நயினாதீவுக்குப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும், இறங்குதுறை தொடர்பாகவும் பிரதேச மீனவர் சங்கம் மற்றும் சமாசத்தினருடனும் சந்திப்பை மேற் கொண்டார். (ற-ரி5,135)

## 2 பாடசாலைகள் மூடப்படுவதற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11
முன்னர் யாழ்.வலயத்தில் சாதனை படைத்த 2 பாடசாலைகள் மூடப்படவுள்ளன என்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அதற்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நல்லூர் கோட்டத்தில் ஆசீர்வாதப்பர் வீதியில் உள்ள நல்லூர் ஆனந்தா வித்தியாசாலை, நல்லூர் ஞானோதயா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே மூடப்பட்டுள்ளன.

நல்லூர் ஆனந்தா வித்தியாசாலையில் கற்றுவந்த சுமார் 20 வரையான மாணவர்களை கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இணைத்துள்ளார்கள்.

நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் தேவை என்பது ஒன்றுதான். ஆனால் இந்த இரண்டு பாடசாலைகளுக்கும் இடையில் ஆனந்தா வித்தியாசாலைக்கு அண்மித்ததாக நல்லூர் சென். பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் உள்ளது.

தற்போது ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இணைக்கப்பட்டுள்ள மாணவர்களில் பெருமளவானவர்கள் நல்லூர் சென். பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு அருகில் வசிப்பவர்கள், மிகவும் வறிய மாணவர்கள், இந்த மாணவர்களை நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தையும் தாண்டி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் செல்வதால் அவர்களின் மனதில் எத்தகைய தாக்கம் ஏற்படும் என்பதனை பாடசாலையை மூடுவதற்கான பரிந்துரை செய்தவர்கள் ஏன் சிந்திக்கவில்லை?

அவ்வாறே நல்லூர் ஞானோதயா வித்தியாலயத்தில் கற்ற மாணவர்கள் அனைவரும் மாணவர் தொகை குறைந்த நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் இணைக்கப்படாமல் கல்வியங்காடு இந்து ஆரம்ப பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயம் என்னவென்றால் அதிகாரிகள் தமக்கு வசதியான வேலையைச் செய்கிறார்களே தவிர மாணவர்களின் நலனில் அக்கறை கொள்ளவில்லை என்று சங்கம் குற்றம் சுமத்துகிறது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்து தற்போது மாகாணக் கல்விப் பணிப்பாளராக உள்ள உதயகுமார் இத்தகைய பாடசாலைகளில் அதிக அக்கறை கொண்டு ஆசிரிய வளங்கள் உள்ளிட்ட பல விடயங்களில் கரிசனை செலுத்தியமை இங்கு சுட்டிக் காட்ட வேண்டிய விடயமாகும்.

இதேவேளை இந்தப் பாடசாலைகள் இரண்டிலும் இருந்த அதிபர்கள், அதிபர் தரம் பெற்றவர்கள். யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஏழு பாடசாலைகளில் அதிபர்கள் இல்லை. சிரேஷ்ட ஆசிரியர்களும், திணைக்களத்தால் நியமிக்கப்பட்டவர்களுமே தற்காலிகமாகக் கடமையாற்றுகின்றனர். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.- என்றுள்ளது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரித்தானிய உயர் தேசிய டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புகள்

- **BM** – Business Management
- **CSD** – Computing & Systems Development
- **CE** – Civil Engineering
- **QS** – Quantity Surveying
- **BMS** – Biomedical Science
- **LLB** – Law

RECOGNIZED UGC RECOGNIZED

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

# MBA

UGC இனால் அங்கீகரிக்கப்பட்டது

**12 months British MBA**

- Expert British Lecturers*
- Convenient Study Mode
- Easy payment plan
- Highly Reputed & Affordable

தற்போது யாழ்ப்பாணத்தில்

## February 2016 INTAKE NOW ON

Introductory Rs. 30,000/- Discount
REGISTER BEFORE 10th January 2016

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

16, Point Pedro Road,
Jaffna, Sri Lanka.
Tel : 021 221 9910

For Details 077 710 2131

16 YEARS

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector) - Survey by LMD


COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சிக்குப் பதிலாக புதிய கட்சி ஒன்று வேண்டும்

### *கூறுகிறார் கோத்தபாய*

கொழும்பு, ஜன. 11
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப்பதிலாகபுதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக வேண்டியதன் தேவை காணப்படுவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



மகிந்த தலைமையில் புதிய கட்சி உருவாக்கப்படவுள்ளதாக தென்னிலங்கை அரசியலில் பேசப்பட்டு வரும் நிலையிலேயே, கோத்தபாய ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசு மக்களுக்கோ நாட்டுக்கோ ஒன்றும் செய்யவில்லை. பொலிஸ் இராஜ்ஜியம் ஒன்றையே உருவாக்கி வருகின்றது.

அரசியல் தேவைக்காகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர். இந்த அரசு குற்றச் செயல்களைக் கண்டுபிடிப்பதை விடவும், அரசியல் பழிவாங்கல்களில் தீவிரம் காட்டி வருகின்றது. மக்களின் கட்சியொன்று உருவாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கண்டி விகாரையொன்றுக்குப் பயணம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, புதியதொரு அரசியல் கட்சி ஒன்று உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# சிற்றுண்டிகளின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்

கொழும்பு, ஜன.11
வரவு-செலவுத் திட்டம் கடந்த முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தவாரம் முதல் மதிய உணவு பக்கட் ஒன்று 30 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. சிற்றுண்டிகளின் விலைகள் 5 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளன எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பேக்கரி உரிமையாளர்கள் தமது தயாரிப்புக்களின் விலைகளை அதிகரித்துள்ளனர். வரவு-செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வரி அதிகரிப்புக்களே இதற்கான காரணம் என்று பேக்கரி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. வரவு - செலவுத்திட்ட யோசனையின்படி தேசிய நிர்மாணவரி 2 வீதத்தில் இருந்து மேலும் 2 வீதம் என்ற அடிப்படையில் 4 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் தாம் நிதியமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன, நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க அமைச்சர் உறுதியளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நிவாரணம் தரப்படும் வரை பாவனையாளர்களுக்கு அதன் நன்மையை தரமுடியாமல் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# ரயில் வரும்போது தண்டவாளத்தைக் கடந்த சாரதிக்கு அபராதம்

சாவகச்சேரி,ஜன.11
பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயில் வருவதற்கான அபாய ஒலி எழுப்பப்பட்ட நிலையில், தண்டவாளத்தைக் கடந்த ஓட்டோ சாரதிக்கும், பாதசாரிகள் கடவையில் வாகனங்களை நிறுத்திய இரு சாரதிகளுக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 7 ஆம் திகதி அபராதம் விதிக் கப்பட்டது.

பாதுகாப்பற்ற ரயில் கடவையில், அபாய விளக்கும், அபாய ஒலியும் எழுப்பப்பட்ட பின்னர் ஓட்டோவுடன் தண்டவாளத்தைக் கடந்த வேளையில் பொலிஸாரிடம் அகப்பட்ட சாரதியை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான், அபாய ஒலியை மதிக்கத் தவறிய குற்றத்துக்காகவும், ஓட்டோ செலுத்திய வேளையில் சாரத்திய அனுமதிப்பத்திரமில்லாததாலும் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை பாதசாரிகள் கடவையில் ( மஞ்சள் கோட்டில் ) மோட்டார் சைக்கிள்களை நிறுத்தியிருந்த இரு சாரதிகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

அத்துடன் மதுபோதையில் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 13 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# குடிதண்ணீர்க்கிணறு விசமிகளால் நாசம்

சாவகச்சேரி, ஜன.11
மட்டுவில் தெற்குப் பிரிவில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தும் கிணற்றைப் பாவிக்க முடியாத அளவுக்கு இனந்தெரியாதோர் அசிங்கப்படுத்தியுள்ளனர். இதனால் இந்தக் கிணற்றில் குடி தண்ணீர் பெற்ற குடும்பங்கள் பல மைல்கள் தூரம் தண்ணீருக்காகச் செல்லவேண்டியுள்ளது.

மட்டுவில் தெற்குப் பகுதியில் பல கிணறுகள் காணப்பட்ட போதிலும், ஒரு சில கிணறுகளே குடிநீருக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில் ஆலயத்துக்குச் சொந்தமான நெணியன் வெளியில் உள்ள கிணற்றைத் துப்புரவு செய்து குடி தண்ணீர் பெற்று வருகின்றனர். கடந்த முதலாம் திகதி இந்தக் கிணற்றில் குடி தண்ணீர் பெற முடியாதபடி இனந்தெரியாதோர் அசிங்கப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் கிணற்றில் குடி தண்ணீர் பெற்ற குடும்பங்கள் தாம் தண்ணீருக்காக தூர இடங்களுக்குச் செல்வதாகத் தெரிவித்துள்ளன. (ற-ஐ-9)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ் நகர எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 608 4116

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
10.01.2016 | 1927 | ஊதா
கடகம்
09 26 44 56
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,370,800/-
1919 இந்த அழைப்பு
அழைப்பு இல. 1919

Galaxy Star
வெற்றி வாரம் 024
திகதி 10.01.2016
01 14 22 44 50
அடுத்த புதன் கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000, 000/-

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 16.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில்
தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
16.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும்.ஒரு பிரிவில் 20 போர் மட்டுமே!
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# நவமணி அலுவலகம் விஷமிகளால் உடைப்பு

கொழும்பு, ஜன.11
களுபோவில, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள நவமணி அலுவலகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது. இது குறித்து கொஹுவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

சனிக்கிழமை விடுமுறை என்பதனால் அலுவலகம் மூடப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இதன்போது, இனந்தெரியதோர் சி.சி.ரி.வி.யின் இணைப்பைத்துண்டித்துவிட்டு, அலுவலகத்தின் பூட்டை உடைப்பதற்கு முயற்சித்துள்ளனர். பூட்டு வலுவாக இருந்த காரணத்தினால் முயற்சியை கைவிட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த கும்பலில் ஒருவர் முகத்தை மூடிக்கொண்டு சி.சி.ரி.வி.யின் இணைப்பை துண்டித்துள்ளதால் அவர் யாரென்பதை அடையாளம் காணமுடியவில்லை. அத்துடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் 4ஆம் திகதி இரவு நேரத்தில் நவமணி அலுவலகத்துக்கு மர்மநபர்கள் இருவர் ஆயுதங்களுடன் வந்து சி.சி.ரி.வி. கமெராவுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டிவிட்டு சென்றனர். அத்துடன், 2002ஆம் ஆண்டு இனந்தெரியாத விஷமிகளால் நவமணி அலுவலகம் முற்றாக தீவைக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இனவாத பரப்புரைகளுக்கு எதிராக நவமணி அடிக்கடி பல செய்திகளை வெளியிட்டு வருகின்ற நிலையிலேயே நேற்று முன்தினமிரவு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

# 24 மணித்தியாலத்தில் 3,200 முறைப்பாடுகள்

### *ஜனாதிபதியிடம் தெரிவிக்க சேவையில்*

யாழ்ப்பாணம், ஜன.11
பொதுமக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாகச் சமர்ப்பிக்க முடியுமான, ஜனாதிபதியிடம் தெரிவிக்க, எனும் விசேட சேவை கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களில் 3,200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

1919 அவசர இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது தபால் பெட்டி இலக்கம் 123 எனும் முகவரி மூலம் அஞ்சல் வழியாக, பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்ய முடியும்.

அத்துடன் www.tell.president.gov.lk மற்றும் www.president.gov.lk எனும் இணையத்தளங்களின் ஊடாகவும் மற்றும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ முகநூல் கணக்கிற்கு தனிப்பட்ட செய்தியை வழங்கு வதன் ஊடாகவும் பிரச்சினைகளைச் சமர்ப்பிக்க முடியும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண் பொலிஸுக்கு எதிராக முறைப்பாடு

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடக்கு கிளைக் காரியாலயத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.11

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் வடமாகாண கிளைக் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, புலோலி மேற்குப் பகுதியைச்சேர்ந்த அருளானந்தம் செந்தூரன் என்ற நபரே இந்த முறைப் பாட்டைத் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு செய்த நபருக்கும், மனைவிக்கும் இடையில் குடும்பப் பிரச்சினை ஒன்று இருந்து வந்துள்ளது. இது தொடர்பில் இந்த நபரின் மனைவி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட பெண்பொலிஸ் உத்தியோகத்தர் ஒழுங்கான முறையில் விசாரணைகளை மேற்கொள்ளாது, அடிக்கடி பொலிஸ் நிலையம் வரவழைத்துக்காரணம் எதுவும் இன்றி விளக்கமறியலில் வைத்தார் என்று செந்தூரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விசாரணை இன்றித் தன்னை மறுநாள் விளக்கமறியலில் இருந்து விடுவித்தார் என்றும், பொலிஸ் உத்தியோகத்தர் தனது மனைவிக்குச் சாதகமாக நடந்து கொண்டு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றும் அவர் முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

இது தொடர்பில் காங்கேசன் துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-ஜ-107)

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோருக்கு நினைவேந்தல்

## நேற்று முற்றவெளியில் நடைபெற்றது

கொழும்புத்துறை ஜன.11

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இடம் பெற்ற இனவாதத் தாக்குதலில் உயிரிழந்த 9 பொது மக்களின் 43 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றுக்காலை யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள நினைவிடத்தில் நடைபெற்றன.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நினைவுச் சுடரேற்றல், அகவணக்கம், மலரஞ்சலி என்பன இடம் பெற்றன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அதில் கலந்து கொண்டு சிறப்பு நினைவுரை ஆற்றினார்.

அதன்போது அவர் தெரிவித்ததாவது-

தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழினத்தின் கலை கலாசாரத்தையும் பாதுகாக்கவும் உலகறியவும் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் உயர்வை பொறுத்துக்கொள்ள முடியாது. இனவாதிகளாலும் அடிவருடிகளாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது பொலிஸார் மின்சார வயர்களை துப்பாக்கியால் சுட்டு நிகழ்வை குழப்பினர்.

இதன் போது சிதறி ஓடிய பல்லாயிரம் மக்களில் 9 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த துயர நாள் இன்றாகும். இதே போன்று பொது நூலக எரிப்பு உட்பட 100 க்கு மேற்பட்ட தமிழ் மொழி அழிப்பு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றின் ஆழமான பாதிப்பும் இன எழுச்சியுமே ஆயுதப் போராட்டமாக மாறியது. பல லட்சம் உயிர்களும் உடைமைகளும் காவு கொள்ளப் பட்டன.

இன விடுதலைக்கு எழுச்சிக்கரு ஊட்டிய இந்த 9 தியாகிகளும் என்றும் நினைவு கூரப் பட வேண்டியவர்கள். இந்த வரலாறுகளைச் சுமந்து சென்று விடுதலைப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும்.எமது தேசத்தில் தமிழரின் ஆட்சியை நிலை நாட்ட இவர்களை அத்திபாரமாகக் கொண்டு விடுதலை இலக்கை அடைய ஓர் அணியில் அனைவரும் உழைப்பதே காலத்தின் தேவையாகும்.- என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், கஜதீபன், பரஞ்சோதி, அருட்தந்தை சி.ம.ஜெயசீலன் அடிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் மற்றும் வே.கனகசபாபதி முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், சாவடைந்தோரின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ற-ஜ-135)

# கொள்ளைக் குற்றச்சாட்டில் கைதான நிசாந்தனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிசாந்தன், சாட்சிகளால் நீதிமன்றில் வைத்து அடையாளம் காணப்பட்டுள்ளார். அதனால் அவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி அவர் வேறு பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார் எனவும் பொலிஸார் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

தமிழர் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பின் தலைவர் என்று கூறப்பட்டவரும், யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான சுவீகரன் நிசாந்தன் பல கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த மாதம் 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

யாழ்.சோமசுந்தரம் அவனியூவைச் சேர்ந்த நிசாந்தன் யாழ்.பிறவுண் வீதியிலுள்ள அழகு நிலையம் ஒன்றில் 2014 ஆம் ஆண்டு கொள்ளையடித்துள்ளார் என்று கடந்த ஜனவரி மாதம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், திருட்டுடன் தொடர்புடையவர் என்ற ஆதாரங்களையும் கொண்டு திருட்டில் ஈடுபட்டார் என்ற அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் வேண்டுகோளின் பேரில் அவர் யாழ்.நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார். அதன்போது அடையாளம் காட்டுவதற்காக 3 சாட்சிகள் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றுக்குச் சென்றிருந்தனர். அங்கு இடம் பெற்ற அடையாள அணிவகுப்பிலேயே நிசாந்தன் அடையாளம் காட்டப்பட்டார். அதையடுத்து அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.(ற-ஜ-4,103)

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.11

பாடசாலை செல்லும், 14 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்திய கற்கோவளம் புனித நகர்ப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பொ.சுப்பிரமணியம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

அத்துடன் பொலிஸாரால் மீட்கப்பட்ட அந்தச் சிறுமியை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்து சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனும், 14 வயது சிறுமியும், நீண்ட நாள்களாக ஒருவரை ஒருவர் காதலித்து வந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி, இருவரும் வீட்டை விட்டு ஓடிச்சென்று திருமணம் செய்தனர். இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்து கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இவர்கள் இருவரும் ஏழாலைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். கைதான இருவரிடமும் மேற்கொண்ட விசாரணையில், ஓடிப்போய் தாம் முதலில் மூர்க்கம் பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் ஒளித்து இருந்ததாகவும், பின்னர் ஏழாலையில் உள்ள சித்தியின் வீட்டில் இருந்ததாகவும் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

கைதான இருவரையும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான், இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், சிறுமியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ற-ஜ-107)

# சிறுமியைத்தாக்கிய குடும்பப் பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜன.11

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிப் பகுதியில் சிறுமி ஒருவரைத்தாக்கிக்காயப்படுத்திய அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சிறுமிக்கும், குறித்த பெண்ணுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இடம் பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண் கடந்த 7ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்து விட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார். குறித்த பெண்ணை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்திருந்தனர். (ற-ஜ-107)

# பொங்கல் விழாவை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.11

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழாவை முன்னிட்டு மாபெரும் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் எதிர்வரும் 13,14 ஆம் திகதி தாச்சிச் சுற்றுப்போட்டியும், ஏனைய போட்டிகள் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மேலும் 15 ஆம் திகதி பொங்கலன்று காலை 8.30 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்கு அருகில் உள்ள பட்ட மேற்றும் திடலில் பட்டம் ஏற்றும் போட்டியும் நடை பெறவுள்ளது. (ற-ஜ)

# குப்பையிலிருந்து வெடித்த குண்டு வங்கிக் காவலாளி முதுகில் காயம்

முல்லைத்தீவு,ஜன.11

முள்ளிவாய்க்காலில் எரிந்து கொண்டிருந்த குப்பைக்குள் இருந்து குண்டு வெடித்ததில் 52 வயதுடைய வங்கிக் காவலாளி காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் பகுதியில் குப்பைகளுக்குத் தீ மூட்டிய போது அந்தக் குண்டு வெடித்துள்ளது.

அதில் முல்லைத்தீவில் உள்ள வங்கி ஒன்றின் காவலாளியான தம்பையா சிறீகாந்தா (வயது 52) என்பவரே முதுகுப்பகுதியில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-ரி7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகள் தொடர்பில் பலர் விரைவில் கைது!

கொழும்பு, ஜன.11

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய படுகொலைகள் மற்றும் பெரும் நிதி மோசடிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்றும் ,இந்தக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அரச அதிகாரிகள் பலரும் வெகு விரைவில் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட மற்றும் றக்பி வீரர் வசிம் தாஜுதீன் போன்றோரின் படுகொலை தொடர்பான விசாரணைகளில் பெரும்பகுதி நிறைவடைந்துள்ளன என்றும், அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளையும் மற்றும் பாதுகாப்புப்பிரிவு அதிகாரிகளையும் கைது செய்வதற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்க ப்படுகின்றது.

> கொலைகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளையும் மற்றும் பாதுகாப்புப்பிரிவு அதிகாரிகளையும் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று பெரும் நிதி மோசடி செய்து பில்லியன் கணக்கான ரூபாவை வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிட்டுள்ள அரசியல்வாதிகள் மற்றும் சக அதிகாரிகள் தொடர்பான விசாரணைகள் பலவும் நிறைவடைந்துள்ளன என்றும் அவர்களும் விரைவில் கைதுசெய்யப்படவுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில்சம்பவங்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் எனப்பலரும் நாட்டின் பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எது எவ்வாறிருப்பினும், அச்சமின்றி அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றுஅமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ற)

# சு.க. தலைமையைப் பிடிக்க மகிந்த இரகசிய முயற்சி!

கொழும்பு, ஜன.11

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றும் இரகசிய முயற்சி ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஈடுபட்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



சுதந்திரக் கட்சியின் யாப்பில் திருத்தங்களைச் செய்து, அதன் தலைமைப் பதவியைக் கைப்பற்றும் முயற்சியிலேயே மகிந்த ராஜபக்ச ஈடுபட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. அதற்காக, கட்சியின் மத்திய செயற்குழுவின் ஆதரவைப் பெறுவதற் காக, சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்சவின் இந்த முயற்சிக்குப் பெரும்பாலான சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர் என்று கூட்டு எதிரணியின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்படும் கட்சிக்கு மகிந்த தலைமையேற்க வேண்டும் என்று, சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால் சுதந்திரக் கட்சியை விட்டு தாம் வெளியேறி புதிய கட்சியில் சேருவது முட்டாள்த[illegible]மானது என்றும், அதற்குப் பதிலாக சுதந்திரக் கட்சியின் தலைமையை மீளவும் கைப்பற்ற வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# எம்பிலிப்பிட்டிய சம்பவம் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜன.11

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று கூறப்படும் இளைஞனின் சாவு தொடர்பான அறிக்கையைச்சமர்ப்பிக்குமாறு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இளைஞனின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெறவிருந்த நிலையில், பூதவுடலை எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று ஆர்ப்பாட்டம்நடத்தபிரதேசமக்கள் திட்டமிட்டிருந்தனர்.

இந்தநிலையில், இவ்வாறான விடயங்களைத்தவிர்க்குமாறும், இறுதிச் சடங்கின்போது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காதவாறு செயற்படுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அண்மையில் எம்பிலிப்பிட்டிய புதியநகர் பிரதேசத்தில் விருந்துபசார நிகழ்வு இடம்பெற்ற வீடொன்றில், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 29 வயதான சுமித் பிரசன்ன என்பவர் படுகாயமடைந்து கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள்குறிப்பிட்ட பிரதேசத்தில் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, கறுப்புக்கொடி கட்டி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

விருந்துபசாரம் நடைபெற்ற வீட்டுக்குச்சென்ற பொலிஸார், மதுபானம் கோரினர் என்றும் இதனால் ஏற் பட்ட வாய்த் தர்க்கம் மோதலாகி மாடியிலிருந்து ஒருவரைப்பொலிஸார் தள்ளிவிட்டனர் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ள நிலையில், பொலிஸார் இதனை மறுத்துள்ளனர். சம்பவம்தொடர்பில் தீவிர விசாரணை நடைபெற்றுவருகின்றது. (ற)

# வாக்குறுதி மீறப்பட்டால் போராட்டம் நடத்தப்படும்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.11

எதிர்வரும் ஒரு வார காலத்திற்குள் தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பு மற்றும் அரச சேவையாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் ஆகிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கநடவடிக்கைகள்முன்னெடுக்கப்படும் என்று அரசுக்குத் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக தற்போது கையொப்பம் திரட்டும் நடவடிக்கையும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுதந்த வறம் திறைசேரியின் செயலாளர் ஆர்.எச். எஸ்.சமரதுங்க மற்றும் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரைச்சந்தித்த தொழிற்சங்கபிரதிநிதிகள், தமது கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது தனியார் துறையினருக்கான இரண்டாயிரத்து ஐநூறு ரூபா சம்பள அதிகரிப்பு மற்றும் அரச பணியாளர்களின் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவில், முதற்கட்டமாக இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை அதிகரிப்பதற்கான சுற்றுநிருபங்கள் இந்தவாரம் சகல நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று அகில இலங்கை நிறைவேற்று அதிகாரிகள் சங்கத் தலைவர் நிமல கன்னங்கர தெரிவித்துள்ளார். (ற)

31ஆம் நாள் நினைவஞ்சலி



இவ்வுலகில்
16.10.1952

இறையுலகில்
12.12.2015

அமரர் இளையதம்பி பாலசிங்கம்
(புலவணை கிழக்கு)

அன்பின் திருவுருவாய் அகத்தின் ஒளிவிளக்காய்
மங்காத பாசத்தோடு எம்மைப்பேணி வளர்த்த அப்பாவே !
முகம் தேடி ஆசைமொழி கூறி நல்வழிகாட்டி
வளமாக நாங்கள் வாழ வழிவகுத்த அப்பாவே !
நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கையிலே
நீங்கள் மட்டும் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள் – அப்பா
அப்பா நீங்கள் அம்மா என்று எங்களை அழைப்பது
இன்னும் எங்கள் காதுகளில் ஒலிக்கிறதே அப்பாவே
உங்கள் நினைவுகள் என்றென்றும் எங்களை விட்டு அகலாது..,
உங்கள் ஆத்மா சாந்திபெற பெருங்குளத்து அன்னையை
இறைஞ்சுகின்றோம்

இல.535/09, FSD ஒழுங்கை,
மன்னார் வீதி, வேப்பங்குளம்,
வவுனியா.

உங்கள் நினைவுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் மாடுகள் வெட்ட உரிய கொல்களம் இல்லை

## நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.11

வடமராட்சியில் மாடுகளை வெட்டுவதற்கான கொல்களங்கள் உரிய முறையில் இயங்கவில்லை. அதனால் அங்கு சுகாதார சீர்கேடாகவும் சட்டவிரோதமாகவும் மாடுகள் வெட்டப்பட்டே பொதுமக்களுக்கு அவை விற்பனை செய்யப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

எனவே இவற்றைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சுகாதாரத் துறையினருக்கும், பிரதேச சபையினருக்கும் உண்டு. தவிர, சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டிய, கட்டுப்படுத்த பொலிஸாரோ உரிய நடவடிக்கை எடுக்காது சட்டவிரோத செயற்பாட்டுக்கு உடந்தையாக அல்லது கண்டும் காணாதது போல்உள்ளனர்என்றும்தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள மயானங்களை அண்மித்தும் மற்றும் சில இடங்களிலும் வெட்டப்பட்ட கால்நடைகளின் எலும்புகள், தோல்கள் வீசப்பட்டு வருகின்றன என்று அதனைக் காண்பவர்கள் சுகாதாரத் துறையினருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமாகக் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அதிகாரிகளின் செயற்பாடு அமைவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சில இடங்களில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதி இல்லாமல், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தினந்தோறும் பல மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறைப் பிரதேச சபை பகுதிகளில் மாடுகளை இறைச்சியாக்குவதற்கான அனுமதி வழங்குவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள ஞானசாரியார் பகுதியில் உள்ள இறைச்சியடிக்கும் கொல்களம் போதிய வசதி அற்றுக் காணப்படுகின்றது. ஆனால் வடமராட்சிப் பகுதியில் தற்போதுள்ள ஒரே இடம் ஞானசாரியார் கொல்களம் ஒன்று தான் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கே இறைச்சியாக்கப்படுவதற்குப் பொதுச் சுகாதார பரிசோதகர் அனுமதி வழங்குகின்றார்.

இந்த நிலையில், இதனையும் மீறி துன்னாலைப் பகுதிகளை அண்டிய காடுகளில் திருட்டு மாடுகள் இறைச்சியாக்கப்பட்டும் வருகின்றன. இந்தச் செயற்பாட்டைப் பொலிஸார் ஓரளவு கட்டுப்படுத்த முயன்றாலும், சில உயர் அதிகாரிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த வருடம் வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை பிரதேசசபை இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி கோரலின் விலையை சபைகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அதனால் இறைச்சி வியாபாரிகள் சபைகளின் கீழ் நிர்வகிப்பில் இருந்த கடைகளைக் கொள்வனவு செய்யவில்லை என்றும் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

இந்த நிலையில், பருத்தித்துறை,வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள உணவகங்களுக்கு திருட்டு மாடுகளின் இறைச்சிகள் விநியோகம் தாராளமாக இடம்பெற ஒருவகையில் சபைகளும் காரணம் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது.

கரவெட்டி பிரதேச சபையின் கீழ் உள்ள ஞானசாரியார் கொல்களத்தில் கடந்த வருடம் ஆயிரத்து 100 மாடுகள் இறைச்சியாக்கப்பட்டுள்ளன.

கரவெட்டிப் பிரதேச சபையில் உள்ள கடைகள், உணவகங்கள் மற்றும் இறைச்சி கடைகளுக்குப் போதிய இறைச்சி வழங்க முடியாமல் உள்ள நிலையில், நாள் ஒன்றுக்கு 3 மாடுகள் வெட்ட அனுமதிக்கப்படும் நிலையில், ஏனைய பிரதேசங்களுக்கு இறைச்சி விநியோகம் செய்யப் போதுமானதாக உள்ளதா? எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பொலிஸார் இணைந்து விரைவில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சார்பில் கோரப்பட்டுள்ளது.

(ற-ஐ-4,107)

## விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையம் நீர்வேலியில்



யாழ்ப்பாணம், ஜன.11

நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட விதை அத்தாட்சிப் படுத்தும் பிராந்திய சேவை நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விரைவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

மத்திய விவசாய அமைச்சால் ஒதுக்கப்பட்ட 35 மில்லியன்ரூபாசெலவில்நவீன வசதிகளைக் கொண்ட கட்டடம் அமைக்கப்பட்டதாக பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை நிலையப் பொறுப்பதிகாரி அ.ரமணிதரன் தெரிவித்தார்.

இந்த விதை அத்தாட்சிப் படுத்தும் சேவை நிலையம் 2006 ஆம் ஆண்டில் இருந்து திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் கட்டடத்தில் ஒரு பகுதியில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது.

இதே சமயம் புதிய கட்டடம் திறந்து வைப்பதற்கான ஜனாதிபதியின் வருகைக்காகவும், நீர்வேலி பூதர் மடம் சந்தியில் இருந்து கட்டடத்துக்கு செல்லும் 300 மீற்றர் நீளம் கொண்ட வீதியை உடன் புனரமைப்பதற்கும் வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் வீதியோரம் காணப்படும் பற்றைச்செடிகளும் பிடுங்கித் துப்புரவு செய்யும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ற-ஐ-17)

## வட்டு. இந்து வாலிபர் சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வலி.வடக்கு, ஜன.11

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தாய், தந்தையை இழந்த பிள்ளைகள், வயதான பெற்றோரின் பிள்ளைகள் மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் என சுமார் 30 பாடசாலை மாணவர்கள் கஷ்டமான பல சூழல் நிலைகளால் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் காணப்பட்டனர்.

அவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு மிகப் பிரதான தடையாகக் காணப்படும் கற்றல் உபகரணங்களைத் தந்துதவுமாறு வேலணைப் பிரதேச செயலகத்தால் வட்டு. இந்து வாலிபர் சங்கத்திடம் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கு அமைவாக நேற்று வேலணைப் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் முன்னிலையில், வட்டு. இந்து



வாலிபர் சங்கத்தால் சுமார் 31 ஆயிரத்து 875 ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பேனாக்கள் என்பன 30 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

(ற-ஐ-86)



ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஜனாதிபதி பதவியேற்று ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை மரம் நாட்டு விழா ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.குணபாலன் தலை மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருமதி செ.அனுசியா மற்றும் கிராம அபி ருத்தி சங்கத்தலைவர் கு.சண்முகலிங்கம் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு மரங்களை நட்டனர். (ற-ஐ-402)

## ஆடுகள் திருட்டு

சாவகச்சேரி,ஜன. 11

சாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் வளவினுள் கட்டப்பட்டிருந்த ஆடும் ஒரு மாதம் நிறைந்த இரு குட்டிகளும் ஓட்டோவில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆடு ஒரு மாதத்துக்கு முன்னர் இரு குட்டிகளை ஈன்றதெனவும், வளவினுள் கட்டப்பட்டிருந்த ஆடுகளை நள்ளிரவு வேளையில் ஓட்டோவில் வந்தவர்கள் அபகரித்துச் சென்றுள்ளனரெனவும் ஆட்டின் உரிமையாளர் தெரிவித்தார். இந்தத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-9)



## தொழில்நுட்ப பீடம் மன்னாரில் திறப்பு

மன்னார், ஜன.11

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்பபீடம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கூடம் என்பவற்றை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் இடை நிலைப் பாடசாலைகளை மீளமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்பகூடம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கூடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

திறப்புவிழா நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா மற்றும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்தியான், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் எச்.எம்.ரயிஸ், இணைப்பாளர் எம்.சாதீக் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்பபீடம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கூடம் ஆகியவற்றை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட முதலமைச்சர் மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார். (ற-ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IDM** Nations Campus

## BE READY TO MAKE A DIFFERENCE WITH HIGHLY TRUSTED IDM DIPLOMAS ACCEPTED LOCALLY AND INTERNATIONALLY FOR THE PAST 30 YEARS

### IDM INTERNATIONAL DIPLOMA IN

- Computing
- Business Management
- Hardware & Computer Network Technology
- Web Engineering
- Law

### IDM DIPLOMA IN

- AutoCAD
- Graphic Designing
- Multimedia
- Computer Application (Ms Office - ICDL)
- Computerized Accounting Packages

HOT LINE 0774419901

Our International Affiliations: ncc, bucks, edexcel, Charles Sturt University, Open University Malaysia, BIT, bcs

IDM Nations Campus இன் யாழ் குடாநாட்டிற்கான கிளை தலைமையகத்தின்கீழ் பின்வரும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

## IDM NATIONS CAMPUS

#216, Nawalar Road, Jaffna | Tel: 021 222 9901
E-mail: jaffna@idmedu.lk | www.idmedu.lk

---

## பதவி உயர்வுக்கும் சம்பள உயர்வுக்குமான கல்வி அமைச்சின் அனுமதியுடனான UGC அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்

| Course | Entry Qualification | Duration |
|---|---|---|
| Degree in Physical Education and Sports | 2 Years Diploma in University | 2-3 Years |

**North Lanka IIT**

Peoples Bank Building, Top Floor, Stanly Road, Jaffna.

Contact: 0777592666, 0769440075

---

வவுனியா நகரில்

கல்வியுலகின் புதிய சகாப்தம்

## EDI Educational Development Institute

கவிஞர் பம்பிகோஸ் கிருகலை முரண்கம்போல் சந்தி பண்டாரிகுளம் T.P : 076 - 8078451

### A/L - 2018 கணித விஞ்ஞானப் பிரிவு

| பௌதிகவியல் | இரசாயனவியல் | உயிரியல் | இணைகணிதம் |
|---|---|---|---|
| திரு.A.இந்திரலிங்கம் (Msc), திரு.எஸ்.தவபாலன் (Bsc) | திரு.A.S.பரந்தாமன் (Bsc) | 25 வருட கால அனுபவமுள்ள ஆசிரியர் | திரு.N.சதீஸ் (Bsc) |

கட்டுப்படுத்தப்பட்ட 20 மாணவர்களைக் கொண்ட ஒரு பிரிவு மாத்திரமே இவ்வாண்டு நடைபெறும் ஆரம்பம் 10.01.2016 - காலை 9.00

### A/L - 2018 தொழில்நுட்பப் பிரிவு

SFT BST — திரு.எஸ்.தவபாலன்(Bsc)
IT — திரு.பாலகலைஞன்(Bsc)

கணனி மூலமாக செய்முறை வகுப்புக்களின் விபரணத்துடன்

தொழில்நுட்பப் பிரிவு 2016, 2017 மீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 10.01.2016 - மாலை 3.00

### A/L - 2018 கலைப்பிரிவு -01

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் | வரலாறு |
|---|---|---|---|
| திரு.சிவகஜன் (MA) | பண்டிதர் வீ.பிரதீபன் | திரு.S.T.சிவா(BA) | திரு.P.கெங்கன்(BA) |

### A/L - 2018 கலைப்பிரிவு -02

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் |
|---|---|---|
| திரு.M.ரதிக்குமார் SplTrd (Hin) | திரு.A. ரஞ்சன் MA,M(Phil) | திரு.V.R.ஜெயந்தன் SplTrd(Geo) |

### A/L - 2018 வர்த்தகப்பிரிவு

| வணிகக்கல்வி | கணக்கீடு | பொருளியல் |
|---|---|---|
| திரு.P.றெஜி | திரு.S.சிவகுமார், திரு.P.தர்மேந்திரா | திரு.A.சுதாகரன் |

கலைப்பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவில் ஒவ்வொரு ஆசிரியரின் வகுப்புக்களும் 15 மாணவர்களை மட்டும் கொண்ட குழு வகுப்பாக நடைபெறும். A/L 2017, 2016 பிரிவுகளுக்கானமீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 12.01.16 மாலை 3.00

### EDI உயர்தரப் பிரிவின் தனித்துவம்

- இறுக்கமான கட்டுக்கோப்புடைய நிர்வாக ஒழுங்கமைப்பு.
- எந்தவொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- கணணி மூலம் செய்முறைப் பாடங்களின் விபரணம்.
- அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களின் இணைவில் பல்கலைக்கழகம் செல்வதற்கான வழிகாட்டல்.

மாணவர்களே,
உங்கள் கல்வி நிலையை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்று பல்கலைக்கழகத்திற்கு தேர்வு பெற்றிட உங்கள் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்

M.R.Bala-Kannathasan (நிர்வாகி) T.P : 076 - 8078451

---

# UK STUDENT VISA

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் UK கனவை நனவாக்கினோம்

**UGC APPROVED DEGREE**

**INFORMATION TECHNOLOGY**
Software Engineering, Computer Science, Multimedia

**MANAGEMENT**
Accounting & Finance, Business & Management, Professional Development, Economics

**ENGINEERING**
Civil, Architecture & Constrction, Electrical, Mechanical

**SCIENCE**
Biomedical, Biosciences, Forensic, Pharmaceutical

Law, Statistics

கடந்த 15 வருடமாக இலங்கை மாணவர்களுக்கு விசாவினை பெற்றுக்கொடுப்பதில் முன்னோடியான நிறுவனம்.

சரியான ஆவணங்கள் சமர்பிக்கப்படின் குறுகிய காலத்தில் UK பயணிக்க முடியும்.

இலவச ஆலோசனை யாழ். கிளை வாரநாள் 9 - 5 மணிவரை வார இறுதி 9 - 2 வரை

## STUDY IN LATVIA WITH WORK PERMISSION (EUROPE)

யாழ். மாணவர்களே! அரிய சந்தர்ப்பம்

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Sehengen Visa (26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்)

**021 7538395** | **IELTS** கற்கைநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது

EXPONET Overseas Consultants www.expogroup.lk

No. 136, palali road, Jaffna.
021 7538395 | 071 4150995
Email: expojaffna@yahoo.com

No. 379-1/2 Galle Road, Col -06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**

# யாழ். கலாலயா
பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016**
**திங்கள் காலை 9.30 மணி**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)







மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

# LAKELAND INTER - AMERICAN SCHOOL
## ADMISSION FOR MONTESSORI



முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:-
- Dr.Maria Montessori இன் எண்ணக் கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
- இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
- மழலைகள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுதிறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் புத்திசாதுரியமாக வெளிக்கொணர்தல்.
- பாலர் முன்பள்ளியில் கல்வியிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் தமது ஆற்றல்களை பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைந்து, அறிவை பெருக்குதல்.
- பிள்ளைகளுக்குப் புத்திக்கூர்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, கடமையுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் புகட்டுதல்.

எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.

உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter-American School. விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு.

வயதெல்லை 2½ - 5½.

விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு
பதிவு கட்டணங்களுக்கு 50% கழிவு

இச்சலுகை ஜனவரி 31 வரை மட்டுமே
(மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் மாத்திரம்)

~~20000/=~~ Now 10000/=

**தொடர்புகளுக்கு:**
No-154, Brown Road, Jaffna.
T.P No : 021 222 6242 acrolankajaf@gmail.com

**ICT AL2016, 17,18 OL16**
**ICT Grade 1 to 10**
**Maths Eng Sci Grade 1 to 9**
**Chess, Scrabble,**
தனிப்பட்ட கவனிப்பு. மாதாந்த பரீட்சைகள்
சிறந்த பெறுபேற்றுக்கான உத்தரவாதம்.
அரச NVQ , மற்றும் சர்வதேச CIsco, Oracle, Microsoft நிறுவனங்களின் சான்றிதழ்கள்.

## புலமைப்பரிசிலிற்கான வினா?
ஒரு கிலோ பைற்(byte) எத்தனை பிற்(bit)?
a. 1000 b.1024 <Name>Ans<DOB><Grade>
0772395895 ற்கு sms செய்து கற்கைநெறிக்கான பதிவுக்கட்டணத்தை வெல்லுங்கள்


# MCS IT CAMPUS
யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்

**Prepared under**
**Hygienic method Specially for physicians and domestic purposes**

750 ml

**IMPROVED FORMULA PURITY GUARANTEED**

# V.S.P
# SPECIAL LUNCH OIL



**Special V.S.P Gingelly Oil**

சுகாதார முறையில் உணவிற்கும், வைத்தியத்திற்கும், விஷேடமாகத் தயாரிக்கப்பட்டது.

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135/9165

உரிமையாளர் : திரு.பொ.பாஸ்கரன்
சுத்தமான வி.எஸ்.பி நல்லெண்ணெய்

## B.B.C யின் புதிய கிளைகள் ஆரம்பம்

British BUSINESS COLLEGE
Where Students Come First

K.K.S. வீதியில், சுன்னாகத்திலும்,
பருத்தித்துறை வீதியில்,
நீர்வேலியிலும்...



## தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC 14 வது வருடத்தில்

**பாலர் பாடசாலை பிரிவுகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

**கற்பித்தல் மொழி**
ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

**சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்**
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

- Sports Meet
- முத்தமிழ் விழா
- Carols
- English Day Concert
- Art & Craft Exhibition
- Pre School Graduation

**பாட விதானமும் கற்பித்தல் முறையும்**
NEW SYLLABUS
- Dr. Maria Montessori Method
- Canadian ECE Method
- German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்**
- கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
- யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
- எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்**
- Percussion Band , Meditation, Speech, Dance & Drama (In English & Tamil)
- குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

**BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்**

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் ([illegible]) | பருத்தித்துறை வீதி நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை [illegible] | பருத்தித்துறை வீதி, புத்தூர் [illegible] |

British BUSINESS COLLEGE
Where Students Come First

**BRITISH BUSINESS COLLEGE** 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 077 362 7055, 021 222 4060**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 31 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை.
2. பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.
3. புகைப்படம் மற்றும் DVD யினைப் பெறுவதற்காக ரூபா. 300.00 இனை யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் (கணக்கு இல : 162100160000880) வைப்புச் செய்த பற்றுச்சீட்டு.

பின்வரும் இடங்களில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | திகதி | நேரம் | இடம் | பட்டம். |
|---|---|---|---|---|
| 1 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | கலைப்பீடாதிபதி அலுவலகம் | கலைமாணி(சிறப்பு)<br>பட்டப்பின்கல்வி தகைமைச் சான்றிதழ்(முழுநேரம்) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | சட்டமாணி, நுண்கலைமாணி<br>கலைமாணி(பொது) |
| 2 | 13.01.2016,<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | மருத்துவபீடாதிபதி அலுவலகம் | மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி |
| 3 | 13.01.2016<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு | தாதியியல் விஞ்ஞானமாணி<br>மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி,<br>மருந்தகவியல்மாணி |
| 4 | 13.01.2016<br>இ,<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | முகாமைத்துவபீடாதிபதி அலுவலகம் | தொழில் நிர்வாகமாணி |
| 5 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | விஞ்ஞானபீடாதிபதி அலுவலகம் | விஞ்ஞானமாணி(பொது) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | விஞ்ஞானமாணி(சிறப்பு)<br>கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி |
| 6 | 13.01.2016,<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00<br>மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம் | சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி , விவசாயவிஞ்ஞானமாணி |
| 7 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி அலுவலகம் | முதுதத்துவமாணி<br>முதுமெய்யியல்மாணி<br>முதுகல்வியியல்மாணி |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | முதுகலைமாணி<br>முதுவிஞ்ஞானமாணி<br>பட்டப்பின்கல்வி தகைமைச் சான்றிதழ்,<br>பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்(ஆங்கிலம்) |
| 8 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | வவுனியா வளாக முதல்வர் அலுவலகம் | வியாபார முகாமைத்துவ மாணி (பொது , சிறப்பு) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப.01.00 – 04.00 | | விஞ்ஞானமாணி(பிரயோக கணிதமும் கணித்தலும்) (பொது)<br>விஞ்ஞானமாணி (தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்),<br>தகவல் தொடர்பாடல் தொழினுட்பமாணி(பொது) |
| | 16.01.2016 | மு. ப. 09.00 – 12.00 | | விஞ்ஞானமாணி(சூழல்விஞ்ஞானம்) (பொது,சிறப்பு)<br>விஞ்ஞான மாணி கணணி விஞ்ஞானம் (சிறப்பு) |

**குறிப்பு:**
அனுமதிகள் கிளையினால் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் தொழில் ஈடுபாடுகள் பற்றிய கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க தவறியோர் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும் போது அதனைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும் என்பதனை கவனத்திற் கொள்க.

பதிவாளர்
09.01.2016

**PERSONAL CLASS** 077 836 1521
தரம் 03-A/L வரையான மாணவர்களுக்கு English. Spoken with Grammar, சிங்களம் என்பன வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.ஏனைய பாட ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: பிரபல ஆசிரியர் (67527)(11.15)




**தேவை**
இசை, தவில், நாதஸ்வரக்கலைஞர்கள் தேவை. மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் உள்ள ஆலயத்தில் தங்கி இருந்து நித்திய, நைமித்திய பூசைகள், திருமணவைபவங்கள் மற்றும் ஏனைய வைபவங்களிற்கு வாசிப்பதற்கு 50வயதிற்கு மேற்பட்ட தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் தேவை. மாதச்சம்பளம், தனிவீடு மற்றும் ஏனைய படிகள் வழங்கப்படும்.
தொடர்பு: 077 952 2047

**விற்பனைக்கு** 077 821 5133
13-XXXX நிசான் சனி. கார் (நல்ல நிலையில்).வெள்ளடியன் கோழிகள், கல்பேட்ஸ் கோழிகள்.
6ஆவது மைல் கல்லடி
கட்டுடை, மானிப்பாய். (67485) (11.15)

## உங்கள் பாதக் கமலத்தில் எங்கள் 13 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

அன்னை மடியில்
16 . 07 . 1943



ஆண்டவன் அடியில்
11 . 01 . 2003

### அமரர் சபாபதி நாராயணன்
(ஓய்வுபெற்ற கிராம சேவகரும் சமாதான நீதிவானும்)

எங்களை வளர்த்து ஆளாக்கிய அன்பு அப்பா!!
எங்களைவிட்டுப் பிரிந்து சென்றாலும்
எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவு என்றும் அழியாது
இரவுகள் நம்மை உறங்க வைத்தாலும்
உங்கள் நினைவு
நம்மை உறங்க விடுவதில்லை அப்பா !!
என்றும் நினைவில்...

(67557) (11.15)

பிள்ளையார் கோவிலடி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

மனைவி, பிள்ளைகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
(சிராத்த தினம்- 11.01.2016)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் இராசையா ஆறுமுகம்
(ஓய்வுபெற்ற மருந்தாளர் – வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை)

திதி: வளர்பிறை துதியை

உதயம்
04.07.1946



அஸ்தமனம்
13.01.2013

அதிசயமாக எம்மை விட்டுப்
பிரிந்த அப்பாவே!!
வாழ்க்கைத் தத்துவத்தை
வாஞ்சையுடன் கற்பித்தீர்கள்
வாழும் வழியதனை வடிவாக எடுத்துரைத்தீர்கள்
புன்னகை பூத்த முகம் கொண்ட அன்பு அப்பாவே!!
மறையாத உங்கள் நினைவு
மறக்காத உங்கள் முக அழகு
ஆண்டுகள் மூன்று ஆனாலும் எங்கள் துயர் ஆறாது
ஆண்டவன் பொன்னடியில்
ஆறாத இன்பமுடன் நீங்கள் இருக்க
என்றும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(67321)(11.15.18)

4ஆம் கட்டை இராசவீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

குணமணிதேவி ஆறுமுகம்,
ஆ. சஞ்சீவன்,
ஆ. மஞ்ஜீலன், பிரிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்க லே ஒழிக்கப்படாவிடில் கொட்டி லே உருவாகக்கூடும்

## ஊடகவியலாளர்களின் தேசிய ஒன்றியம் எச்சரிக்கின்றது

கொழும்பு, ஜன.11
நாட்டில் தற்போது இனநல்லிணக்கம் ஏற்பட்டு வரும் நிலையில், இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் சிங்க லே அமைப்புத் தடைசெய்யப்பட வேண்டும் என ஊடகவியலாளர்களின் தேசிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கையை பொலிஸ்மா அதிபர் எடுக்க வேண்டும் என்றும் அந்த ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்களின் தேசிய ஒன்றியம் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அதன் தலைவர் சிசிர சிவிதானகே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அமைப்பினூடாக இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டால் அதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தற்போது நாட்டில் தலைதூக்கியுள்ள சிங்க லே என்ற அமைப்பு நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச்சினையைத் தூண்டும் வகையில் செயற்படுகிறது. அதன் இலச்சினைகள் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால், இது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்திவிடும். அத்துடன், அரசின் மூலம் நாட்டுக்கு நன்மை கிடைப்பதை ஒருபோதும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் விரும்பமாட்டார்கள். அவ்வாறு நடந்தால் அதன்பின்னர் அவர்களுக்கு அரசியல் செய்வதற்கு முடியாமல் போகும் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது.

> “நாட்டில் இனப்பிரச்சினையைத் தூண்டும் வகையில் உருவாகும் அமைப்புக்கள், இலச்சினைகள் ஆகியவற்றைத் தடை செய்ய பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

அன்றிலிருந்த ஆட்சியாளர்கள் 1956இல் இடம்பெற்ற கலவரத்தின்பின்னணியைதேடிப்பார்த்து நடவடிக்கை எடுத்திருந்தால் 30 வருட போர் நாட்டில் ஏற்பட்டிருக்காது.

அதேபோன்றே தற்போது இனப்பிரச்சினையைத் தூண்டும் வகையில் செயற்படும் சிங்க லே என்ற அமைப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இதற்கு எதிராக கொட்டி லே (புலிகளின் இரத்தம்) மரக்கல லே என்ற பெயர்களிலும் அமைப்புக்கள் உருவாவதைத் தடுக்க முடியாது போய்விடும்.

நாட்டில் இனப்பிரச்சினையைத் தூண்டும் வகையில் உருவாகும் அமைப்புக்கள், இலச்சினைகள் ஆகியவற்றைத் தடைசெய்ய பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாட்டில் மீண்டும் அசாதாரண நிலைமைகள் ஏற்பட்ட பின்னர் நடவடிக்கை எடுப்பதில் எந்தப் பயனும் இல்லாமல்போகும்.- என்றார். (ற)

# தோணியை திருடிய மூவர் கைதாகினர்

மட்டக்களப்பு, ஜன.11
மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகிலி வெட்டை – சந்தி வெளி வாவிக் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணியொன்றைத் திருடிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களை நேற்றுக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திகிலிவெட்டைக் கிராமத்தைச் சேர்ந்த மீனவரான கந்தையா பாக்கியராசா என்பவரின் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தோணியே திருடப்பட்டு, வாவியில் சகதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிள்ளையார் கோயில் வீதி, கிண்ணையடியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ற)

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நல்லதம்பி தயாபரன்



தாய் மடியில்
09 . 08 . 1965

இறைவன் அடியில்
11 . 01 . 2011

சென்றதுவோ ஐந்தாண்டுகள், செல்லவில்லை எம்துயரம்
இன்றும் நீ இறக்கவில்லை, எம் மனதில் வாழ்கின்றாய்
அன்று நீ சுவிஸ் நகரில் அமைத்திட்ட தமிழ்ப் பள்ளி
குன்றிலிட்ட தீபமாய்த் தொடர்கிறது உனைவாழ்த்தும்
இன்றெம்மை நாம் தேற்றி விநாயகனைப் போற்றி நின்று
என்றும் உனது ஆத்மசாந்திக்காய் இறைஞ்சுகின்றோம் அவன்பாதம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



உதயன் நாளேட்டின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளி
ஸ்தாபக ஆசிரியரும், பிரதம ஆசிரியருமான

## குமாரவேலு கந்தர்
# இரத்தினசிங்கம்
## (கே.கே.ஆர்)

அன்னார் தமது 87 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். இமையாணனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் சுமார் 60 ஆண்டுகள் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இவர், பல மூத்த தமிழ் ஊடகவியலாளர்களை உருவாக்கியுள்ளார். கண்டிப்புக்கும் கடமைக்கும் முக்கியத்துவம் கொடுத்த கே.கே.ஆர். இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவர். செய்தி எழுதுவதற்கான புதிய தமிழ் உரை நடை வடிவத்தை உருவாக்கிய சிற்பிகளில் அவரும் ஒருவர்.

காலஞ்சென்ற எஸ்.டி.சிவநாயகத்தின் வலதுகரமாக நான்கு தசாப்தங்களுக்கு அதிகமாகப் பணியாற்றிய இவர், ‘சுதந்திரன்’, ‘வீரகேசரி’ பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் ‘தினபதி’, ‘சிந்தாமணி’ , ‘சூடாமணி’ பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் ‘சுடர்ஒளி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் நீண்டகாலம் பணியாற்றியிருந்தார். தமிழின்பம் மாதாந்தச் சஞ்சிகையிலும் பிரதி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தமது முகத்தை அம்பலப்படுத்தாத கே.கே.ஆர்., ஈழத்தமிழ் ஊடகத்துறைக்கு காத்திரமான பங்களிப்பை ஆற்றியுள்ளார். இவரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரை எமது கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கிறோம்.

உதயன், சுடர்ஒளி குழுமத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
12 . 10 . 1929

இறப்பு
10 . 01 . 2016

# குமாரவேலு கந்தர் இரத்தினசிங்கம்

## (சுடர் ஒளி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர்)

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.14, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலு கந்தர் இரத்தினசிங்கம் நேற்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு கந்தர் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலெட்சுமியின் பாசமிகு கணவரும், ஜெயந்தி, அரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்,கனகசபை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுசீந்திரன் (மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் - யாழ்ப்பாணம்),சுகந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜீ.பவித்திரா (பிரான்ஸ்),கீ.பிரித்திகா (ஆசிரியை - பளை மத்திய கல்லூரி), சு.பிருந்தா (மருத்துவ பீடம் யாழ். பல்கலைக்கழகம்) லண்டனை வதிவிடமாகக்கொண்ட அ.சினேகா, அ.நிவேதா,அ.ஆரத்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2016) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல.14,கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி.28643) (13.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டித்துறையை மீட்டுத் தர வேண்டும்

## வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுத் தலைவர் மீன்பிடி அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.11
நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 30 வீதமான மீன்பிடி நடைபெறும் மயிலிட்டித்துறை பிரதேசத்தை கடற்படையினரிடம் இருந்து மீட்டுத்தாருங்கள் என பிரதேச வரைபடத்தை சமர்ப்பித்து வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவர் குணபாலசிங்கம் மீன்பிடி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த மீன்பிடித்துறை அமைச்சர், யாழ்.மாவட்ட மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

அதன்போது வலி. வடக்கு மீனவர்கள் குறிப்பாக மயிலிட்டி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வலிகாமம் வடக்கில் இருந்து விரட்டப்பட்டு 25 ஆண்டுகள் கடந்தும் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 30 வீதமான மீனை உற்பத்தி செய்த எமது சொந்தக் கிராமம் மயிலிட் டித்துறை பிரதேசங்களை கடற் படையினர் இன்னமும் தமது ஆதிக்கத்தில் வைத்துள்ளனர்.

இவ்வாறு கடற்படையினர் வசம் வலி.வடக்கில் மட்டும் இன்னமும் 17 கிலோ மீற்றர் நீளம் கொண்ட கடற்கரைப் பிரதேசம் உள்ளது. ஆனால் குறித்த பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதி வடக்கில் கட்டப்பட்டிருந்த ஒரேயொரு மீன்பிடித்துறைமுகமான மயிலிட்டித் துறைமுகமும் உள்ளது.

குறித்த பிரதேசத்தில் மீனவர்களை தொழில்புரிய மறுக்கும் கடற்படை, இரு வர்த்தக நிறு வனங்கள், தமது உற்பத்திகளை இந்த துறைமுகத்தின் ஊடாகக் குடா நாட்டுக்குள் சந்தைப்படுத்த அனுமதித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தின் மீனவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் 18 இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்றனர்.

வலி.வடக்குப் பகுதியில் இந்தத் துறைமுகம் மற்றும் 17 கிலோ மீற்றர் நீள கடற்கரை உள்ளிட்ட பகுதி நிலத்தை விடுவித்தால் இந்த 18 முகாம்களிலும் வாழும் மக்கள் மீள் குடியமரமுடியும் - என்றார். (ஐ-101)

### அச்சுவேலி பஸ் நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11
அச்சுவேலி பஸ் நிலையத்தின் முன்னால், குண்டும் குழியுமாகக் காணப்பட்ட நிலம் பிரதேச சபையின் 4 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மழைகாலத்தின் போது, பஸ் நிலையத்தைச் சுற்றி வெள்ளம் தேங்கி நின்று வெளியேற முடியாமல் காணப்பட்டது. அதனால் அரச பஸ்கள் நின்று செல்வதிலும், தனியார் பஸ்களை நிறுத்தி வைப்பதில் சாரதிகளும் அதனால் பயணிகள் பல இன்னல்களை எதிர்கொண்டிருந்தனர்.

தற்போது, குறித்த பஸ் நிலையத்தைச் சுற்றி கற்கள் போடப்பட்டு, நிலம் உயரமாக்கப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டுள்ளது. (ற-ஐ-107)

### போலி சிகரெட்டுகளை விற்பனை செய்த பெண் கைது

யாழ்ப்பாணம்,ஜன.11
கல்வியங்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில், சட்டவிரோதமான முறையில் போலி சிகரெட்டுக்களை விற்பனை செய்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் எனவும், விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இருபது போலி சிகரெட்டுக்கள் கைபற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிகரெட்டுக்கள் அக்கரைபற்று பகுதியில் தயாரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-107)

### கஞ்சா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.11
கஞ்சா வைத்திருந்ததோடு அவற்றை விற்பனை செய்தும் வந்த இரண்டு பேருக்கு யாழ்.மேல்நீதிமன்று 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முருகயபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 3 கிலோ 800 கிராம் கஞ்சாவைத் தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சங்கானையில், ஒரு கிலோ 20 கிராம் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்ததோடு விற்பனை செய்தும் வந்த குற்றச்சாட்டிலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு நீதிவான் மன்றங்களால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப் பட்டு விசாரணை இடம்பெற்று வந்தது. இந்த நிலையில் அவர்கள் இருவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு குறித்த அபராதம் விதிக்கப்பட்டது.

அதன்படி தெல்லிப்பழைப் பிரிவைச் சேர்ந்தவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும், சங்கானையைச் சேர்ந்தவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிபதி மா.இளஞ்செழியன். (ற-ஐ-4)



சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 'பொங்கல் மங்கல விழா' நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நாட்டியக் கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தனின் நெறியாள்கையில் பதுளை "திலகம் நர்த்தனாலய மாணவிகளின் 'நிருத்திய நிவேதனம்' எனும் நாட்டிய நிகழ்வும், 'பொங்கற் பொருள்கள் பேச விழைந்தால்.." என்னும் தலைப்பில்; தென்மராட்சி இலக்கிய அணியின் சிறப்புக் கவியரங்கும் இடம்பெற்றன. (ஐ-9)

### நேரக் கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், ஜன.10
யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கு தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று முதல் 14 ஆம் திகதி வரை நேரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

15 ஆம் திகதியில் இருந்து நேரக்கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும். அனைத்து அங்கத்தவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒன்றிய கண்காணிப்பு குழுவினர் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி4)

### சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.11
யாழ்.வண் வடகிழக்கு கலட்டி சிறி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் மாலை புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இந்த உற்சவம் அபிசேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப்பூசையின் பின்னர், விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தைப் பொங்கலை முன்னிட்டு 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் விசேட பூசை ஆராதனைகள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜீ)

# அச்சுவேலி பொலிஸ் பிரிவில் கடந்த ஆண்டு அதிக விபத்து

## 36 விபத்துக்களில் 9 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11
காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எட்டு பொலிஸ் நிலையங்களில் அச்சுவேலி பொலிஸ் பிரிவிலே கடந்த வருடம் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று காங்கேசன்துறை போக்குவரத்து புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். இவற்றில் அதிகளவு விபத்துக்கள் அச்சுவேலி பொலிஸ் பிரிவிலே அதிகம் இடம்பெற்றுள்ளன. அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 36 விபத்துக்களில் 9 பேர் இது வரை உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற 28 விபத்துக்களில் 5 பேரும், நெல்லியடி பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற 34 விபத்துக்களில் 3 பேரும் உயிரிழந்துள்ளனர். இளவாலை பொலிஸ் பிரிவில் 9 விபத்துக்களில் 2பேர் உயிரிழந்துள்ளனர்.

அச்சுவேலி போக்குவரத்து பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாகவே இருப்பதால், பொலிஸார் சரியான முறையில் கடமைகளை மேற்கொள்ள முடியாமையும் இந்தப் பகுதியில் விபத்துக்கள் அதிகளவு இடம்பெற காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு பிரிவாகப் போக்குவரத்து பொலிஸார் இருக்கவேண்டிய இந்தப் பொலிஸ் நிலையத்தில் குறைந்தளவு ஆளணியே காணப்படுகிறது.

இதனால் பொலிஸார் போக்குவரத்து கடமையை எந்தப் பகுதிக்கு சென்று மேற்கொள்ள வேண்டும் என்பதில் சிக்கல் நிலை காணப்படுகிறது.

அத்துடன் வடமராட்சி, மீசாலை, சாவகச்சேரி, சுன்னாகம் பகுதிக்குச் செல்லும் வாகன சாரதிகள் அச்சுவேலிப் பொலிஸ் பிரிவின் ஊடாக அதிகம் வாகனப் போக்குவரத்து கூடிய பிரதேசமாகவும் இந்தப் பகுதி காணப்படுகிறது. இதுவும் அதிகம் வீதி விபத்துக்கள் ஏற்பட காரணம் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-107)

### மாணவர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11
தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் எதிர்வரும் புதன்கிழமை புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை புறக்கணிப்பு நடைபெறும் என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தனிநாட்டை நோக்கித் தமிழரை தொடர்ந்தும் தள்ள வேண்டாம்

பயங்கரவாதத்தை ஒழித்து தாய்நாட்டைக் காப்பாற்றிய மாவீரன் தாமே என்று பேரினமக்களுக்கு அடிக்கடி நினைவூட்டிக்கொண்டு அதனையே தமது எதிர்கால அரசியல் மேம்பாட்டுக்கான அடித்தளமாகவும் பயன்படுத்த முனைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, போரை எவ்வாறு நடத்தி முடித்தார் என்பதை மகாத்மா காந்தியின் பேரனும் முன்னர் இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்தவருமான கோபாலகிருஷ்ண காந்தி கடந்த வாரம் கொழும்பில் நடந்த ஒரு வைபவத்தில் ஆணித்தரமாகத் தொட்டுக் காட்டியிருந்தார்; புட்டுக் காட்டினார்.

அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தமை போரின் கொடிய தன்மையை வெளிப்படுத்தியிருந்தது. வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் என்ற காரணத்துக்காக பாலச்சந்திரன் என்ற குழந்தையைக் கொடூரமான முறையில் கொன்றமை உலகையே உறைய வைத்த கொடுமையாகும் என்று காந்தியின் பேரன் இடித்துக் கூறியது பலரையும் சிந்திக்க வைப்பதாக உள்ளது. ராஜபக்சவையும் அவரைச் சார்ந்தவர்களையும் இந்தக் கருத்து அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த வைபவத்தில் காந்தி உரை நிகழ்த்தினார். அந்த வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சில கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக வெளியிட்டுள்ளார்.

எத்தகைய சவால்கள் வந்தாலும் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்கவும் பின்னிற்க மாட்டேன். இதற்காக உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறேன். போரின் பின்னர் விடப்பட்ட தவறுகளைச் சரி செய்யவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் வடக்கு- தெற்கு மக்கள் அச்சமின்றி வாழும் சூழலை உருவாக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்--என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போர் இடம்பெற்றதற்கான காரணத்தைக் கண்டறிவது மிக முக்கியம்.

நடந்து முடிந்த முப்பது வருடகாலப் போர் ஏதோ சடுதியாக தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட, நாட்டைத் துண்டாடுவதற்கான ஒரு பயங்கரவாத செயற்பாடு என்பது போலவும், அதனை மிகச் சாதுரியமாகவும் போர் உபாயங்களைப் பிரயோகித்தும் துடைத்தெறிந்து நாட்டைக் காப்பாற்றி விட்டதாகவும் மகிந்த தரப்பினர் பேரின மக்கள் மத்தியில் பரப்புரை செய்து வருகிறார்கள். ஆனால் அந்தப் போருக்கான அடித்தளம், சுதந்திரத்துக்குப் பின்னர் பேரினவாத அரசியல் கட்சிகளாலும் தலைவர்களாலும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட இனக்குரோத நடவடிக்கைகளாலேயே படிப்படியாக வளரக் காரணமாகிற்று என்பது வெளிப்படை.

இதன் உள்ளார்ந்த உண்மைகள் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்த வேண்டி ஏற்பட்ட நிலைமைகளுக்கான காரணங்களாயின என்று எழுந்தமானமாகக் கூறிவிட முடியாது. ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் மேலும் பேசும்போது, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றவை நிராகரிக்கப்படாமல் இருந்திருந்தால் பிரபாகரன் போன்ற ஒருவர் தோன்றியிருக்க மாட்டார் என்று சரியாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, போர் ஏற்பட்டமைக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிவதும், அவை எதிர்காலத்தில் நிகழாது இருக்க நடவடிக்கை எடுப்பதும் அவசியம் என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருப்பது வரவேற்கத்தக்கது.


வடக்கு-கிழக்கு மக்கள் கோரும் வகையில் அவர்களின் உரிமைகளை வழங்கிவிட்டால், அது தனிநாடு உருவாகிவிடக் காரணமாகிவிடும் என்பதாக பேரின மக்கள் மத்தியில் பெரும் பீதி உணர்வொன்று பூதாகரமாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பயப்பிராந்தியை வைத்தே அவ்வப்போது அவர்கள் தமிழர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழும்படி செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகள் சிங்களப் பெரும்பான்மையோருக்கு இணையாக வழங்கப்படுவதற்கும், தமிழ் நாடு உருவாகுவதற்கும் சம்பந்தம் இருக்க முடியாது.

போர் நடக்க பெரும்பான்மையினரின் செயற்பாடுகள்தான் காரணமாகி இருந்துள்ளன என்றால், தனிநாட்டை நோக்கி தமிழ் மக்கள் தொடர்ந்தும் தள்ளப்படுவதற்கு அவர்களே காரணமாகி விடலாகாது;

என்ற வகையில் இன்றைய ஆட்சியாளர்கள், குறிப்பாக ஜனாதிபதி சிந்திக்கத் தலைப்பட்டிருப்பதுபோன்று தென்படுகிறது. தெரிகின்றது. அதன் பெறுபேறுகளை இனிமேல்தான் அறிந்து கொள்ள இயலும்.

# மக்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப் போராளி என்ற குறிக்கோள் மீண்டும் கருக் கொள்ளுமா?



**செ.உமாசுதன்**

இலங்கையின் வடக்கில் ஒரு தேசம் பொலிவாக இருந்தது.அது தமிழ்த் தாய் குடிகொண்டிருந்த பூர்வீகம். கலை,கலாசாரம்,பண்பாட்டு விழுமியங்கள்,பொருண்மியத்தின் மேம்பாடுகள் என அனைத்தையும்அரவணைத்துக்கொண்ட அழகிய தாய்த்தேசம்.நேசம் கொண்டு ஈழம் என்ற நாமம் கொண்டு தமிழர்கள் போற்றி வணங்கிய, வணங்கிவருகின்ற எப்போதும் அழித்திட முடியாத தேசமது.வீரத்தின் பிறப்பது.உலகம் வியந்து பார்த்து சிறப்பது.

இத்தகைய ஒரு தேசத்தின் விடுதலை வேண்டிய பயணத்தின் தடயங்கள் முப்பது ஆண்டுகள் உரிமைக்கான ஆயுதம் ஏந்திய அவதாரமாக உருப்பெற்று தமிழினத்தின் இனத்துவ சார்பை. அதன் நிலைத்திருப்பை உலகுக்கு எடுத்துக் கூறியது.இதற்கு முந்தைய முப்பது ஆண்டுகள் உரிமைக்கான அகிம்சை ஆயுதம் ஏந்தியது.

இந்த ஏந்தல்கள் தாக்கமுறாததால் தேங்கித் தட தடத்தன.தரப்படுத்தலோடு உடைப்பெடுத்து மேற்சொன்ன அவதாரங்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தது.அகிம்சைக்கும் அவதாரங்களுக்கும் இடைப்பட்ட விகிதாசாரங்களில் மேன்மை பெற்றது தமிழினத்தின் அவதாரமான, ஆதாரமான வீரங்கள் தான்.எப்போதும் விலை போகாத அதன் மூலாதாரங்கள் தாம்.

### விடுதலைப் போராளி என்னும் குறிக்கோள்

இதனடிப்படையிலே தோற்றம் பெற்ற அந்த தமிழினப் பற்றும் மக்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப் போராளி என்ற குறிக்கோளும் அதி உத்தமமானவை.விடுதலை வேண்டுகின்ற ஓர் இனம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டிய தியாகங்கள்.உரித்தானதைத் தர மறுக்கும்போது சோதனைகளை தியாகங்களோடு செய்து சாதனைகள் பலதைச் செய்து காட்டியது தீரங்கள்.உரிமைக்கான அர்த்தங்களை ஓர் அரசாக்கி.தரை,வான்,கடல் எல்லைகளை காவலிட்டு.நீதி,நிர்வாகம்,சட்டம்,காவல் என நிமிர்ந்து பொருண்மியங்களை வளப்படுத்தி.சமூக விரோதங்களை கட்டுப்படுத்தி.விழுமியங்களை சீர்ப்படுத்தி.கல்வியைப் பூர்வீகச் சொத்தாக்கி நல் மாணவ சமூகத்தை கட்டிக்காத்த, தட்டிக் கொடுத்த இலட்சியங்கள் அவை. போரும்-கல்வியும் இணைந்த ஓர் சமூகம் நிலைத்திருக்கப் போராடுகிறது என்பதையும் சுதந்திரத்துக்கான போராட்டமாகவே தமிழ்ச் சமூகம் நகர்கிறது என்பதையும் அனைவரும் உணரவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ் வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. இதனை ஒரு தேசிய இனம் பகிர்ந்து கொள்ளவேண் டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது என்பது நாம் எமது தேசத்துக்குப் புரியும் துரோகம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியவை.

> **" போரும் கல்வியும் இணைந்த ஒரு சமூகம் நிலைத்திருக்கப் போராடுகிறது என்பதையும் சுதந்திரத்துக்கான போராட்டமாகவே தமிழ்ச் சமூகம் நகர்கிறது என்பதையும் அனைவரும் உணரவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. "**

### கட்டுக்கோப்பை இழந்த சமூகம்

இத்தகைய சிறப்புக்களோடு இருந்த ஒரு சமூகம் அதே பண்புகளோடு நிலைத்திருக்கிறதா என்றால் பெரியதொரு ஆச்சரியக் குறியும் கேள்விக் குறியும் தற்போதைய சமூக வெளியிடையே தோற்றம் கொள்கிறது.கடந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது.

ஏனெனில் கட்டுக்கோப்பான சமூகம் திட்டமிட்ட மாற்றங்களால் இடைவிலகத் தொடங்கி விட்டது. விடுதலைக்கான நோக்கங்களும் குறிக்கோள்களும் மழுங்கடிக்கப்பட்டு தட்டிக் கேட்க ஆள்களின்றி ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது.இதற்கான அடித்தளங்கள் 2009 களின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தோடு கட்டமைக்கப்பட்டு விட்டன. எழுச்சிக்கு காரணமாக இருந்த அந்த விடுதலை உணர்வு என்பது வீழ்ச்சி கண்டபோது எமக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்று வாய்த்த பிரதிநிதித்து வங்கள் சரியாக இயங்க ஆரம் பித்தன. ஆனால் அந்த சரியாக இயங்குதல் என்பது சரிவடையத் தொடங்கிவிட்டது.

பிறர் ஊக்கியோடு உருமாறத் தொடங்கியிருக்கிறது.கட்டுக் கோப்பான ஒரு சமூகம் என்ற அந்த தன்னிகரில்லாத தகைமைகள் ஒவ்வொன்றாகத் தகர்கின்றன.தட்டிக் கொடுத்தலோடு உயர்வடைந்த தமிழர்களின் சொத்தான கல்வி மத்திம நிலையடைந்து, மந்த கதியில் பயணிக்கத் தொடங்கி விட்டது.புத்தகமும் கையுமாக திரிந்த சமூகத்தின் எதிர்கால ஒளி தருகின்ற மாணவர் சமுதாயம் சிகரெட் புகையோடும் மது பானக் கோப்பையோடும் மட்டற்ற இணையத்தள சீர்கேட்டோடும் சிறகடிக்கத் தொடங்கி விட்டது.கட்டிக் காக்கப்பட்ட பண்பாடுகளும் விழுமியங்களும் பகையாகிப் போகின்றன.பார்த்திருக்கிறோம்..பிற சமூகத்தினன் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவற்றை தடுக்க ஆக்கபூர்வமாக ஏதேனும் செய்திருக்கிறோமா ? இல்லை..திட்டமிட்ட செலுத்திகளையும் வருகைகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை ஜனநாயகத்தின் பிரதிநிதியாக சமூகத்தின் தற்போதைய காவலாளிகளாக மேற் கொண்டோமா? இல்லை..அடிமட்ட ஏழை மக்களின் தன் இனம் சார்ந்த பூர்வீக குடிகளின் கோரிக்கைகளை வாக்குரிமையின் பற்றுதலுக்காக சரியான தீர்வாக பரிகாரமாக சாட்டுதல் செய்திருக்கிறோமா? இல்லை மாறாக என்ன செய்கிறோம்?.! கூட்டம் போடுகிறோம்..வாய்க்கு ருசியாகத் தின்று திக்கு முக்காடி வண்டியைத் தொந்தியாய்ப் பெருக்குகிறோம்..இதற்கிடையில் விலாசக் கதைகளும் அவ்வப்போது அவிழ்த்தும் விடுகிறோம்..மக்கள் தம் தலைவிதி எண்ணி கேட்டுச் சகித்து சிரிப்பதா.. அழுவதா..என்பதில் கூட இரண்டு நிலைப் பட்டு தவித்திருக்கின்றனர்.

### ஊதியங்களில் கொழுத்துத் திழைத்தார்கள்

மாறாக இந்தப் பிறவிகள் அதிகரித்த ஊதியங்களையும் தீர்வற்ற சம்பாசணைகளையும் செய்து கொண்டிருக்கின்றனர்.ஊதியங்களில் கொழுத்து திழைத்து இருக்கின்றனர்.மக்கள் தொடர்பான கரிசனைகளில் சிறுத்திருக்கின்றனர்.தியாகங்களை ஊதியமாக்கியவர்கள் எங்கே? இவர்கள் எங்கே?? ஒப்பிட முடிகிறதா? இதற்கிடையிலே மாகாணத்தில் வந்தவர்கள் அவைக்கும் அடக்கமாகிப் போய் ஆவியாய் அலட்டத் தொடங்கியும் விட்டனர்.சட்டம் என்பது இருட்டறை என்பதை நிரூபித்தும் விட்டனர்.விண்ணாணங்களில் விண்ணர்கள் என்பதை செய்து காட்டியம் விட்டனர். எவர் செய்த பாவம்? யார்க் கெடுத்துரைப்போம்? தெரியவில்லை.. புரியவில்லை.



“ஒரு விடுதலைப் போராளி என்ற தனிமனிதமும் அவன்பின்னால் அணி திரண்ட தியாகங்களும் உயர்வானவை. இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது என்பதும் எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள் என்பதும் வரலாற்றுஉண்மைகள் சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும்.”

இந்த நிலையிலே உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருப்பதை ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தும் விதமான, ஒரு கருத்து மகாத்மா காந்தியின் பேரன் கோபால கிருஷ்ண காந்தியிடம் இருந்து வெளிப்பட்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் விடுதலைக்கான தியாகங்களும் அதற்கான உன்னத குறிக்கோள்களுமே அவை.

### இந்திய மாயையைக் கலைத்த திலீபன்

திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழதேசிய உணர்வைத் தட்டியெழுப்பியது. அதேபோன்று இந்தத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது என்பதையும் காலங்கடந்த மேற் போந்த கருத்துக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றது.

அந்தவகையிலே மக்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப் போராளி என்ற தனிமனிதமும் அவன் பின்னால் அணிதிரண்ட தியாகங்களும் உயர்வானவை இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது என்பதும் எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள் என்பதும் வரலாற்று உண்மைகள் சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால் தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல் தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது என்பதும் தற்போதைய சுழலில் சிந்தனைச் சுழற்சிக்கு விடப்பட வேண்டியவை. அத்துடன் விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி என்பதை எதிர்காலச் செயற்பாடுகளில் மக்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதும் முக்கியமாக இருக்கின்றது.

தருணங்கள் தப்பி, சகுனங்கள் பிழைக்கும். தற்காலத்தின் அரசியல் நகர்வுகளுக்குள் இருந்து தமிழ் சமூகத்தைக் காப்பாற்ற மக்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப் போராளி என்ற குறிக்கோள் மீண்டும் கருக்கொள்ளுமா?? மிகுந்த எதிர்பார்ப்பும்..எல்லை மீறிய அவாவும் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றம் பெறத் தான் செய்கிறது.

# ஐயாவுக்கு எமது பகிரங்க மடல்

ஐயா! எமக்கு உங்களைத் தெரியாது. ஆரம்பத்தில் உங்கள் பெயரைப் பார்த்து தமிழர் என்பதாலும் தமிழ் கூட்டமைப்பு பரிந்துரை செய்த காரணத்தினாலும் தலையெழுத்தான வாக்குரிமையை எமது வழமையான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு உங்களை கைதடி கதிரைக்கு அனுப்பினோம். தொடக்கம் நன்றாக இருந்தது. நாள்கள் நகர நகர பத்திரிகைச் செய்திகள் எமது மனங்களை வேதனையில் ஆழத்தியுள்ளது.

தந்தை செல்வா கூறுவார், தமிழரசுக் கட்சி என்று ஒரு தடியை தேர்தலில் நிறுத்தினாலும் அந்தத் தடி அமோக வெற்றியீட்டும் என்று. அந்த வகையிலேயே நீங்களும் வந்துள்ளீர்கள். கறுப்புக் கோட்டுக்கு விடை கொடுத்து, அரசியல் மழையில் குளிப்பதற்கு தமிழரைக் கவரக்கூடிய உடையணிந்து சைவ சமயத்துக்கு ஏற்றாப்போல் சந்தனப் பொட்டிட்டு சாணக்கியமாக நீங்கள் வந்த வேலையை ஆரம்பிக்கிறீர்கள் என ஊடகங்களுக்கு எண்ணத் தோன்றுகின்றது. உங்களுக்குத் தெரியும் தமிழர்கள் சந்தேகக் கண்ணுடையவர்கள் என்று. ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை உங்கள் நடவடிக்கை தமிழர் தலைமைக்கு ஏற்றாப்போல் இருந்தது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின் தங்கள் தேவைக்காக உங்களை எம்மிடம் கூட்டமைப்பு ஊடாக அனுப்பப்பட்டவர் என ஏன் சந்தேகம் கொள்ளக்கூடாது?

ஆட்சி மாற்றத்துக்கு ஒரு வகையில் வெளிப்படையாக இல்லாத மாதிரி வெளிப்படையாகச் செயற்பட்டீர்கள் பரவாயில்லை. தொடர்ந்து வந்த ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் சட்ட வல்லுநர் என்பதைக் காட்ட முனைபவர் போல் நடித்து பல கைங்கரியங்களை புரிந்தீர்கள். எது எப்படி இருப்பினும் சூரை முள்ளில் சேலை போல் பொறுத்திருந்தோம். ஆனால் இன்று உங்கள் சுயரூபத்தைக் காட்டி விட்டீர்கள். மக்கள் பேரவை என ஒரு குழாம் அமைத்து முதலாம் அமர்வு இரண்டாம் அமர்வு எனக் கூறித் திரிகிறீர்கள். நாம் உங்களில் எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தோமே அந்தளவுக்கு எம்மைக் குறைத்து மதிப்பிடுகின்றீர்கள். நீங்கள் படித்தவர், பட்டம் பெற்றவர், கல்விமான், புத்தி ஜீவி, நீதிபதி அனைத்தும் உண்மையே. அதனால் மக்களை மந்தைகள் என தயவுசெய்து எண்ணாதீர்கள். மாகாண சபைக்கு மக்களுக்காக வந்த பணம் பயன்படுத்தாது திரும்புவதாக ஊடகங்கள் மூலம் அறிகின்றோம். இதை உண்மை தான் என்று தாங்களும் கூறியுள்ளீர்கள். மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக நீங்களே உங்கள் தனிப்பட்ட வசதிக்காகவும் தலைமைக்கான அத்திபார வேலைத் திட்டங்களில் நேரத்தையும் காலங்களையும் செலவு செய்கின்றீர்கள்.

ஐயா! தமிழர் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது. அவர்கள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று மக்கள் ஏற்றோ தீர்மானித்த ஒன்று. காலத்துக்குக் காலம் தமிழர்களுக்கு கிடைக்கும் உரிமைகளைப் பெற முடியாது, பெறவிடாது, தடை போடும் தீய சக்திகள் வந்துகொண்டே இருக்கின்றார்கள். அந்த வரையறைக்குள் தங்களையும் தமிழ் மக்கள் சேர்ப்பதா?

தாங்கள் தற்சமயம் ஏற்படுத்திய மக்கள் பேரவையை மாகாண சபை தேர்தலுக்கு முன் தொடங்கி ஒரு கட்சியைத் ஆரம்பித்து தேர்தலுக்கு முகம் கொடுத்திருந்தால் அந்தக் கட்சிக்கு நீங்கள் தலைவராக இருந்திருக்கலாம். உங்கள் கட்சியில் கருணா, பிள்ளையான் ஏன் விமல் வீரவன்சாவைக் கூட சேர்த்தாலும் உங்கள் கொள்கைக்கு ஏற்புடையதே. தமிழர்களுடைய கடந்த கால கசப்பான வாழ்வும் சோக வரலாறும் தங்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அரசு கூறும் நீதியை வழங்கிவிட்டு அவர்கள் வைப்பிலிடும் பணத்துடன் சுகபோகமாக வாழ்ந்தீர்கள். இன்று மோசமான அழிவின் பின்னும் தமிழர் தலைநிமிர வேண்டும் என்ற காரணத்தினாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மக்கள் பலதரப்பட்ட நிபந்தனைகளுடன் நாடாளுமன் றம் அனுப்பியுள்ளார்கள். அதில் கூட நீங்கள் அமைத்திருக்கும் மக்கள் பேரவையில் அங்கம் வகிப்போர் இடையூறு விளைவித்தவர்களே இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது கூட்டமைப்பை பற்றி கதைப்பதற்கு. தமிழ்க்கூட்டமைப்பு நடவடிக்கையில் தவறு இருப்பின் தமிழ் மக்கள் கவனித்துக் கொள்வார்கள். இதை விடுத்து தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களை பற்றிக் கதைப்பது எந்த வகையில் நியாயமானது.

எனவே, மாண்பு மிகு முதலமைச்சர் உட்பட மக்கள் பேரவையில் அங்கம் வகிப்போர்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்! தமிழ் மக்கள் நீண்ட துன்ப துயரங்கள் மத்தியில் கணவனை இழந்த மனைவிகள் பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோர்கள். பெற்றாரை இழந்த பிள்ளைகள் அவயவங்களை இழந்த பல்லாயிரக்கணக்கானோர் ஆகியோரின் கண்ணீரில் நீங்கள் தயவு செய்து குளிர்காய முற்படாதீர்கள்! தமிழ் மக்களில் பற்றிருந்தால் ஜனநாயக முறையில் தெரிவாகி அதன் பின் கதையுங்கள்.

உங்களால் தமிழ் மக்களுக்கு எதையும் செய்ய முடியாது. அன்பானவர்களே எல்லோருடனும் நல்ல எண்ணத்துடன் ஒன்றாகுங்கள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் முடிந்து விடும். பாவம் தமிழ் மக்களுக்குப் பாதகம் செய்துவிடாதீர்கள். இறுதியாகக் கூறுகின்றோம் மக்கள் பேரவை, அவலத்தை ஏற்படுத்தலாம் விழிப்பாயிருங்கள்.

வன்னியூரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கொட்லாந்தில் பெரும் வெள்ளப்பெருக்கு

லண்டன், ஜன.11

ஸ்கொட்லாந்தின் வடகிழக்குப் பகுதியில் எதிர்பாராத மழை பெய்துள்ளது. இதனால் ஆறுகள் நீர்நிலைகள் அதன் உச்ச வரம்பை எட்டியுள்ளதால் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களில் இவ்வாறானதொரு மழைவீழ்ச்சி பெறப்பட வில்லை என ஊடகங்கள் தகவலைப் பகிர்ந்துள்ளன. நீர்த் தேக்கங்களில் ஏற்பட்ட உயர்வினால் அந்தப் பகுதியில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட வீடுகளில் வசித்த மக்கள் வெளியேற்றப்பட்டுள் ளனர்.

மீட்புப்பணிகளில் கடலோரக்காவல் படையினர் ஈடுபட்டுள்ளனர். டொன் மற்றும் ஈத்தன் ஆறுகளில் ஏற்பட்ட வெடிப்பு பாரிய வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியுள்ளது.

பலமக்கள் வீடுகளை விட்டுவெளியேறி ஹோட்டல்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். வீட்டின் சுவர்கள், தளபாடங்கள் என்பன கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளன என சர்வதேச ஊட்கங்கள் தகவல் தெரிவித்தன. (ஐ-ரி4)





# நோயாளியை அடித்துக்கொன்ற வைத்தியர்

மாஸ்கோ, ஜன.11

ரஷ்யாவில் உள்ள பெல்கோர்டு நகரைச் சேர்ந்த நோயாளியான யெவ்ஜெனி பக்தின் அங்குள்ள வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியர் இலியா லெந் தினோவ் என்பவரைச் சந்தித்துச் சிகிச்சை பெற்றார்.

அப்போது நோயாளியான யெவ்ஜெனி பக்தின் தாதி ஒருவரைத் தொட்டதால், ஆத்திரம் அடைந்த வைத்தியர் அவரைச் சரமாரியாக அடித்து உதைத்தார். அவரது முகம் மற்றும் உடலில் பல தடவைகள் குத்தினார்.

இதனால் நோயாளி மயங்கி விழுந்தார். பின்னர் நோயாளியைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவர் இறந்து விட்டதாகத் தெரிவித்தனர். இந்தக்காட்சிகள் அனைத்தும் வைத்தியசாலையில் உள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளன.

அந்த வீடியோக் காட்சி அங்குள்ள தொலைக்காட்சிகளிலும், அதையடுத்து 'யூடியூப்'பிலும் ஒளிபரப்பாகி உலகம் முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து நோயாளியை அடித்துக் கொன்ற வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)





தென் கொரியாவின் சியோல் நகரில், சாக்கடைக் கால்வாயாக இருந்

# குற்றங்களில் ஈடுபடும் அகதிகளை உடனடியாக நாடுகடத்த உத்தரவு

பெர்லின்,ஜன.11

ஜேர்மனிநாட்டில் பல்வேறு குற்றங்களில் ஈடுபடும் புலம்பெயர்ந்தவர்களை உடனடியாக நாட்டை விட்டுவெளியேற்றும் கடும் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகபரபரப்புத்தகவல்கள்வெளியாகியுள்ளன.





ஜேர்மனி நாட்டின் தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் புகலிடம் கோரிக் காத்திருக்கும் புலம்பெயர்ந்தவர்கள் குற்றங்களில் ஈடுபட்டு 3 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர்களுடைய தாய்நாட்டில் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாமல் இருந்தால் அவர்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.

ஆனால், கடந்த புத்தாண்டு நள்ளிரவில் புலம்பெயர்ந்தவர்கள் பெண்கள் மீது பாலியல்வன்முறைத்தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மர்கல் அதிரடி அறிவிப்பு ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

அதில், குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட அகதிகள் மற்றும் இடைநிறுத்த சிறை தண்டனை(எத்தனை ஆண்டுகள் இருந்தாலும்) பெற்ற புலம்பெயர்ந்தவர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்ற சட்டங்கள் கடுமையாக்கப்படும்- என அறிவித்துள்ளார்.

இதன் மூலம், ஜேர்மனியின் சட்டங்களை மீறும் ஒரு அகதி அந்நாட்டில் குடியிருப்பு அனுமதியை இழக்க நேரிடும். அதாவது, சிறைத் தண்டனை அல்லது இடைநிறுத்த சிறைத் தண்டனை என எந்தத் தண்டனை பெற்றிருந்தாலும் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.

இந்தக் கடுமையான சட்ட நடவடிக்கையை ஜேர்மன் குடிமக்களின் பாதுகாப்புக்காகவும், புத்தாண்டு தின வன்முறையில் ஈடுபடாத அகதிகளின் நலனுக்காகவும் உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், புத்தாண்டு தினத்தில் பெண்கள் மீது பாலியல் வன்முறைத் தாக்குதல்களை நடத்திய புலம்பெயர்ந்தவர்களின் பட்டியலில் இலங்கை மற்றும் இந்திய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜேர்

## எல்லை

பெர்லின், ஜன.11

ஜேர்மனியில் அக
பேரணி கொலோ
இடம்பெற்றது. இ
கணக்கானோர் க
புது வருட க்கு
சிலரைப் புகலிடம்
நடத்தியதால் இந்த
துடன் அகதிகளின்
கள் மூடப்பட்டுள்ள
இந்தப் பேரணியை
தண்ணீர் தாக்குதல
பயன்படுத்தினர். இ
ரம் பேர் கலந்து
கான எதிர்ப்பைத்
பாதுகாப்புத் தேடி
யல்வன்முறை இ
எதிர்ப்புத் தெரிவி
ஆர்ப்பாட்டம் இட
பேரணி இடம்பெ
னர் ஆர்ப்பாட்டக்
பவ இடத்துக்குப்
மடைந்த மக்கள்
தல்கள், உலோக
தொட்டிகளை வீசி
அடக்க முடியாத
வியை நாடியதாக
வித்துள்ளது.
குறித்த ஆர்ப்பாட்
தில் ஆர்ப்பாட்டம்
அடர்ந்த வண்ண
களை எதிர்க்கும்
பாட்டத்தில் கலந்து
ஆர்ப்பாட்டத்தில்
கள் வருகையை
மிட்டனர். அகதிகள

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ந்த சியாங்ஜிஷியான் தற்போது அழகிய சுற்றுலாத்தளமாக மாற்றப்பட்டுள்ளது. (ஐ)

# உலகைச் சுற்றி வந்து பெண் விமானி சாதனை



சிட்னி, ஜன.11

சிறிய விமானம் ஒன்றின் மூலம் 21 கிலோ மீற்றர் தூரம் பறந்து உலகைச் சுற்றி வந்து பெண் விமானி ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பெண் விமானி டிரேசி சர்டிஸ்டெய்லர் (53). இவர் கனடாவைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் சிறியவிமானம் மூலம் உலகைச் சுற்றி வந்து சாதனை படைக்கத் திட்டமிட்டார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஹம்பஸ்ர் நகரில் உள்ள பாரன் பரோலில் இருந்து 1942 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட போயிங் ரக குட்டி விமானத்தில்தனியாகத்தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

இவர் ஐரோப்பா, மேற்கு ஆசியா, மற்றும் ஆசியா உள்ளிட்ட கண்டங்களின் மீது விமானத்தில் பறந்தார். வியன்னா, இஸ்தான்புல், அம்மான், பாகிஸ்தான், இந்தியா, மியன்மார், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட 23 நாடுகளில் தரை இறங்கினார்.

இந்த நிலையில், அண்மையில் திமோர் கடலின் மீது பறந்த அவர் நேற்று முன்தினம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தரை இறங்கித் தனது பயணத்தை முடித்துக் கொண்டார்.

தனி ஆளாகச் சிறிய விமானத்தில் பயணம்செய்து இவர் சாதனையை நிகழ்த்தி

# ஒரு பயணிக்காக இயக்கப்படும் ரயில்

டோக்கியோ, ஜன.11

ஜப்பானின் வடக்குப் பகுதியில் உள்ள கொசாய்டோ தீவில் பயணிகள் ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் கமிகிர தாகிப் பகுதியில் செல்கிறது. ஆனால் ரயிலில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே சென்றது. தற்போது அந்த ரயிலில் ஒரே ஒரு பயணி மட்டுமே பயணம் செய்கிறார்.

அவர் ஒரு பாடசாலை மாணவி ஆவார். அவரை ஏற்றிச் செல்வதற்கும், இறக்கி விடுவதற்குமாக தினமும் 2 முறை இந்த ரயில் இயக்கப்படுகிறது.

அந்த மாணவி எதிர்வரும் மார்ச் மாதம் படிப்பை முடித்தவுடன் அந்தப் பகுதியில் அந்த ரயில் போக்குவரத்து நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதனாலேயே பயணிகள் ஏறாவிட்டாலும் மாணவியின் படிப்பை கருத்திற் கொண்டு இந்த ரயிலை ஜப்பான் அரசு இயக்குகிறது. (ஐ)

# ர்மனியில் அகதிகளுக்கு எதிராகப் பேரணி

## லகள் மூடப்பட்டன

1

அகதிகளுக்கு எதிரான மாபெரும் ான் நகரில் நேற்று முன்தினம் இந்தப் பேரணியில் ஆயிரக் கலந்து கொண்டுள்ளனர்.

பு ஜேர்மனியப் பெண்கள் ம்கோரி வந்த அகதிகள் தாக்குதல் ந்தப் பேரணி இடம்பெற்றது. அத் ன் வருகையைத் தடுக்க எல்லை ளன.

யைக் கட்டுப்படுத்த பொலிஸார் தலையும், மிளகு ஸ்பிறேயையும் . இந்த ஆர்ப்பாட்டத்தில் 3 ஆயி கொண்டு அகதிகளின் வரவுக் த் தெரிவித்தனர்.

வருகை தந்த அகதிகளின் பாலி இனவாதம் மற்றும் இஸ்லாத்துக்கு க்கும் நோக்கோடு இந்தப் பெரிய ம்பெற்றது.

பற்று 2 மணிநேரங்களின் பின் க்காரரைக் கலைப்பதற்காக சம் பொலிசார் விரைந்தனர். ஆவேச பொலிஸார் மீது பட்டாசுகள், போத் கத் தகடுகள், கற்கள் மற்றும் பூந் சி எறிந்தனர். ஆர்பாட்டக்காரரை பொலிஸார் அடியாட்களின் உத க ஊடகம் ஒன்று தகவல் தெரி

ட்டக்காரர் வன்முறை அற்ற விதத் ம் நடத்த முடிவு செய்திருந்தனர். ளங்களில் ஆடையணிந்து அகதி பதாகைகளைச் சுமந்த படி ஆர்ப் ந்து கொள்ள முடிவுசெய்திருந்தனர். கலந்து கொண்டவர்கள் அகதி தடுக்க வேண்டும் எனவும் கோச களின் அத்து மீறல் செயற்பாடுகள் கட்டப்படுத்தப்படவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர் முழங்கினர். இந்த ஆண்டு சிரிய அகதிகளை வரவேற்கும் ஒப்பந்தத்தை ஏஞ்சலா மேர்கல் கைவிட வேண்டும் என ஆர்பாட்டக்காரர் வலியுறுத்தினர்.



ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பேரணியைக் கட்டுப்படுத்த ஆயிரத்து 700 பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். முடிந்த அளவுக்கு அமைதியைப் பேண முனைந்தோம் எனத் தெரிவித்தார். கொலொன் நகரில் தாக்குதல்கள், திருட்டுக்கள் என்பன அதிகரித்துள்ளதாகவும் ... வதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஏஞ்சலா மேர்கல் அகதிகளுக்கு எதிரான கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். கட்டுப்பாடுகளை மீறும் அகதிகளுக்கு 3 வருட சிறைத்தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்தார். இது தொடர்பாகத் தலைமைகளுடன் ஆலோசனை நடத்தப்போவதாகவும், இச்சட்டங்கள் மூலம் பெண்கள் திடமாக உணரத்தக்க சூழல் உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாவதாரமும் தர்மமும்

கிருஸ்ணராஜா
சஞ்ஜீவன்

பூமியில் மனிதர்களுக்கு இன்பம் துன்பம் எனும் இரு பிரிவுகளைப் போல் தர்மம், அதர்மம் என்றும் உள்ளன. தர்மம் தலைசாயும் போது அதர்மும், அதர்மம் அழிவடையும்போது தர்மமும் தோன்றும். இதேபோலத்தான் தர்மம், அதர்மம் இரண்டும் ஒன்றை ஒன்று மிஞ்சும்போதே நான், எனது என்ற ஆணவ வார்த்தைகளும் அகங்காரவசனங்களும்எம்நாவிலிருந்து கொதித்தெழுகின்றன. பூமியில் படைக்கப்பட்ட ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் இறப்பு முதல் பிறப்பு வரை செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப அவற்றுக்கு அதற்கேற்ப ஜென்மங்களும் தண்டனைகளும் கிடைக்கிறது என்று ஆன்மிகம் கூறுகிறது.

### கேடு நினைப்பவர்களுக்குத் தண்டனை

ஒருவன் மனதால் ஒருவருக்குக் கேடு நினைத்தால் மனதாலும் செயல்மூலம் கேடுசெய்ய நினைத்தால் செயல்மூலமும் அவற்றுக்கேற்ப தண்டனைகள் அளிக்கப்படுகின்றன. மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழவேண்டும் என்பதற்காகவே இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் பஞ்ச தெய்வங்கள் மூலம் செய்விக்கின்றார். அவற்றை மேற் கொள்ள பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் பஞ்ச மூர்த்தங்களை இறைவன் எடுக்கின்றார்.

இந்தப்பாரில்நல்லவனாய்வாழவேண்டும் என்பதற்காக பிரம்மா படைத்தலும், அவன் வேறு எந்தத் தீய வழியிலும் செல்லாமல் இருப்பதற்காக விஷ்ணு காத்தலும், அவன் தீய வழியில் ஊடுருவும் பட்சத்தில் அவனைஅழிக்க உருத்திரன் அழித்தலையும் அவனுக்கு ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை மறைக்க மகேஸ்வரன் மறைத்தலையும் இந்த நான்கு அம்சங்களைக் கைக்கொண்டு இறைவன் ஐந்தாவது மூர்த்தமாகிய சாதிரிய மூர்த்தத்தில் தன்னை வழிபடும் அன்பருக்கு அருளல் என்னும் ஐந்தாவது தொழில் மூலமாகவும் எம்மை இரட்சிக்கின்றார்.

ஒருமுறை பூமியில் அதர்மம் தலை தூக்க ஆரம்பமாகிவிட்டது. பூமியில் காலம்காலமாக பல அரக்கர்கள் மக்களைத் துன்புறுத்திக் கொண்டுவரும் அந்த நேரத்தில் தான் நாராயணன் பாதத்தை மக்கள் அடைந்தனர். இறைவனிடம் தம்மைக் காப்பாற்றும்படி கேட்கும்போதே இறைவன் கவலை வேண்டாம் பூமியில் நடக்கும் அக்கிரமங்களை அழிக்கவும் தர்மத்தைக் காக்கவும் நான் அவதாரம் எடுக்க நேரம் நெருங்கிவிட்டது. நான் ஒன்றல்ல பத்து அவதாரம் மூலம் பிரபஞ்சத்தை ஆக்கிரமிக்கின்றேன் எனக்கூறினார்.

### தசாவதாரம் என்றால் பத்து அவதாரம்

தசம் என்றால் பத்து என்று பொருள். தசாவதாரம் என்றால் பத்து அவதாரமாகும். முதல் அவதாரம் மச்ச அவதாரம். மீனின் உருவம் கொண்டு தோன்றினார் என மச்சபுராணம் கூறுகிறது. இரண்டாவது கூர்ம அவதாரம். இது சத்திய யுகத்தில் நடந்ததென்பது நம்பிக்கை. வராக அவதாரம் மூன்றாவது அவதாரமாகும். ஹிரன்யாசுரன் என்ற அசுரனுடன் போரிட்டு வென்று தர்மம் காத்தார். நான்காவது அவதாரம் நரசிம்ம அவதாரம். இது பார்க்கக் கொடூர பயமளிக்கும் அவதாரம். இது சிங்கத்தின் தலையும் மனித உடலும் கொண்டு தோற்றமளிக்கும். ஐந்தாவது வாமன அவதாரம். வாமன உருவில் மாபலிச் சக்கரவர்த்தியை யாசித்துத் தானம் கேட்ட கதையாகும். ஆறாவது அவதாரம் பரசுராம அவதாரமாகும். பிராமணரைக் காக்க சத்திரிய குலத்தைப் பூண்டோடு அழிக்க முற்பட்ட அவதாரம். அடுத்த அவதாரம் இராம அவதாரம். சூரிய குலத்தில் தசரதச் சக்கரவர்த்திக்கு மகனாக அவதரித்து கைகேயியின் சாபத்தால் 14 ஆண்டுகள் வனவாசத்தில் இருந்தபோது இராவணனின் மூலம் சீதை கடத்தப்பட்டதால் ஹிஸ்கிந்தை அரசரான சுக்கிரீவனின் நட்பையும் அனுமரின் அன்பினால் பல்வேறு உதவியும் கொண்டு பத்துத் தலை கொண்ட இராவணனை அழித்து சீதையை மீட்டு அகங்காரத்தையும் கொடுமைகளையும் அழித்து உலகுக்கு தர்மத்தை ஏற்படுத்திய அவதாரம்.

> பூமியில் படைக்கப்பட்ட ஓரறிவு முதல் ஆறறிவு கொண்ட அனைத்து ஜீவராசிகளுக்கும் இறப்பு முதல் பிறப்பு வரை செய்யும் பாவபுண்ணியங்களுக்கேற்ப அவற்றுக்கு அதற்கேற்ப ஜென்மங்களும் தண்டனைகளும் கிடைக்கிறது என்று ஆன்மிகம் கூறுகிறது.



### வேறு அவதாரங்கள்

எட்டாவது அவதாரம் பலராம அவதாரம். அடுத்து ஒன்பதாவது அவதாரம் இது. கம்சனை அழித்து உலகுக்கு மகாபாரதப் போர் மூலம் கீதையை அறிமுகப்படுத்திய அவதாரம். அடுத்து பத்தாவதும் இறுதியுமான அவதாரம் பற்றி நாரதர் நாராயணனிடம் கேட்கும்போது எங்கும் கலப்படங்களால் சிறுவர்கள், குழந்தைகள் பாதிக்கப்படுவர். அக்கிரமங்களும் அதிகாரமும் கூடும். இதனால் உலகம் முடியும் ஊழிக்காலத்தில் அனைத்தும் கலியுகத்தில் நீரால் சூழப்பட்டு அனைத்தும் என்னுள் அடங்கி பிறிதொரு யுகம் உருவாகும் என்று அருளினார்.



# உங்களுக்கு 2016 எப்படி?

## இடபம்

உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் இடபராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். இடபராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.

### ஜூலை

சமசப்தம ஸ்தானமான 7இல் செவ்வாய், சனி சஞ்சரித்தாலும், மாத பிற்பாதியில் 3இல் சூரியன் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகளைப் பெறுவீர்கள். நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பது நல்லது. பொருளாதார நிலை குடும்ப தேவைக்கேற்ப அமையும். புத்திர வழியில் சிறு வீண்செலவுகள், மனசஞ்சலங்கள் தோன்றிமறையும். திருமண சுபகாரிய முயற்சிகளில் தடை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் இலாபங்கள் சுமாராகத்தான் இருக்கும். உத்தியோகத்தர்கள் எடுக்கும் காரியங்களைச் சிறப்பாகச் செய்துமுடிக்க முடியும். முருகப் பெருமானை வழிபாடு செய்வது உத்தமம்.

### ஓகஸ்ட்

ஜென்ம ராசிக்கு 3இல் சூரியன், 4இல் புதன் சஞ்சரிப்பதும் இம்மாதம் முதல் குரு 5ஆம் வீட்டில் சஞ்சரிக்கவிருப்பதாலும் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். சிலருக்கு வீடு, மனை, வண்டி வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் கைகூடும். பணவரவுகள் சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் பெரிய கெடுதிகள் ஏற்படாது. உத்தியோகத்தர்கள் தங்கள் திறமைகளுக்கேற்ற பாராட்டுதல்களைப் பெறுவார்கள். சிவபெருமானை வழிபாடு செய்வது உத்தமம்.

### செப்ரெம்பர்

சுக ஸ்தானமான 4இல் சூரியன், ராகு இருந்தாலும் 5ஆம் வீட்டில் குரு, சுக்கிரன் சஞ்சரிப்பதால் பணவரவுகளுக்கு பஞ்சம் இருக்காது. இதுவரை இருந்துவந்த மறைமுக எதிர்ப்புகள் அனைத்தும் விலகி முன்னேற்றத்தை அடையமுடியும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நெருங்கியவர்களை அனுசரித்து நடந்து கொண்டால் நற்பயனை அடையமுடியும். கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் செய்பவர்கள் நல்ல லாபத்தையும் அபிவிருத்தியையும் பெற முடியும். சிலருக்கு எதிர்பாராத பயணங்களால் அனுகூலமான பயன்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பணி யில் வேலைப் பளு குறையும். துர்க்கையம்மனை வழிபடவும்.

### ஒக்ரோபர்

பஞ்சம ஸ்தானமான 5இல் குரு சஞ்சரிப்பதும் மாத பிற்பாதியில் 6இல் சூரியன் சஞ்சாரம்செய்வதும் அற்புதமான அமைப்பாகும். உத்தியோகரீதியாக உயர்வுகளைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்களிடையே சிறுசிறு வாக்குவாதங்கள் தோன்றி மறையும் பணம் கொடுக்கல்-வாங்கல் விடயங்களில் சாதமான நிலையிருக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொண்டால் எதிலும் உற்சாகமாக ஈடுபட முடியும். அசையாச் சொத்துக்களால் ஓரளவுக்கு லாபம் உண்டாகும். முருகப் பெருமானை வழிபாடு செய்வது நற்பயனை உண்டாக்கும்.

### நவம்பர்

பஞ்சம ஸ்தானமான 5இல் குருவும், 6இல் சூரியனும் சஞ்சரிப்பதால் உங்கள் பலமும் வலிமையும் கூடும். எதிர்பாராத இலாபங்கள் தேடிவரும். வாழ்வில் திடீர் உயர்வுகள் உண்டாகும். எடுக்கும் காரியங்களில் வெற்றிகளைப் பெறுவீர்கள். உறவினர்களும் சாதகமாகச் செயற்படுவார்கள். குடும்பத்தில் சுபச்செலவுகள் ஏற்படும். கொடுக்கல்- வாங்கலில் சற்று கவனமுடன் நடந்துகொண்டால் வீண் விரயங்களைத் தவிர்க்கலாம். கடன்கள் படிப்படியாகக் குறையும். தொழில், வியாபாரத்தில் தடைகளைத் தாண்டி வெற்றிகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தர்களுக்குப் பணியில் நிம்மதியான நிலையிருக்கும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது உத்தமம்.

### டிசெம்பர்

சமசப்தம ஸ்தானமான 7இல் சூரியன், சனி சஞ்சரிப்பதால் குடும்பத்திலுள்ளவர்களிடம் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். என்றாலும் 5இல் குரு சஞ்சரிப்பதால் சுபகாரியங்கள் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உண்டாகும். முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நற்பயனைத் தரும். பணவரவுகள் ஓரளவுக்கு சிறப்பாக இருப்பதால், குடும்பத் தேவைகளை பூர்த்திசெய்ய முடியும். உத்தியோகத்தர்கள் பிறர் விடயங்களில் தலையீடு செய்வதை தவிர்த்து விடுவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனே முழுமனிதனாக வாழ்வாயாக!!

சைவப் புலவர்
சைவ சித்தாந்த பண்டிதர்
**அம்பலவாணர் இராஜரட்ணம்**

நாம் இந்த மானிடப் பிறப்பை அடையமுன் பல்வேறு வகையான பிறப்புக்களில் பிறந்து, உழன்று, இறந்து அந்தப் பிறப்புக்களில் செய்த நல் வினைப் பயனாக இந்த மானிடப் பிறப்பை அடைந்துள்ளோம். இதை இறையருள் பெற்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திலே நன்கு அறியக் கூடியதாக இருக்கிறது.

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

ஓரறிவு படைத்த தாவரங்களாகவும்
ஈரறிவு படைத்த நீர் வாழ்வனவாகவும்,
மூவறிவு படைத்த ஊர்வனவாகவும்,
நாலறிவு படைத்த பூச்சிகளாகவும்
ஐந்தறிவு படைத்த பறவைகள், விலங்குகளாகவும்

**ஆறறிவு படைத்த மனிதர்கள்** வாழ்ந்து ஈற்றில் ஆறறிவு படைத்த மனிதனாக நாம் பிறந்துள்ளோம். இந்த ஆறாவது அறிவு எமக்குப் படைக்கப்பட்டது சிந்திக்க வைப்பதற்கே. நான் யார்? எதற்காகப் பிறந்தேன்? எதை அடைவதற்காகப் பிறந்தேன்? எப்படி வாழ வேண்டும்? என்றெல்லாம் சிந்திக்க வைப்பதற்கே இந்த ஆறாவது அறிவு எமக்குப் பயன்படுகிறது.

எம்முற்பிறப்புக்கள் எவை? என்னென்ன பிறப்புக்களாகப் பிறந்தோம் என்பது எமக்கு ஞாபகமில்லை என்று சிலர் கூறலாம். ஞாபகம் எப்படி வரும்? மூன்றுநாள்களுக்கு முன்காலையிலும், மதியமும், இரவிலும் எவ்வகையான உணவுகள் உண்டோம் என்பதே எமக்கு ஞாபகம் இல்லாமல் இருக் கும்போது எவ்வளவோ காலங்களுக்கு முன்னரும், அதற்கு முன்னரும் நாம் அடைந்த பிறப்புக்கள் ஞாபகம் வருமா? வராது. ஆனால் கோடியில் ஒருசிலர் மாத் திரம், தான் முற்பிறப்பில் என்ன பிறப்பாகப் பிறந்தேன் என்றும், தனது பெயர் இன்னவாக இருந்தது என்றும், தனது தாய் தந்தையர் பெயர்கள் இன்னென்னவாக இருந்தன என்றும் கூறுகிறார்கள். இவர்கள் கூறியவற்றில் உண்மை இருக்கிறதா என்று ஆராய்ந் தவர்கள் ஆச்சரியப்படும் வகையில் உண்மை என்று நிரூபித்திருக்கிறார்கள். இது அபூர்வமான ஞாபகம் இருப்பவர்களுக்கே ஏற்படுகிறது.

பாதகங்களைச் செய்யத் தூண்டுகின்றன. ஆகவே ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டும். ஆசைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதனால்தான்

*ஆசை அறுமின்! ஆசை அறுமின்!*
*ஈசனோடாயினும் ஆசை அறுமின்!*
*என மொழிகிறது முதியோர் வாக்கு.*

ஆகவே மானிடராகப் பிறந்த நாம் தேகம் வேறு, நான்(உயிர்) வேறு என நினைத்து கொலை, களவு, கள், சூது, காமம் போன்ற பஞ்சமாபாதகங்கள் செய்வதை அறவே நீக்கி காமாதி தசவர்க்கங்களான காம, குரோத, கோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூசை போன்ற கொள்ளத்தகாத குணங்களை எமது மனதில் இருந்து அறவே நீக்கி, நாம் கொள்ளத்தக்க குணங்களான இச்சை, பக்தி, சிரத்தை என்பவைகளை விருத்தி செய்து, தெய்வ நிலையை அடைய முயல வேண்டும்.

**தள்ளத்தக்க குணங்களாவன**

**1. காமம் :** தனம், தான்யம், புத்திரர், பௌத்திரர்கள் மேல் அதிகம் விருப்பம் கொள்ளல், உதாரணத்துக்கு நரகாசரன்.

**2. குரோதம் :** ஒருவருக்குக் கெடுதியை உண்டாக்க [illegible] செய்ய முற்படுதல். உதாரணத்துக்கு [illegible]சரன்.

> **மானிடராகப் பிறந்த நாம் தேகம் வேறு, நான்(உயிர்) வேறு என நினைத்து கொலை, களவு, கள், சூது, காமம் போன்ற பஞ்சமாபாதகங்கள் செய்வதை அறவே நீக்கி காமாதி தசவர்க்கங்களான காம, குரோத, கோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூசை போன்ற கொள்ளத்தகாத குணங்களை எமது மனதில் இருந்து அறவே நீக்கி, நாம் கொள்ளத்தக்க குணங்களான இச்சை, பக்தி, சிரத்தை என்பவைகளை விருத்தி செய்து, தெய்வ நிலையை அடைய முயல வேண்டும்.**

**3. லோபம் :** தனது சொத்திலிருந்து துறவிகள், ஞானிகளுக்குக்கூட சிறிதளவேனும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் தோன்றுதல். உதாரணத்துக்கு துரியோதனன்

**4. மோஹம்:** புத்திர களத்திராதிகளின் மீது கொண்டுள்ள அதிகளவு ஆசையால் தனக்கென்று இருக்கும் பொருள் போதாதென்று இன்னும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசையை மனதில் எழச் செய்தல். உதாரணத்துக்கு தசரத மகாராஜன்

**5. மதம் :** செல்வம் அதிகரிப்பதால் கர்வம் மேற்கொண்டு மற்றவர்களை மதிக்காமல் அலட்சியப்படுத்திப் பேசுதல். உதாரணத்துக்கு கார்த்த வீரியாச்சுனன்.

**6. மச்சரம் :** தன்னைப்போல பிறரும் சுகமனுபவித்தலைப் பார்த்துச் சகியாமையை விளைவிக்கும் சித்த விருத்தியை உண்டாக்குதல்.

**7. டம்பம் :** பலர் மெச்ச தர்மம், யாகம், விழாக்கள் முதலியவற்றைச் செய்தல். உதாரணத்துக்கு புரூரச சக்கரவர்த்தி

**8. தர்ப்பம் :** புத்திர மித்திராகளத்திர தன தான்யாதி சம்பத்துக்களில் தனக்கு நிகரானவர் ஒருவருமில்லை என்று கர்வப்படுதல். உதாரணத்துக்கு பரசுராமன்

**9. ஈர்ஷை :** தனக்கு நேர்ந்த துக்கம் பிறருக்கும் நேரிட வேண்டுமென்று எண்ணுதல். உதாரணத்துக்கு அருணாஷதன்

**10. அசூயை :** கெடுதிசெய்தவனுக்குக் கெடுதி விளைவிக்க வேண்டும் என்று எண்ணுதல். உதாரணத்துக்கு புவனரீக வாசுதேவன்.

**கொள்ளத்தக்க குணங்களாவன**

**1. இச்சை :** அன்னம், பானம் உட்கொள்ளவும் மல மூத்திரங்களை வெளியில் தள்ளவும் செய்ய விரும்புதல். இவைகளைச் செய்யாவிடில் தேக உபாதை உண்டாகும்.

**2. [illegible] :** குருவிடத்தும், ஈஸ்வரனிடத்தும் [illegible] நேயம் வைத்து இடைவிடாமல் பேரன்புடன் துதித்தல்.

**3. சிரத்தை :** குருவாக்கியத்திலும், சாஸ்திரத்திலும் முழு நம்பிக்கை வைத்தல்.

முன்கூறிய பத்துக் குணங்களும் பிறவிக் கேதுவாகிய பலவித எண்ணங்களை விளைவித்து ஜனன, மரணமென்னும் சமுத்திரத்தில் ஆன்மாவை அழுந்தச் செய்யும். ஆகவே அவைகளை அறவே நீக்கிவிட்டு பின்கூறிய மூன்று குணங்களையும் கடைப்பிடித்து வந்தால் நிச்சயம் முத்தியடையலாம். இதையே திருவியலூர் உய்ய வந்ததேவர்.

*தோன்றும் குணங்கள் பத்தும் நீக்கிப் பின்*
*மூன்று குணங்கொள்வோ ருந்தீபற*
*முழுமூச்சுக் களாவாரென்றுந் தீபற!*
*என்கிறார்.*

*ஆகவே இந்தப் பூவுலகில் மனிதர்களாகப் பிறந்த நாம் முழுமனிதனாக வாழ்ந்து இறைவனோடு இரண்டறக் கலக்க எம்மாலான முழு முயற்சியையும் இந்தப் பிறப்பிலேயே மேற்கொள்ளுவோமாக!!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1569 - இங்கிலாந்தின் முதலாவது அரச லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்றது.

1902 - (பிரபல்யமான இயந்திர வல்லுனர்) ... சஞ்சிகை முதலில் வெளியிடப்பட்டது.

1913 - நியூயோர்க் தேசிய தன்னியக்கக் கண்காட்சியில் ஹட்சன் மோட்டார் கம்பனியால் உருவாக்கப்பட்ட மூடு கார் வண்டி காட்சிப்படுத்தப்பட்டது.

1922- ரொறன்ரோ பொது மருத்துவமனையில் இன்சுலின் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

1935 - ஹவாயிலிருந்து கலிபோர்னியாவுக்கு முதன் முதலில் தனியாகப் பறந்த பெண்மணியான அமெலியா ஏஹாட்புட்னம் சாதனை

1942 - நெதர்லாந்துக்கு எதிராக ஜப்பான் போர்ப் பிரகடனம்

1964 - சிகரெட் புகைப்பது நிச்சயமாக உடல் நலத்துக்கத் தீங்கானது எனும் அறிக்கையை அமெரிக்க சத்திரசிகிச்சை நிபுணர் ஜெனரல் லூதர் ரெறி வெளியிட்டார்.

1972 - கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் எனப் பெயர் மாற்றம்

1978 - அலெக்ஸாண்டர் கம்பல் அவர்களால் முதன் முதலில் கண்ணாடிப் போத்தல்களில் பால் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

1977 - 1972 முயூனிச் ஒலிம்பிக் போட்டியின் போது இஸ்ரேல் மெய்வல்லுநர்கள் படுகொலையில் சம்பந்ததாகக் கூறப்படும் பலஸ்தீனியரான அபுதாவுத்தை பிரான்ஸ் விடுவித்தது.

1978 - விண்ணில் வலம் வரும் சோயுஸ் 6 உடன் சோயுஸ் 27 விண்கலம். இரண்டு சோவியத் விண்வெளி வீரர்களுடன் இணைந்து கொண்டது.

1980 - செஸ் வரலாற்றில் வயதில் மிகவும் குறைந்தவரான பிரித்தானியாவைச் சேர்ந்த நைகல் ஷோட் (14வயது) சம்பியனானார்.

1994 - மடுவில் மீண்டும் பணியாற்ற ஐ.நா. தூதரகம் முடிவு

1994 - 60 ஆயிரம் ஆப்கான் அகதிகள் பாகிஸ்தானுக்குள் தஞ்சம்

1994 - ஸ்ராலின் கால புதைகுழி லித்துஎனியாவில் கண்டுபிடிப்பு

1995- சரியான சமாதானப் பேச்சுக்கள் அதன் பின்னரே அபிவிருத்தி என அமைச்சர்களுக்கு சந்திரிகா தெரிவிப்பு

1995 - தேவாலயம் விகாரை என்பன மாறி மாறித் தாக்கப்பட்டதையடுத்து சீதுவையில் பதற்ற நிலை

1998 - அல்ஜீரியா II சிடி ஹமீட் படுகொலையில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

2008 - மகேஸ்வரனின் கொலை மர்மத்தை மூடி மறைக்க அனுமதிக்க மாட்டோம் என நாடாளுமன்றில் ரணில் சூளுரை.

2008 - ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் அதிகரிக்கும் நிலை குறித்து சர்வதேச அமைப்பு ஜனாதிபதிக்கு கவலை தெரிவித்துக் கடிதம்.

2008 - உதயனுக்கு விடுக்கப்படும் மிரட்டல். சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

2008 - பன்முகப் பணியாளர் அமரர் எஸ்.கே. திருச்சிற்றம்பலம். சமூக மேம்பாட்டுக்கு அடக்கத்துடன் உழைத்த பன்முகப் பணியாளர். உதயன் சஞ்சீவி வெளியீடிற்கு அத்திபாரம் இட்டவர். அவரது முதலாவது ஆண்டுத் திதி. பிறப்பு 1931 நவம்பர் 26

2008 - எவரெஸ்ட் சிகரத்தில் வைத்த கால் ஹிலாரி தமது 88 ஆவது வயதில் காலமானார். 1953ஆம் ஆண்டு மே 29 ஆம் திகதி எவரெஸ்ட் சிகரத்தை முதலிலடைந்த பெருமை பெற்றார்.

2009 - இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே ஒரே வழியென 178 நாடுகளின் தூதுவர்கள் மாநாட்டில் பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் வத்திக்கானில் தெரிவிப்பு

2009 - லசந்த படுகொலை; கோத்தபாயாவின் தலைமையில் இயங்கும் ஆயதக் குழுவே காரணம் என மங்கள சமரவீர குற்றம் சுமத்தினார்.

# போட்டானே ஒரு போடு!

ஓநாய் ஒன்று காட்டில் வசித்து வந்தது.
அது மிகவும் கொடிய மிருகம். அப்பாவிப் பறவைகளையும் பிராணிகளையும் பிடித்து உண்ணும்.
அந்த ஓநாயின் கண்களில் கொழுத்த ஆட்டு மந்தை ஒன்று பட்டுவிட்டது.
மந்தையில் ஏராளமான ஆடுகள் இருந்தன. எல்லாமே நன்றாக உண்டு கொழுத்திருந்தன.
ஓநாய்க்கு நாவில் நீர் சொட்ட ஆரம்பித்தது.
ஆஹா! எத்தனை அருமையான ஆடுகள். பசுமையான புற்களை உண்டு கொழுத்திருக்கின்றன. இவற்றின் மாமிசம் தேவாமிர்தமாய் இருக்கும். ஒரு கை பார்த்துவிடுவோம்! என்று நினைத்த ஓநாய், ஆட்டு மந்தையை நெருங்க நேரம் பார்த்துக் கொண்டிருந்தது.
ஆட்டு மந்தையின் மேல் உடனே பாய்ந்து ஒன்றைத் தூக்கிக் கொண்டு செல்லவும் முடியாது. காரணம்
ஆட்டு மந்தையின் சொந்தக்காரன், பெரிய கைத்தடி ஒன்றை ஏந்திய படி மந்தையைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தான்.
அவன் கைத்தடியைப் பார்த்துத்தான் ஓநாய்க்குப் பயம். அதனால் ஓங்கி ஒரு போடு போட்டால் போதும், எலும்புகள் அத்தனையும் நொறுங்கி உடனே பரலோகம்போக வேண்டியது தான்.
அதனால்தான் துணிச்சலைத் தவிர்த்து விட்டு யோசித்துச் செய லாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது.
இப்படியே சில நாள்கள் கழிந்தன.
ஒருநாள்
ஆட்டுச் சொந்தக்காரனின் வீட்டை நோட்டம் பார்த்துக் கொண்டிருந்த ஓநாய், ஓர் ஆட்டுத்தோலைப் பார்த்தது.
அது வேலியோரம் கிடந்தது.
அதைப் பார்த்ததும் ஓநாய்க்கு ஒரு யோசனை தோன்றியது.
உடனே அந்தத் தோலை எடுத் துக்கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது.
மறுநாள் காட்டை ஒட்டிய மலையடிவாரத்தில் ஆட்டு மந்தை மேய்ந்து கொண்டிருந்தது.
மந்தையின் சொந்தக்காரன் தடியைச் சுழற்றியபடி மந்தையை மிகவும் கவனத்துடன் காவல் காத்துக் கொண்டிருந்தான்.
தடியைப் பார்த்ததும் மறைந்திருந்த ஓநாயின் நெஞ்சு பகீர் என்று அடித்துக் கொண்டது.
தடியைப் பற்றிய பயம் ஒரு பக்கம் இருந்தாலும், கொழுத்த ஆடுகளைக் கண்களால் பார்த்துவிட்டுச் சும்மா போகமுடியுமா?
ஓநாய்நேற்றுஎடுத்துவந்திருந்தஆட்டுத்தோலைத் தன் உடம்பின் மீது போர்த்திக் கொண்டது.



பார்த்தால் அது ஓர் ஓநாய் என்று சொல்லிவிட முடியாது. அந்தத் தோல் ஓநாய்க்குக் கச்சிதமாய்ப் பொருந்தியிருந்தது.
மந்தையின் சொந்தக்காரன் சற்றுத் தூரம் நடக்கட்டும் என்று காத்திருந்த ஓநாய் அவன் நகர்ந்ததும், மெதுவே பதுங்கிப் பதுங்கி ஆட்டு மந்தையின் உள்ளே ஓர் ஆடுபோல் புகுந்துவிட்டது.
பிறகு அது மந்தையுடன் சேர்ந்து புல்மேய்வதைப் போல் நடித்தது.
தன் அருகில் மேயும் கொழு கொழு ஆடுகளைக் கண்டு நாக்கை சப்புக் கொட்டியவாறு பொறுமையாகக் காத்திருந்தது. மாலை மயங்கியதும் ஆட்டு மந்தையை தனது வீட்டுக்கு ஓட்டிச் சென்றான் மந்தையின் சொந்தக் காரன்.
ஓநாயும் மிகுந்த எச்சரிக்கையுடன் மந்தையுடன் கலந்து அவன் வீட்டுக்குச் சென்றது.
மந்தையின் சொந்தக்காரன் கொட்டிலுக்குள் அத்தனை ஆடுகளையும் அடைத்தான். பிறகு வீட்டுக்குள் செல்ல முற்பட்டபோது, வாயிற்படியில் அவனது மகளும் மருமகனும் பேரக் குழந்தையும் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். உடனே அவனுக்கு மகிழ்ச்சி கரை புரண்டது.
அடடே! வாங்க வாங்க! என்று அழைத்து எல்லோரையும் வீட்டுக்குள் அழைத்துப் போனான்
ராமாயி! உன் வீட்டுக்காரருக்கு ராத்திரி ஆட்டுக்கறிக் குழம்பு செஞ்சு குடு. மருமகன் ஆட்டுக்கறி சாப்பிடறதைப் பார்த்து நாளாச்சு. நான் கொட்டிலுக்குப் போய், கொழுத்த ஆடு ஒண்றைப் பிடிச்சுட்டு வரேன்! என்று சொல்லி விட்டு ஆட்டுக்கொட்டிலுக்கு வந்தான்.
எந்த ஆடு நன்றாக இருக்கும் என்று ஒவ்வொரு ஆட்டையும் பார்த்தான்.
அப்பொழுது ஓர் ஆடு மட்டும் சற்று வித்தியாசமாக இருப்பதைக் கவனித்து, மிகவும் ஆச்சரியத்துடன் அதன் அருகே சென்றான்.
அந்த ஆட்டைக் கூர்ந்து கவனித்த போதுதான் அது ஆடு அல்ல, ஏதோ ஒரு மிருகம்... ஆட்டுத் தோலைப் போர்த்தியபடி கொட்டிலுக்குள் நுழைந்திருக்கிறது என்று தெரிந்தது.
நிச்சயம் அது ஓநாயாகத்தான் இருக்கும் என்று யூகித்த அவன் சந்தடியில்லாமல் நகர்ந்து சென்று அந்தக் கைத்தடியை எடுத்தான்.
அவன் வந்ததையோ தன்னைப் பார்த்துச் சந்தேகப்பட்டதையோ கைத்தடியை எடுத்ததையோ அறிந்திராத ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய் ஆட்டைப் பற்றியே நினைத்து கொண்டிருந்தது.
மந்தை சொந்தக்காரன் கைத்தடியை இறுகப் பற்றியபடி ஓநாயை நோக்கி மெல்ல அடி வைத்து வந்தான்.
அருகே வந்ததும் கைத்தடியை ஓங்கி ஓநாயின் முதுகில் அசுரத்தனமாக ஒரு போடு போட்டான்.
பொறி கலங்கிப் போன ஓநாய் ஒரு துள்ளுத் துள்ளியது. அப்போது மேலே போர்த்தியிருந்த ஆட்டுத்தோல் கழன்று விழுந்தது. ஓநாய் பளிச் என்று புலப்பட்டது.
நினைத்தேன்! என்று முனகிய மந்தையின் சொந்தக்காரன் தடியை இரண்டாவது முறையாகச் சுழற்றி ஓநாயின் முதுகில் அடித்தான்.
இரண்டாவது அடியில் கத்தக்கூடத் திரணியின்றி ஓநாய் சுருண்டு விழுந்தது.
ஆட்டுச் சொந்தக்காரன் மூன்றாவது அடியை ஓநாயின் பின்பகுதியில் இறக்கினான்.
ஆட்டின் உயிரைக் குடிக்க ஆசைப்பட்டு வந்து ஓநாய் தன் உயிரை விட நேர்ந்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகங்களுக்கு பதில் கிடைக்குமா?

கடந்தகாலப் போரின் பின்னர் வடக்கில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றுதான் அரசியல் வாதிகளாலும், ஒரு சில அதிகாரிகளாலும் உருவாக்கப்படுகின்ற பொது அமைப்புக்கள்.

பொது அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டு இவர்கள் பல அமைப்புக்களைத் தங்களுடைய தேவைகளையும், நற்பெயர்களையும் கருத்திற்கொண்டு ஆங்காங்கே உருவாக்கி விடுகின்றார்கள். இந்த அமைப்புக்களை உருவாக்குவதோடு அவர்களுடைய நோக்கம் நிறைவேறி விடுகின்றது.

அதுவும் குறித்த அமைப்புக்களை உருவாக்கும் போது ஊடகங்களுக்கு பெரியளவிலான அறிவித்தல்களும், ஊடவியலாளர் சந்திப்புக்களும் மேற்கொள்ளப்படும், பின்னர் அமைப்பை ஆரம்பிக்கும்போது அதாவது திறந்து வைக்கும் போது அதற்கும் ஊடகங்களுக்கு அறிவித்தல்கள் விடப்படும், இதை வைத்துக் கொண்டு குறித்த அமைப்புக்களால் மக்களுக்கு ஏதாவது அபிவிருத்திகள் இடம்பெறும் என்ற அடிப்படைச் சிந்தனையில் ஊடகங்களும் அவர்கள் கூறுவதை அப்படியே பிரசுரித்து விடுகின்றன. இத்தகைய செய்திகள், கட்டுரைகள் தான் அரசியல் வாதிகளின் அரசியல் பேச்சுக்களுக்கும், அவர்களுடைய ஏமாற்றுச் சிந்தனைகளுக்கும் வழிகளை அமைத்துக் கொடுக்கின்றன. இப்படிப்பட்ட வாக்குறுதிகள், உசுப்பலான மேடைப்பேச்சுக்கள் என்பன அரசியல் வாதிகள் தங்களுடைய பெயரைத் தக்க வைத்துகொள்வதற்கான ஒரு நாடகமே எனப் பல சம்பவங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு எண்ண முடிகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவடைந்து 5 வருடங்கள் முடிவடைந்து புதிய அரசும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு விட்டது. இந்தப் புதிய அரசின் ஜனாதிபதி, பிரதமர், இருவரும் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் கிளிநொச்சிக்கு வருகை தந்து பொது மக்கள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மத்தியில் கூறிய இரண்டு விடயங்கள் தான் அடுத்த நாள் பிராந்திய மற்றும் தேசிய பத்திரிகைளில் பிரதான செய்திகளாகக் காணப்பட்டன. அதில் ஒன்று போரினால் பாதிக்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளாக்கப்பட்டவர்களுக்கான ஒரு அமைப்பை உருவாக்குவது, அடுத்தது இன்னும் பிரதானமானது, அது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான தேசிய செயலகம் ஒன்றை கிளிநொச்சியில் அமைப்பது என்பது. இவை இரண்டும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பிரதானமான இரு விடயங்கள். ஏனெனில் இன்று வறுமையின் உச்சக் கட்டத்தில் இருப்பவர்கள் இந்த இரண்டு பகுதியினருமே. எனவே இத்தகைய அமைப்புக்களினால் இனி இவர்களுடைய வாழ்க்கையிலும் ஒளியேறும் எனப் பலர் பல கனவுகள் கண்டார்கள். ஆனால் நடந்தது என்ன? மாற்றுத் திறனாளிகள் இன்னமும் தங்களுடைய சங்கத்தைக் கூட தக்கவைக்க முடியுமா என்ற வகையில் உள்ளார்கள் அவர்களுக்கு சிறு சிறு உதவிகள் வழங்கிய போதும் இது வரை அவர்களுக்கான நிரந்தரமான ஒரு தீர்வும் வழங்கப்பட்டவில்லை. அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டாவது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்காக தேசிய செயலகம் கிளிநொச்சியில் அமைப்பது. இது பல முறை கூறிய விடயம். இன்று அமையும் நாளை அமையும் என எத்தனை பேச்சுக்கள். இவ்வளவு பேச்சுக்களின் பின்னர் கிளிநொச்சியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்காக தேசிய செயலகம் என்னும் பெயருடன் ஒரு அமைப்பு திறந்து வைக்கப்பட்டது.




ஆனால் அதனுடைய பணிகள் இன்று நடைபெறுகின்றனவா? அங்கே என்ன நடைபெறுகின்றது? வெறுமனே கட்டடத்தைத் திறந்து வைத்ததுடனும், மேடைப் பேச்சுக்கள் நிகழ்த்தியதுடனும் அவர்களுடைய வேலைகள் முடிந்து விடுகின்றன. அது நகர்ந்து செல்கின்றதா இல்லையா, என்று கேட்டால் அதற்கான பதில் அவர்களிடம் இருந்து வரப் போவதில்லை. கிளிநொச்சியில் திறக்கப்பட்ட குறித்த செயலகம் இன்று பூட்டப்பட்ட நிலையில் அதனுடைய பணிகள் முன்னெடுக்கப்படாமல் கிடப்பிலேயே கிடக்கின்றது. இதற்கு யார் பொறுப்பு? இவ்வாறு செயற்பாடுகள் அற்றுக் காணப்படும் குறித்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்காக தேசிய செயலகத்தின் முடிவுதான் என்ன? சம்மந்தப்பட அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் இதைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? ஏதாவது அரசல் புரசல் இருக்குமோ? என்ற சந்தேகங்கள் எழுப்பப்படுவதற்கு பதில் கூறுவார்களா?

# எண்ணம் பெறும் வடிவம்

பி.குருசரன்

மாபெரும் சண்டமாருதரான ஸிஸரோ கூறினார்; சுருங்கச் சொல்லி விளங்க வைத்தால்தான் ஒரு சட்டசபை அங்கத்தினரிடமாகட்டும், ஒரு பிரசங்கியிடமாகட்டும், போற்றத்தகுந்த குணம் ஆகும் என்று. ஆனால், மிகைப்படக்கூறுதல் தவறு எனக்கருதி சொல்ல வேண்டிய விடயத்தைப் பூரணமாகச் சொல்லாது குன்றக்கூறி விடுவதும் அதேபோன்று தவறுதான். ஆகையால் கூறவேண்டியதைக் குறைவான வார்த்தைகளால் தெளிவாக எடுத்துரைக்க வேண்டியது அவசியம் ஆகும்.

வெற்றி பெறுபவனின் மேலான குணம் என்னவென்றால் சுற்றி வளைத்துக் கொண்டு சொல்லாது நேரடியாக விடயத்தைக் கூறுவதுதான். அவர் ஒரு விடயத்தின் மேலேயும் செல்ல மாட்டான். கீழேயும் செல்ல மாட்டான். சுற்றி வளைத்துக் கொண்டும் செல்ல மாட்டான் நேரடியாகஅவன்துளைத்துக்கொண்டே செல்வான். என்னிடம் அவர் ஒரு விடயத்தைக் கூறுவதாயிருந்தால் அந்த விடயத்தின் இருதயத்தை நோக்கி அவனுடைய பேச்சுக்கள் செல்லும். அத்துடன் உன்னுடைய இருதயத்தையும் அவன் விரைவில் கைப்பற்றி, தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வான். ஆனால் பலர் இந்த உண்மையை அறியாது கேட்பவனின் பொறுமையும் வற்றி உலர்ந்து வெறுப்பாக மாறும் வரையில் வந்த விடயத்தைக் கூறுவதில்லை. எனவே அவர்கள் கூறவந்தது மேலான காரியமாயிருந்த போதிலும் கைகூடாமல் போய்விடுகிறது.


பிரகாசமான வாழ்வைப் பெற்றிருப்பார் என்று நாம் எதிர்பார்த்த பலர் வாழ்க்கையில் அவ்வளவு மகத்தான வெற்றியை பெறாததற்கு காரணம், ஆணியின் தலையில் ஓங்கி அடிக்கத் தெரியாத தன்மையால்தான்.

மகத்தான விஞ்ஞானி எடிசன் கூறினார், நான் எதையும் வார்த்தைகள் ஆகச் சிந்திப்பதில்லை, எல்லாவற்றையும் படமாகத்தான் பார்க்கிறேன் என்று. கற்பனைதான், உலகை ஆள்கிறது என்றான் நெப்போலியன். இரவு முழுவதும் உட்கார்ந்து பிரெஞ்சு நாட்டுப் படத்தை வைத்துக்கொண்ட துருப்புகளை அங்கும் இங்கும் நகர்த்திக் கொண்டிருப்பானாம் நெப்போலியன். அவனது கற்பனைகளே பின்னால் சரித்திரமாக மாறின.

ஹென்றி கெய்சர் என்ற அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர் கூறினார், உன் எதிர்காலத்தை நீ விற்பனை செய்து கொள்ளலாம் என்று. இவ்வளவு எளிதாக எதிர்காலம் இருக்கும்போது நாம் ஏன் கற்பனை செய்ய மறுக்கிறோம்?

நாம் நமக்கு வேண்டியதைப் பற்றி தினமும்வேண்டிக் கொள்கிறோம்; தினமும் பிரார்த்திக்கிறோம். வேண்டுகோள் என்பது நாம் திரும்பத் திரும்ப எம் ஆண்டவனிடம் கூறுவதாகும், அல்லது மனத்துக்கு கூறுவதாகும்; திரும்பத்திரும்ப எம் வேண்டுகோளைக் கற்பனையில் காண்பதாகும். இப்படிச் செய்யும்போது நாம் காணும் கற்பனை ஆழ்மனத்தில்பதிகிறது. காலையில் நீ உன்னை முழுவதும் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும். அவ்விதம்நீசென்றால்தான் உன்னுடைய வேலையும் சம்பூரணத் தன்மையுடன்விளங்கும். விடியற்காலையில் விரியக்கூடிய பூக்கள் போன்று நீயும் புதிதாகவும், உற்சாகத்துடனும் பூரண சக்தியுடனும் காரியங்களை ஆற்றப்புகின் அந்த நற்பண்புகளெல்லாம் உன்னுடைய வேலையில் தங்களின் சாயலைப் பதியவைத்துக் கொண்டே செல்லும். ஆனால், அதற்கு மாறாக இரவு முழுவதும் கண்விழித்து, சக்திகளையெல்லாம் வீண்விரயமாக்கிவிட்டு, காலை எட்டு மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்த காரியாலயத்துக்குச் செல்பவன் முழுமனிதனே அல்ல. அவன் தன்னுடைய பாகங்களை அங்கேயே விட்டுவிட்டுச் செல்கின்றான்: அவனுடைய வேலையும் அவன் மாதிரியே இருக்கும். அதில் ஒரு விறுவிறுப்போ, வலிமையோ, தெளிவோ எதனையும் நாம் காண முடியாது. முழு மனிதனாக வேலை செய்யாதவர்கள் தோல்வியை விலை கொடுத்து வாங்குகின்றனர். தங்களுடைய சக்தியை ஊதாரித்தனம் செய்ததன் காரணமாகத் தங்களுடைய கால்களை வேண்டா வெறுப்பாக காரியாலயத்துக்கு இழுத்துச் சென்று வேண்டா வெறுப்புடன் மேசை முன் அமர்ந்து, வேண்டா வெறுப்புடன் வேலை செய்கின்றார்கள். இவ்வாறு அழுகிப்போன நாள்களைக் கழிக்கின்றவர்கள் எவ்விதம் தங்களின் வாழ்நாளை வெற்றிகரமாகக் கழிக்க முடியும்?

> “விடியற் காலையில் விரியக்கூடிய பூக்கள் போன்று நீயும் புதிதாகவும், உற்சாகத்துடனும் பூரண சக்தியுடனும் காரியங்களை ஆற்றப்புகின் அந்த நற்பண்புகளெல்லாம் உன்னுடைய வேலையில் தங்களின் சாயலைப் பதியவைத்துக் கொண்டே செல்லும்.”



தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | | 8 | | | | | |
| | | 3 | | | 6 | | 2 | |
| | | 7 | 1 | | | | | 6 |
| 1 | 4 | | | | | 3 | | |
| | | | 4 | 1 | 5 | 6 | | |
| | | 2 | | | | 4 | 7 | 1 |
| 7 | | | | | 9 | 8 | | |
| | 8 | | | | 1 | 2 | | 7 |
| | 2 | | | 8 | 7 | | 6 | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 |
| 9 | 7 | 5 | 2 | 8 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 |
| 6 | 3 | 9 | 1 | 5 | 8 | 2 | 4 | 7 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 4 | 5 | 6 | 3 |
| 5 | 2 | 4 | 3 | 7 | 6 | 8 | 1 | 9 |
| 8 | 9 | 2 | 6 | 3 | 7 | 4 | 5 | 1 |
| 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 9 | 6 |
| 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 7 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தொழிலதிபராக ஷாம்



"குப்பி", "வன யுத்தம்", "காவலர் குடியிருப்பு" ஆகிய படங்களை இயக்கியவர் ஏ.எம்.ஆர்.ரமேஷ். இப்போது "ஒரு மெல்லிய கோடு" படத்தை இயக்கி உள்ளார். இந்தப் படத்தில் அர்ஜுன், ஷாம், மனீஷா கொய்ராலா, புதுமுகம் அக்ஷா பட் உட்பட பலர் நடிக்கின்றனர்.

இந்தப் படத்தில் இளம் தொழில் அதிபராக நடிக்கிறார் ஷாம். அவரது மனைவியாக மனீஷா கொய்ராலா நடிக்கிறார். இதில் தடயவியல் சோதனை முக்கிய இடம் பெறுகிறது. படம் அங்கிருந்து தான் ஆரம்பிக்கும். இதற்காக தடயவியல் சோதனை கூட அரங்கு பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் சினிமாவுக்கு புதிதாக இருக்கும். இந்தப் படத்தில் அர்ஜுனுடன் நடிக்கிறார். விரைவில் படம் வெளிவரும் என்பதை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது.

**இடபம்:** சிறிய பணி கூட கடினமாகத் தோன்றும். தொழில், வியாபாரம் வருமானம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**மிதுனம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபார வளர்ச்சியால் அமோக இலாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களின் வளர்ச்சிக்கு துணை நிற்பீர்கள்.

**கடகம்:** செயல்களில் புதுமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். சுப விடயத்தில் நன்மை மேலோங்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் ஆதரவு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கன்னி:** நண்பர்களிடம் விரக்தி மனதுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு கூடும். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும்.

**துலாம்:** புதியவர் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்புண்டு. மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**விருச்சிகம்:** பிறரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியை சரிசெய்வது நல்லது. இலாபம் சுமார். உடல்நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.


**தனுசு:** உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மகரம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம். பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் தேவை.

**கும்பம்:** கவனக்குறைவாக செயற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நீண்டநாள் விவகாரத்தில் நல்ல தீர்வு கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பை பெற்று மகிழ்வர்.

உன் பிள்ளை ஊனமாய் பிறந்தால்
சொத்து சேர்த்து வை



சொத்து சேர்த்து வைத்து பிள்ளையை
ஊனம் ஆக்காதே...



இப்ப ஏதிர்ல லைட் போட்டு வாங்க,
டா பார்ப்போம்...

பேஸ் புக்கில் பிடித்தவை...

# இது எப்படி....?

வட்ஸ்அப்பில் படித்ததில் பிடித்தது

**காதலி:** நம் பெற்றோர் சம்மதித்தால் கல்யாணம், இல்லையேல் தற்கொலை தான்.
**காதலன்:** (மனசுக்குள்) ம்க்ஹும், எனக்கு ரெண்டுமே ஒன்னு தான்.

**ஆசிரியர்:** கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?
**மாணவி:** அது கொசு இல்லா காலம் சார்!

**ஆசிரியர்:** அக்கால ஆட்சி முறைக்கும், இக்கால ஆட்சி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
**மாணவி:** அக்கால ஆட்சிமுறை கல்வெட்டு-ஆட்சி. இக்கால ஆட்சிமுறை "கட்-அவுட்" ஆட்சி.

**ராமு:** உன் காதலி உனக்கு மோதிரம் பரிசாக கொடுத்தாளே! என்ன சொல்லி கொடுத்தா?
**சோமு:** நாலு கை மாறி வந்த ராசியான மோதிரம் என சொல்லி கொடுத்தாள்.



ஸ்வீட்⭐ராஸ்கல்⭐ஷக்தி @Sakthivel_Talks · 27 Dec 2015
நம்மில் பலரும் சின்னச் சின்னப் பலவீனங்களை இறுகப் பற்றிக் கொண்டு, வாழ்க்கை என்கிற கண்ணாடியை அவ்வப்போது நாமே உடைத்து விடுகிறோம்...
22 13

மீனம்மா @meenammakayal · 27 Dec 2015
வளைந்து நெளிந்து யூ டர்ன் அடித்ததெல்லாம் சென்று கொண்டிருக்கிறது வாழ்க்கை... நான் நேராய்தான் போவேன் என்றால் எங்கயாச்சு விழுந்து தான் வைக்கணும்.
24 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தி நிற்கும் நான்காம் ஆண்டு நினைவு மலர்



## திருமதி
## மகேஸ்வரி சுப்பிரமணியம்

தாய் மடியில்
15.12.1936

மண்ணில் பிடியில்
26.12.2011

(திதி: திதியை 11.01.2016– திங்கட்கிழமை)

**"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" - குறள்**

காலமெல்லாம் கலங்கவிட்டுக் கணப்பொழுதில் மறைந்த தெய்வமே! ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை. இதயத்தின் வேதனையும் குறையவில்லை. இருந்தும் இவ்வுலகை நீங்கள் அகன்று இன்று நான்காம் ஆண்டுகள் ஆகினவோ. வையகத்தில் நீங்கள் வாழ்ந்தபோது வாழ்வு எமக்கு வசந்தமாய் ஆனது. வானுறையும் தெய்வத்துள் கலந்தபோது வாழ்வே எமக்கு இல்லை என்றாகியது. தரணியில் உமக்கு இணையாருமில்லை. தவிக்கின்றோம் . உம் வழிகாட்டல் ஏதுமின்றித் தவிக் கின்றோம் அம்மா. பிள்ளையார் முருகன் அருள் வேண்டி நிற்கிறோம். அவர்கள் உதவியோடு வாழ்கிறோம் தாயே! என்றும் நாம் சிறக்கத் தந்ததருள்வாய் ஆசீர்வாதம்.

தாயே நின்பாதம் சரண் அடைவோம். தாயே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

இல.04,
செட்டித்தெரு,
நல்லூர்

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(67520)(11.15)

# ஓராண்டு நினைவாக!



## செல்வன் சுரேந்திரன் மீனலக்ஷன்

பூந்தளிராக
26.09.2000

இடைநடுவில்
23.12.2014

யா/சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன் - தரம் -10

வாழ்க்கைதனை வாழ முன்பே ஈவிரக்கமற்ற கொடிய காலனவன் உன்
உயிரைப் பறித்துச் சென்றானோ?
பள்ளி வயதினில் துள்ளி விளையாடும் கட்டிளம் காளையனின்
உயிரைக் கிள்ளிச்சென்றானோ!

ஐயோ ஐயா!! எங்கையா சென்றீர்?
நாமிங்கு தினமும் கண்ணீரில் கரைகின்றோம்
வாருமையா இவ்வையகத்தில் எம்மத்தியில் மறுபிறப்பெடுத்து ஏழ்மை மனம்
ஏங்குதையா உன்னைக் காண
உன் புன்னகை காண வாருமையா!!

அன்னாரின் ஒருவருட ஞாபகார்த்தமாக இன்று அவரின் இல்லத்தில்
நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து **நாவலர் வீதியில் அமைந்துள்ள
தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில்** (TCT)
நடைபெறும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!! சாந்தி !!சாந்தி !!


இந்த் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

383/1, நாவலர்லேன்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(E 28638) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*March 19 th of 2016* இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

# IELTS

THIS IS NOT CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

IELTS பாடங்களை படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.

இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Course Schedule

Mon, Tues, Wed, Thur
10 Week
8.30 - 10.30, 5.00 - 7.00

Saturday & Sunday
Duration 10 Week
Time 8.30 - 11.00

**IELTS**
LIFE SKILLS A1

"IELTS Registration Center for British Council"

## British College of English

No.192, Navalar Road Jaffna.(பெருமாள் கோயிலுக்கு சமீபமாக)
Tel: 021 222 0384, 0778803887

---

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

## தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி, கேரளா ஊடான யாத்திரை

நாள்கள் 16, ஆரம்பம். 27.01.2016. யாத்திரீகர்கள். 10.

தரிசிக்கும் ஆலயங்கள் சுருக்கமாக திருச்சி, உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, 9 நவக்கிரக ஆலயங்கள், ஆறுபடைவீடுகள், குருவாயூர், கன்னியாக்குமரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 5 பொற் கோயில், இராமேஸ்வரம், பிரம்மாகோயில், திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சவடி, ஆஞ்சினேயர், மைசூர், சாமுண்டீஸ்வரி, மணக்குள விநாயகர், பத்மநாதசுவாமி, திரு விடைமருதூர், திருவையாறு உட்பட 60இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன், மைசூர், பிருந்தாவனம், பாலஸ், மரீனாபீச், பாண்டிச்சேரி பீச்சும் காணலாம். (ஆலயங்கள் அனைத்திலும் பூசை நேரத்தில் தவறாது தரிசிக்கலாம்)

பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை

இருவழி விமானரிக்கட், மூன்றுவேளை சுத்தமான உயர்தர சைவ உணவு, 2 லீற்றர் குடிநீர், கொழும்பில் இருந்து விமானநிலையம் செல்லவும் திரும்பவும் வாகனவசதி. யாத்திரை முழுவதும் ஏசி. வாகன வசதி. இரண்டுபேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள். ஆலய தரிசன கட்டணங்கள் அடங்கலாக.

விருப்பமுடையவர்கள் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் 50 புகைப்படங்கள் நாடு திரும்பியபின் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.(அன்பளிப்பாக)

விவரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
59, 8/6 செட்டியார்தெரு, கொழும்பு 11
077 768 0102, 077 736 2154

---

# புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

## External Degree
**GAQ, BA Part I, BA Part II**

## aat (Srilanka)
**Foundation, Intermediate, Final AA1, AA2, AA3**
Qualification : G.C.E O/L 6 PASSES
உடன் பதிவுகளைமேற்கொள்ளவும்
MEDIUM - TAMIL & ENGLISH

## Chartered
Medium: English & Tamil
Executive Level, Business Level
Qualification: A/L 3 Pass

Further Details
## JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept
464, Hospital Road,Jaffna.
021 222 3382 / 021 222 9149

---

# பணியாளர்கள் தேவையா?

உங்கள் நிறுவனத்துக்கு வேண்டிய தகுதியான பணியாளர்களைப் பெற்றிட இன்றே

இலவச சேவை **WIN STAR JOB BANK** இலவச சேவை
இனை நாடுங்கள்

- எவ்விதமான கட்டணங்களும் இல்லை.
- சகலவிதமான தகைமைகளுடனும் எம்மிடம் பணியாளர்கள் உண்டு.
- உங்கள் விளம்பரச் செலவினை தவிர்த்துக் கொள்ளலாம். குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

WIN STAR JOB BANK மூலம் பணியாளர்களைப் பெற்று உங்கள் நிறுவனத்தினை வளமாக்கிடுங்கள்

## WIN STAR JOB BANK
No.106, Post box Junction, Palaly Road, Thirunelvely.
(64776)(10.15.17) 021 320 2789

---

எங்களுக்கு ஒரு தொகுதி தரமான உடல் ஆரோக்கிய உபகரணங்கள் (Orthopedic & Healthcare Items) வந்துள்ளது உங்கள் தேவைகளுக்கு தயவு செய்து எம்மை அணுகுங்கள்

| | | |
|---|---|---|
| WALKERS - S/S High Quality 0 Single Bar | 4186 | 00 |
| WALKERS - S/S High Quality - Double Bar for long Durability | 4515 | 00 |
| Walkers - Gold Color - Highly elegant | 5290 | 00 |
| Wheel Chairs Full Chromium Plated | 9960 | 00 |
| Commod Wheel Chair | 14900 | 00 |
| Commod EWheel Chair - Wheel with Tyres | 14900 | 00 |
| Walking Aids - Quad Cane S/S- Adjustable | 1600 | 00 |
| Walking Aids - Tripod S/S -Adjustable | 1400 | 00 |
| Walking Sticks - Many Varieties from Rs. 550.00 | | |
| ELBOW Crutches - Hight Adustable | 1111 | 00 |
| Under Arm Crutches Pairs - Hight Adjustable | 2375 | 00 |

நாங்கள் என்றும் உங்களுடன்

## வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 0077, Fax: 222 2445
Office Mob: 077 44 22 367 Email vanisurgi@sltnet.lk

---

# Yarl Beauty Academy

YARL BEAUTY ACADEMY

## அழகுக்கலை பயிற்சிகள்

தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்



- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில் முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

---

உங்கள் வீடுகளின்

## குளியலறை மற்றும் குளியலறை சாதனங்கள் கொமட், சலவை இயந்திரம் ஆகியவற்றில் கல்சியம் படிவடைந்து தொல்லை தருகின்றதா?

இவற்றுக்கு நிரந்தர உறுதியான தீர்வுகளுக்கு

A member of the IOOL family
## UV Water Solution
water science technologies
Right solution for water issues

தொடர்புகளுக்கு 0775092737
277 கச்சேரி நல்லூர் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

---

# நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்,
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் 6 மாத கற்கைநெறி

*(Trainer Training (teacher Training programme)* (யாழில் முதல் முறையாக)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.01.2016) சனி (weekend batch)**
**9.am (18.01.2016) திங்கள் (Week day batch)**

பதிவுகளுக்கு முந்துங்கள்

English Language Adventure School ELAS

## ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி அருமைநாயகம்

(இளைப்பாறிய சாரதி - இ.போ.ச.கோண்டாவில்)

தோற்றம்
19 . 06 . 1940



மறைவு
09 . 01 . 2016

கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், மல்வம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருமை நாயகம் 09.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - யேனம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ் - றோஸ்மலர் தம்பதியரின் மருமகனும், நேசமலரின் பாசமிகு கணவரும்,காலஞ்சென்ற றோசலீன் மற்றும் அன்புமலர் ஆகியோரின் சகோதரனும், ஜேசுதாசன், இராஜேஸ்வரி, தங்கமயில், இராசதுரை ஆகியோரின் மைத்துனரும், றெஜிமோகனதாஸ், றெஜிவின்சியா, றெஜிடனியலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், றுமினா, டயஸ், சாம்சன் றெக்ஸ் ஆகியோரின் மாமனும், ஷெடின் ஷைனி, ஷெடின் சஞ்சுனா, சிபோன், விவிலுஜன்றெக்ஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (11.01.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து மல்வம் திருக்குடும்ப ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம், உடுவில். (67563)(11,15)

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 557 5949

### இளையதம்பி நாகலிங்கம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

பிறப்பு
05 . 07 . 1936



இறப்பு
09 . 01 . 2016

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, சுண்டுக்குளி, களுபோவிலவை வதிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நாகலிங்கம் 09.01.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், நாகேந்திரன் (நோர்வே), செல்வஅனுஷாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, நடராஜா, பஞ்சபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற கனகசபாபதி, நாகேஸ்வரி, சிவராமலிங்கம்,சரஸ்வதி, கமலாம்பிகை, ராசையா, வல்லியம்மை, வேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும், ராஜேஸ்வரி, ராஜராஜேஸ்வரி, கந்தையா (பொறியியலாளர்), யோகேஸ்வரி, பாலசிங்கம், தேவமகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும், ராஜ்மோகன், சிவநாதன், சுஜாந்தினி, Dr.பார்த்திபன், ராஜேந்திரன் ஆகியோரின் மாமனாரும், Dr பிரபா கரன், தயாளினி, Dr மதிவதனி, Dr ராதிகா, ஜெய மாறன், ஜெனனி, மயூரதன் , சசிதரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ஞானாம்பிகை, இந்துமதி, கிருஷ்ணபிள்ளை, மீனாம்பிகை, வரதராஷன், தர்சிகா, ஜெயந்திகா, மிருதுபாஷினி, ஜெயப்பிரகாஷ், ஷயனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும்,சௌமியன், அபிரதன், அக்ஷயன், ஷயந்தன், ஷறிஷா, ஹர்ஸவர்தன், அஷ்லிதன், யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 7 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. மதிவதனி கந்தையா
(பெறாமகள்)

(சி/28361)(11,15,16,17)

தொடர்பு:- 076 668 9356

## 2015ஆம் ஆண்டுக்கான ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த வாரம் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளில் பாடசாலைகள் ரீதியாக எமக்குக் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகள்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

பா.பாலகிரி- ஏ,பி,சி

**வர்த்தகப் பிரிவு**

இ.தரணிகா- 2பி,சி, கு.தீபியா- பி,2சி, யோ.மதுஷா பி,2சி, வி.விஜிதரன்- 3சி, தி.ஜெய்பார்த்தன்- 3சி, தெ.அபிஷா- 3சி, சி.தேனுஷா- 3சி.

**கலைப் பிரிவு**

ஞா.டொறின் பௌசிகா- 3ஏ, செ.மயூறிகா- ஏ,பி,சி, இ.ஜெயப்பிரியா- ஏ,பி,சி, என்.குயின்ஸ்டார்லியா- 3பி, பி.சாருஜன்- 2பி,சி, ஞா.ஆதவன்- ஏ,சி,எஸ், ச.பிரியங்கா- பி,2சி, நா.அகிலன்- பி,2சி, சி.அஜிதா- பி,2சி, க.பிரியங்கா- பி,2சி, தி.சசிகலா- பி,சி,எஸ், பிரணவி- பி,சி,எஸ், பா.பார்த்திகா- பி,சி,எஸ், சு.சுகன்யா- 3சி, இ.சரத்குமார்- பி,சி,எஸ்.

**மல்லாகம் மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

சி.யர்சினி- ஏ,2பி, சி.டிலக்ஷன்- ஏ,2பி, ப.யாமினி- 3பி, கு.றஜிதா-ஏ,பி,சி, ஜெ.ஜென்சிகா- ஏ,2சி, க.சிந்திஜன்- ஏ,சி,எஸ், த.சர்மிளா- 2பி,சி, ஜெ.யதுஜா- 2பி,சி, பா.வசந்தன் - 2பி,எஸ், கா.வைசா- 2பி,எஸ், வே.தனலக்சன்- பி,2சி, பா.மந்தாகினி- பி,சி,எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

செ.அனித்தா- ஏ,பி,சி, வி.சிந்துஜன்- 3சி, சா.கஜமுகன்- பி,2எஸ்.

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

ஆ.தமிழினி- 3ஏ, கோ.பிரியங்கா- ஏ,2பி, ஸ்ரீ.கனுஜா- 2பி,சி, கு.நிாந்தினி- 2சி,எஸ்.

**கலைப் பிரிவு**

சு.துளசி- ஏ,2சி, இ.பிரதீபா- ஏ,2சி, மு.வானதி- ஏ,பி,எஸ், ஜெ.காஞ்சனா- 3சி, அ.மேரிரூபதர்ஷினி- ஏ,சி,எஸ்.

**விக்ரோறியாக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

இ.சிவராம்- 3ஏ, சு.பிரியதர்சன்- 3ஏ, ஜ.நிதர்சன்- 3பி, ப.டிலக்சனா-3பி, ச.கௌசி- 2பி,சி, தி.வேணுராஜ்- பி,2சி, கு.அமுதஹாசன்-பி,2சி, செ.சுகன்யா- பி,2சி, இ.அபிகஜன்- 2சி,எஸ், ஜெ.துவாரகன்-சி,2எஸ், தி.அனோஜன்- சி,2எஸ்.

**உயிரியல் பிரிவு**

சே.ரோகுலமேனன்- ஏ,2பி, தி.தாரணி- 2பி,சி, த.மிதுஷா- 2பி,சி, க.சிதம்பரபாலினி- பி,சி,எஸ், த.நிதுஜா- பி,சி,எஸ், தே.விஜிதா-பி,சி;எஸ், ச.பிரியங்கா- 2சி,எஸ், ஏ.குபேந்திரன்- பி,சி,எஸ், தே.காயத்திரி- 2சி,எஸ், தெ.வினோத்- 2சி,எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

கு.நிருஜா- 3ஏ, ஜெ.நேசகுமாரன்- ஏ,2பி, யோ.கிருஷ்ணவேணி-2ஏ,சி, ந.சியாமினி- 2ஏ,பி, கா.பிரதீபன்- 2ஏ,பி, பா.ரூபினி- 2ஏ,பி, ஞா.சேத்திரபாலன்- ஏ,2பி, தி.செந்தூரன்- ஏ,பி,சி, தே.நிலக்சிகா- ஏ,2பி, செ.நிர்மலா- 2ஏ,சி, பா.மதுவந்தி- 2ஏ,சி, ப.விதுசா- 2ஏ,சி, ம.கோபிகா- ஏ,பி,சி, சி.மயூரன்- 3பி, சி.சேந்தன்- 3பி, ச.ஜசிந்தா-ஏ,2சி.

**கலைப் பிரிவு**

ர.நிரோஜன்- 2ஏ,பி, தி.ஜனனி- 2ஏ,சி, ஸ்ரீ.ஸ்ரீசாளினி- ஏ,பி,சி, பா.சிந்துஜா- 3பி, வா.வசந்தராஜ்- 2ஏ,சி, செ.வனிதா- ஏ,2பி இ.துஷிந்தா- 2பி,சி.

## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் செல்லத்துரை



அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் செல்லத்துரை 10.01.2016 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்- நாகம்மா தம்பதி களின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கௌரி அம்பாளின் பிரிய கணவரும், இந்திரா தேவி, காலஞ்சென்றவர்களான யசோதரன், கல்ப்பனா மற்றும் லலிதா, தயாளினி, காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் கௌதமன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், மற்றும் சுதர்சலிங்கம், மதிவண்ணன் ஆகியோரின் ஆசை மாமனாரும், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் செந்தீபன், செந்தூர்வாசன், மயூரி, சாளினி, சாமினி, சாம்பவி, சம்யுதா,விதுசன், தமிழிசை, தமிழவன், சாகித்தியன் ஆகியோரின் பேரனும், சங்கீர்த்தின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/1, ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம். (67562) (11,15,16)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மனோரஞ்சிதம் நாகலிங்கம்

தோற்றம்
22 . 10 . 1929



மறைவு
08 . 01 . 2016

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ். சங்கானை காளிகோயிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மனோரஞ்சிதம் நாகலிங்கம் 08.01.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராம சாமி - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் மகேந்திரம் (லண்டன்), நகுலேஸ்வரி (இந்தியா), பரமேஸ்வரன் (லண்டன்), நந்தராணி (இலங்கை), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் செல்வராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தையல்நாயகி (பவளம்) மற்றும் அன்னபூரணம் (சின்னமணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி (கிளி), சறோஜினிதேவி (லண்டன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (அப்பு) மற்றும் சறோஜினி (லண்டன்), பத்மநாதன் (பொன்னுக்குட்டி- இலங்கை), சிவபாலன் (ஜெயம்- நோர்வே), சாந்தி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிர்தவர்ஷினி, நிமலவர்ஷினி, சுதர்ஷினி, பிரியதர்ஷினி, ஜயநாத், அமிர்தாயினி, சிந்தாயினி(லண்டன்), காலஞ்சென்றவர்களான கிரிதரன், சசிதரன், ஜெயதரன் மற்றும் ஜீவாதரன் (பிரான்ஸ்), முரளிதரன் (சுவிஸ்), கருணாகரன் (நோர்வே), மலர்விழி( பிரான்ஸ்), கயல்விழி (இந்தியா), விதுர்ஷன், பானுஷா, றஷ்மிகா (லண்டன்), சுஜீவன், சுவர்ணா, கீர்த்தனன், அர்ச்சனா, றெபேக்கா, சங்கீதா, தர்சன் (டோஹா), தர்ஷிகா, அஸ்வின், அஸ்விதா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேனுகா, கிரிசான், சாருஷன், வினோஜன், துவாரகா, தனுஜன், ரக்ஷிஜா, வக்ஷன், கிஷோர், சனுஷன், இலக்ஷன், டினோஜன், ஷிரேயன், ஜொனதன், அபிநயா, சஹானா, சவின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
சங்கானை. (67560)(11,15)

தகவல்: குடும்பத்தினர்.

021 491 2176
077 588 7972

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 12 . 1961



இறப்பு
08 . 01 . 2016

### கிருஸ்ணபிள்ளை பிரபாகரன்

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் யாழ். கொழும்புத்துறையை வசிப்பிடமாக வும் கொண்ட கிருஸ்ணபிள்ளை பிரபாகரன் (08.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை பூபதி தம்பதியரின் அன்புசிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற சிவநாமம் - சறோ ஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பாஸ்கரன் (மோகன் -சுவிஸ்), காலஞ்சென்ற (சுதாகரன் -கனடா) மற்றும் மனோகரன் (கனடா), கிருஸ்ணகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வாசுகி, கருணா, செல்வி, ராசாத்தி, விமலை, ரஜனி, சித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக மு.ப.10.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பன்-இலங்கை (0777 661 655)
சுந்தர்லிங்கம் - இலங்கை (0094 21 2228005, 0094 777420240)
பாஸ்கரன் - சுவிஸ் (004121 647 33 16)
கரன் - லண்டன் (00441895252912)
மனோ - கனடா (00141 68044126)

28/8, நாகராஜா ஒழுங்கை,
புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் பொலிஸாரால் கைது

கரணவாய், ஜன.11

இரவுவேளை சந்தேகத்துக்கிடமாக நடமாடிய நான்கு பேரை ரோந்தில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரும், நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

வடமராட்சியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொள்ளை மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் நெல்லியடிப் பொலிஸார் இணைந்து இரவு நேர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு துன்னாலை, குடவத்தை ஆகிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது, நான்கு நபர்கள் சந்தேகத்துக்கிடமான நிலையில் நடமாடுவதனை அவதானித்த விசேட அதிரடிப் படையினர் பொலிஸாரின் உதவியுடன் அவர்களைக் கைது செய்து நெல்லியடிப்பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தனர்.

பின்னர் நான்கு நபர்களும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ற-ஐ-108)

# வவுனியா தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப் பகிர்வும்



வவுனியா, ஜன.11

வவுனியா தமிழ் மாமன்றம் மாதம் இரு முறை தொடர்ச்சியாக நடத்தி வரும், வாசிப்பும் அனுபவப் பகிர்வும் நிகழ்வின், இந்த வருடத்துக்கான முதலாவது நிகழ்வு நேற்றுமுன் தினம் வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. வாசிப்புத் துறை சார்ந்த ஆர்வலர்கள், மாணவர்கள், இலக்கியத் துறை சார் ஆர்வலர்கள் மற்றும் தமிழ் மாமன்ற உறுப்பினர்கள் எனப் பல தரப்பட்டோரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், முதல் பகிர்வாக அலெக் சாண்டர் குப்ரின் எழுதிய செம்மணி வளையல் எனும் மொழி பெயர்ப்பு நாவல் செ.ம துரகனால் பகிரப் பட்டது.

இரண்டாவது பகிர்வாக, கவிக்கோ அப்துல் ரகுமானின் 'ஆலாபனை' எனும் கவிதைத் தொகுதி, பா.சிலோஜினியால் பகிரப்பட்டது.

தமிழ் மாம்ன்றத்தின் இந்த மாதத்துக்கான அடுத்த நிகழ்வு, எதிர்வரும் 23 ஆம் திகதி வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாவிட்டபுரம் தனதம்பு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11

மாவிட்டபுரம் சாயுடைக் கிராமத்தின் தனதம்பு வீதியை புனரமைத்துத் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில், மக்கள் குடியேறி ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில், காங்கேசன்துறை வீதி மட்டும் விசாலமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்கள் தெரிவித்ததாவது-

ஆனால் உள்ளக வீதிகள் மட்டும் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன. சில வீதிகள் தார் ஊற்றப்பட்டும், சில வீதிகள் கிரவல்கள் பரவப்பட்டும், சில வீதிகள் பாவனைக்கு உரியவை என்ற அடையாளத்தை இழந்தும் காணப்படுகின்றன.

இவற்றை வீதிகள் என்று குறிப்பிட முடியாது, மாறாக தாம் ஆரம்பத்தில் காணிகளை பார்வையிடுவதற்கு வருகை தந்த போது பற்றைகளை அகற்றி உட்சென்றோம். அந்தக் காலகட்டத்தில் போக்குவரத்துக்காக பயன்படுத்திய மண் வீதியைத் தான் இன்றும் பயன்படுத்துகிறோம்.

தினமும் வேலைக்கு செல்பவர்களும், பாடசாலை செல்லும் மாணவர்களும், கற்கள் நிறைந்து, அருகில் பற்றைகளால் சூழப்பட்டுள்ள மண் வீதியைத்தான் பயன்படுத்துகின்றனர்.

இரவு நேரத்தில் பயணம் என்பது நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்குப் பயங்கரமாக உள்ளது. நோயாளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதும் சிரமமாக உள்ளது.

எமது பூர்வீகப்பகுதியில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் குடியேறி உள்ள போதும், முறையான வசதிகள் இன்னமும் செய்து தரப்படாதமை, மீள்குடியேற்றக் கிராமங்களில் வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகவும் மாற்றியுள்ளது.

வீதியையும், எமக்கான தேவைகளையும் நிறைவு செய்து தருமாறு பிரதேச சபையினர், பிற அதிகாரிகள் மற்றும் மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோரிடம் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். எனினும் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் எம்முடைய கிராமத்துக்கு வீதி அமைத்துத் தர வேண்டும்.- என்றனர். (ற-ஐ-ரி5)

# கச்சதீவு உற்சவ ஏற்பாடு குறித்துக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.11

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற் சவ ஏற்பாடுகள் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் மாவட்டச்செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி இடம்பெற வுள்ளது. அதையடுத்தே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கான பயண ஒழுங்குகள் , பாதுகாப்பு , குடிநீர் வசதிகள் மற்றும் இந்திய யாத்திரிகர்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் அதில் ஆராயப்பட்டதுடன் இதற்கான முன் ஆயத்த நடவடிக்கை ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதில் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவருடன் கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் பிரதேச செயலாளர்களும் பங்குத் தந்தையும் கலந்து கொண்டனர். (ற-ஐ-101)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### மன் / முருங்கன் ம.வி.முருங்கன்

### க.பொ.த உயர்தரம் (G.C.E A/L) - 2015

| துறை | மாணவர் பெயர் | மாவட்டநிலை | பெறுபேறு |
|---|---|---|---|
| பொறியியல் தொழில் நுட்பம் | J.டினோஜ்குமார் | 3 | 2CS |
| | A.ஸ்ரனிஸ்லாஸ் | 6 | C 2S |
| | S.சுதர்சன் | 7 | 2CS |
| | G.அருஸ்ரின் | 8 | 2CS |
| | M.அஜித்குமார் | 9 | 2CS |
| உயிர் முறைமைகள் தொழில் நுட்பம் | T.கெவின்குறுஸ் | 5 | B 2C |
| | J.பிரியா | 10 | BCS |
| | R.றெக்சுதா | 11 | B 2C |
| | Y.தர்சனா | 14 | BCS |
| | P.அபினயா | 15 | 2C S |
| | S.செலஸ்ரீனா | 16 | B2 S |
| | S.சியாமளா | 17 | 2C S |
| | J. பிரதீபா | 19 | B 2S |
| | N. மரியநிசோபனா | 24 | 2C S |
| | P. டிலக்ராஅன்புமலர் | 28 | C 2S |
| | S.லாவன்யா | 30 | 3S |
| | S.றொபேக்கா | 31 | 3S |
| | A. குயின்ரன்றோய் | 32 | 3S |
| கணிதம் | M.I. மொகமட்அவ்லால் | 24 | 2C S |
| உயிரியல் | S.M. பாத்திமாமாபாசா | 82 | 3S |
| | E. சஞ்சீவன் | 96 | C 2S |
| | H.M.மொகமட்நிலசாத் | 98 | 3S |
| | Y.வெனிஸ்ரன் | 112 | 3S |
| கலை | வீ. அனித்தா | 23 | A 2B |
| | வெ. மயூரினி | 25 | ABC |
| | பி. டேனுஜா | 36 | 3B |
| | யே. டொன்சி | 46 | 2B C |
| வர்த்தகம் | ப. அபிராமி | 3 | 3A |
| | அ.எஸ்தர்சாஷினி | 5 | 3A |
| | கி.றம்யா | 7 | 2A B |
| | அ. மிஷேல்ராஷ்மி | 09 | 3A |
| | ச.மு.சஸ்மின் | 11 | 3A |
| | றி.மு.யஸ்றி | 12 | A 2B |
| | றெ.நிலக்ஷிகா | 19 | 2A B |
| | யெ.யூதித்ஜெகனாத்டபரேரா | 21 | A 2B |
| | யோ.நந்தரூபன் | 29 | ABC |
| | அ.கறோலின் | 31 | 3B |

பாடசாலைச் சமூகம்.

**வாடகைக்கு** தொடர்பு: 077 564 2271, 077 284 9658

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 3 படுக்கை அறைகளுடன் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.

**ஆங்கில ஆசிரியர் தேவை**

உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும், பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 5084
மே/பா உதயன்பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**பெயர்மாற்றம்**

வீரபத்திரர் வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த சேகர் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து மணிவண்ணன் எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(67564) (14,15) மணிவண்ணன்

**ஆங்கில வகுப்பு (O/L, A/L, பேச்சு)**

மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக பரீட்சை வினாத்தாள் திருத்திய அனுபவமுள்ள அரச ஆசிரியரால் O/L, A/L மற்றும் ஆங்கிலப் பேச்சு வகுப்புகள் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நீங்கள் அழைக்கின்ற இடத்தில் வழங்கப்படும். பரீட்சைச்சவால்கள் , பேச்சு என்பன இணைந்ததாக வகுப்புகள் நடைபெறும்

ஆசிரியர்- கரன்
உடன் தொடர்புக்கு: 077 992 7146, 077 611 4068

KKBRO TOUCH YOUR LIFE
CCTV CAMERA



அனர்த்தங்கள் வருமுன் தடுப்போம்

கண்காணிப்பு கமராவின் முன்னோடிகள்

AHD Colour Nightvision Cameras/180 degree Wide Lens Cameras
AHD 1.0MP/1.3MP/HDVR/HD IP/Bullet/Dome/PTZ/CCTV Bullet
Verifocal Lens AHD Cameras/Wireless Cameras/Network NVR's
AHD DVR's & CCTV All Accessories



Plug and Play
Wireless IP NVR Kits
Rs. 62500.00

MICRO PC SYSTEMS
No.218,Hospital Road Jaffna
E-Mail:jaffna@micropcsystems.com
Web:www.micropcsystems.com

Easy payment scheme available HSBC SampathBank

HOTLINE 0773963280/0773039536/0212225893


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய விலை விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600 | 800 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 300 | 500 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 700 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | 600 | 500 | 700 | 600 | 450 |
| சுறா | 300 | 600 | 600 | 800 | 600 | 1000 | - |
| சீலா | 250 | 500 | 500 | 500 | 450 | 600 | 400 |
| விளை | 500 | 500 | 300 | 550 | 500 | - | 400 |
| முரல் | 250 | 350 | 400 | 400 | 400 | 500 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 500 | 400 | 500 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | - | - | 450 | - | - |
| ஓரா | 300 | 350 | 300 | 300 | 300 | 400 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 200 | - |
| நகரை | 150 | 300 | - | - | 300 | 250 | 300 |
| சூடை | 130 | 200 | 100 | 200 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 300 | 400 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 350 | 350 | 300 | - |
| மதனம் | 250 | 300 | 220 | 300 | 250 | 400 | 300 |
| நொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 70 | - |
| பாலை | 100 | 250 | 300 | 300 | 400 | 500 | - |
| வாளை | 150 | 150 | - | 300 | 300 | 300 | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 70 | 60 | 120 | 60 | 60 | 40 | 70 |
| கத்தரி | 140 | 120 | 120–160 | 120 | 100–120 | 120 | 100 | 130 |
| கரட் | 200 | 220 | 200–300 | 180 | 260–280 | 300 | 180 | 230 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 50 | 30 | 30 |
| பயிற்றை | 200 | 130 | 180 | 200 | 120 | 160 | 130 | 150 |
| பாகல் | 180 | 200 | 160–200 | 140 | 140 | – | 130 | 250 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 90 | 80 | 80 | 70 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 90 | 100 | 65 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 | 150 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 60 | 80 | 60 | 100 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 30–40 | 50 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 | 20 | 30 | 10 | 12 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 300 | 260 | 300 | 400 | 230 | 500 |
| புடோல் | 80 | 100 | 60 | 100 | 90 | 120 | 40 | 100 |
| கோவா | 120 | 120 | 140 | 180 | 120 | 80 | 90 | 100 |
| வெண்டி | 200 | 120 | 100–140 | 100 | 160 | 120 | 80 | 130 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 280 | 240 | 160 | 200 | 150 |
| லீக்ஸ் | 150 | – | 120 | 240 | 120 | 140 | 130 | 120 |
| தேங்காய் | 50 | 48 | 50 | 50–60 | 60 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 70 | 80 | 52 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 | 90 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 320 | 300 | 400 | 250 | 350 |
| இராசவள்ளி | 100 | 120 | 140 | 140 | 160 | 160 | 100 | 100 |



## இது புதுசு

### நாகரிகமான கவுண்கள்

தற்போது கவுண்களில் நாகரிகமான கவுண்களும் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. வயது வந்தவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கவுண்கள் தற்போது கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. ஈயக்கூடிய துணியில், கற்கள் பதிக்கப்பட்ட அலங்காரங்களுடன் இவை விற்பனை செய்யப்படுகின்றன. வயது வந்தவர்களுக்கான இந்த ஆடைகள் 1,200 முதல் 2,500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.




## வீட்டை அழகுப்படுத்தும் வண்ணத்திரைகள்

வீட்டுக்குள் வரும் விருந்தினர்களை முதலில் வரவேற்பவை திரைகள் தாம். காற்றில் ஆடும் அதன் அபிநயம், வரும் விருந்தினர்களுக்கு வணக்கம் சொல்லி வரவேற்கும். அதே சமயம் வீட்டுக்குள் வரும் தூசிகளையும் பூச்சிகளையும் தடுத்துவிடும். எவ்வளவு தான் அழகான வீட்டை வடிவமைத்தாலும் வீட்டுக்குத் திரைகள் அழகு சேர்ப்பவை. திரைகள் அமைப்பதற்கு முன் வீட்டின் வண்ணம், மேசை நாற்காலிகள் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்பு உள்ள திரைகளில் பல்வேறு விதமான இயற்கைக்காட்சிப் படங்களும், தெய்வங்களின் படங்களும் இருக்கும். அவை ஒரு தனியழகு. ஆனால் இன்றைக்கு ஒரே நிறத்திலான திரைகள் தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இல்லையெனில் சின்னச் சின்னப் பூக்கள் உள்ள திரைகள் வீட்டுக்கு அழகு சேர்ப்பவை. இன்றைக்கு திரைகளைப் பொருத்தவரை அவற்றை மொத்தமாகச் செய்து கொடுக்கவும் ஆள்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு பட்ஜெட்டை பொறுத்து தான் இதைத் தீர்மானிக்க முடியும்.

இல்லையெனில் நாமே ஜன்னல், கதவு, அலுமாரிகள் ஆகியவற்றின் அளவுகளை நாமே கணக்கிட்டு அதற்கு ஏற்றால் போல் திரைத் துணிகளை வாங்கி தைக்கக் கொடுக்கலாம். திரைத் துணிகளைப் பொறுத்தவரை பல தரப்பட்ட விலையில் கிடைக்கின்றன. நாம் எவ்வளவு காலம் இந்தத் திரைகளைப் பயன்படுத்துவோம் என்பதை முன் கூட்டியே தீர்மானித்துக் கொள்வது நலம். பிளாஸ்ரிக் திரைகளும் கிடைக்கின்றன. ஆனால் அவை எளிதில் அழுக்குப் படியும்.

அவற்றைச் சுத்தம் செய்வதும் கடினம். கொட்டன் துணிகள் துவைத்துச் சுத்தப்படுத்துவது எளிது. திரைகள் அமைக்கும்போது அவசியமாக சுவரின் நிறத்தையும் தரையின் நிறத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் பொதுவாக மென்மையான நிறத்தைத் தேர்ந்தெடுப்பது வீட்டுக்கு அழகு சேர்க்கும். ஒவ்வொரு அறைக்கும் ஒரு தனி நிறத்தைத் தேர்தெடுக்கலாம். ஆனால் வரவேற்பறை, சாப்பாட்டு அறை, படுக்கையறை என எல்லா அறைகளுக்கும் ஒரே தொங்கு திரையைத் தான் தெரிவு செய்வார்கள். ஆனால் வீட்டின் ஒவ்வோர் அறைக்கும் வெவ்வேறு வண்ணங்களைப் பூசியிருக்கும் பட்சத்தில் வெவ்வேறு வண்ணத்திரைகளைத் தேர்ந்தெடுப்பதே பொருத்தமானதாக இருக்கும்.



### நாளை

மார்கழி -27
செவ்வாய்க்கிழமை 12.01.2016
திதி: திருதியை பி.இ.04.36
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.10.10
ராகுகாலம்: 03.33-05.03 வரை
சுபநேரம்: 11.03- 12.33 வரை

## சமைப்போம் வாங்க – சோளமா லட்டு



**தேவையானவை:**

மஞ்சள் சோளம் அல்லது வெள்ளைச்சோள மா – 1 கப்
கொட்டை நீக்கிய பேரீச்சம் பழம் (பொடியாக நறுக்கியது) – 20
பொடித்த நட்ஸ் – 4 மேசைக்கரண்டி
நெய் – தேவைக்கு
துருவிய தேங்காய் – சிறிது
உப்பு – ஒரு சிட்டிகை

**செய்முறை:**

அடுப்பில் சட்டியை வைத்து சோள மாவைச் சேர்த்து மிதமான தீயில் நிறம் மாறாமல், வாசனை வரும் வரை வறுக்கவும். ஒரு சிட்டிகை உப்புச் சேர்க்கவும். பின் ஒரு தாச்சியில் நீர் சேர்த்து அரைக்கப் பேரீச்சம் பழத்தை அதில் போட்டு மிதமான தீயில் வேகவிடவும். அதே சமயத்தில் அதில் சோளமா மற்றும் நட்ஸை சேர்க்கவும். சிறிது நெய் சேர்க்கவும், தேங்காய் சேர்த்து இரண்டு நிமிடங்கள் கிளறி இறக்கி இளஞ்சூடாக இருக்கும் போதே கையில் நெய்யைத் தடவிக்கொண்டு உருண்டை பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சணச அபிவிருத்தி வங்கியின் இணையத்தளம் மீள் அறிமுகம்



சணச அபிவிருத்தி வங்கியானது (www.sdb.lk) அதன் அதிகாரபூர்வ இணையத்தளத்தை மீண் டும் அறிமுகம் செய்வதாகஇம்மாதம் முதலாம் ஆம் திகதி அன்று அறிவித்தது. புதிய இணையத்தள மானது வங்கியின் முன்னேற்றத்துக் குரிய தூர நோக்கத்துடன் மிகவும் நெருக்கமானது. அதேபோல் அடுத்த தசாப்தத்துக்கும் அதற்கு மேலுள்ள விரிவாக்கத்துக்கும் தொடர்பு பட்டது. இது எஸ்.டி.பியின் தகவல் தொழில் நுட்ப திணைக்களமும் சந்தைப் படுத்தல் திணைக்களமும் இணைந்து செய்யும் ஒரு திட்டமாகும்.

புதிய எஸ்.டி.பியின் இணையத்தளமானது தெளிவான, பயன்படுத்த எளிதான மற்றும் மிகவும் பெறுமதியான உள்ளடகமுள்ள இணையத்தள அனுபவத்தைத் தரக் கூடியது. இது எஸ்.டி.பியின் தயாரிப்பு வகைகள் மற்றும் சேவைகளைப் பிரதிபலிக் கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இணையத்திலுள்ள தகவல் மற்றும் பொருத்தமான உள்ளடக்கத்தைப் பயன்படுத்தி பார்வையாளர்கள் சிறந்த தீர்மானங்களை எடுக்க முடியும்.

த்யாரிப்பு வகை உள்ள பக்கத்தில் தயாரிப்பு வகை மற்றும் சேவைகளை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் பார்வையாளர்களைக்கவரும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.கருத்துக்களையும் சேவை வேண்டுகோள்களையும் பெற்றுக் கொள்ள எஸ்.டி.பி இணையத்தளத்தில் தொடர்புப் படிவமும் உள்ளது.

புதிய இணையத்தளமானது ஒரு புதிய பல்துறை இணையத்தள அனுபவத்தை வழங்குவதை உறுதி செய்வதற்காக நியூஸ் மற்றும் சி.எஸ்.ஆர். பகுதிகள் சமீபத் திய நிகழ்வுகளுடன் கூடிய வர்ணமயமான புகைப்படங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.எஸ்.டி.பி வங்கியானது நாடு முழுவதும் 87 கிளை களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப் பெரிய வலையமைப்பைக்கொண்டதாகும். இந்தவலையமைப்பானது தரமான வாடிக்கையாளர் தீர்வுகளை அந்தந்தப் பகுதிகளில் தொடர்ந்து வழங்கிவருகின்றது. புதிய இணையத்தளத்திலுள்ள கிளைப்பக்கத்தில் உள்ள விரிவான எஸ்.டி.பி யின் மூலம் கிளைக் காரியாலயத்தின் அமைவிடத்தைத் தெரிந்த கொள்வதுடன், நேரடித் தொடர்புத் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும். பாவனை யாளர்கள் முதற் பக்கத்தில் தமது மாவட்டத்தை தெரிவு செய்வதன் மூலம், தமக்கு அருகிலுள்ள வங்கிக் கிளையை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒன்லைன் மூலமாக எஸ்.டி.பிக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர்களுக்கு ஒன்லைன் விண்ணப்பப் படிவம் மிகவும் இலகுவானதும் வசதியானதாகவும் இருக்கும். அதன் பன்மொழி அம்சம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட மொழி உள்ளடக்கத்தை வழங்குகின்றது. வாடிக்கையாளர்களுக்கு எளிதான அணுகுமுறையை வழங்கி வாடிக்கையாளர் மட்டத்தை விரிவுபடுத்தி அதிக இலாபத்தை ஈட்டுவதை உறுதி செய்வது இதன் நோக்கமாகும். தற்போது வேகமாக வளர்ந்து வரும் கைத் தொலைபேசி மூலம் இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பவர்களின் தேவைக்கு ஏற்ப ஸ்மார்ட் கைத் தொலை பேசிகளுக்கு பொருத்தமான விதத்தில் இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் எஸ்.டி.பி. இணையத்தளம் மூலம் சமூக வலைத்தளத்துக்கு தொடர்புபடும் விதத்தில் வங்கியின் தயாரிப்பு வகைகள், சேவைகள் மற்றும் விசேட நிகழ்வுகள் எஸ்.டி.பியின் பேஸ்புக் பக்கத்துடன் நேரடியாகத்தொடர்புபடும் விதத்தில் இந்த இணையத்தளம் மூலம் எஸ்.டி.பி பக்கத்துக்குச் செல்ல முடியும். (கு)

## வணிகம்


## நுட்பம்

### சாதாரண மடிக் கணினியையும் தொடு திரையாக மாற்றலாம்

நாம் பேசும் அலைபேசியில் முதலில் தொடுதிரை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்னர், சாதாரண மடிக்கணினிகள் மீதான மக்களின் ஆர்வம் குறைந்து வந்ததால் அவற்றிலும் தொடுதிரை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் சாதாரண மடிக்கணினிகள் பயன்படுத்துகிறவர்கள் இதற்காக தங்களது பழைய மடிக்கணினிகளை விற்று புதியது வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.



ஆனால்தற்போது அவர்களின் கவலையை தீர்ப்பதற்காகவே சாதாரணமடிக்கணினியையும் தொடு திரைவசதிகொண்டதாக மாற்றிக் கொள்ளும்வகையில் புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த நியோநோடு என்ற நிறுவனம்தான் இந்தபுதியகருவியைவிற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது.

"ஏர் பார்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த யூ.எஸ்.பி. கருவியை பயன்படுத்துவது என்பது அவ்வளவு கடினமான செயல் இல்லை.

பென்ட்ரைவ்போல மடிக்கணினியில் பொருத்தினால்போதும், சாதாரண மடிக்கணினி, திரை மடிக்கணினியாக மாறிவிடும். கண்ணுக்குப் புலப்படாத ஒளிக்கதிர்களை ஸ்கிரீனின் மேற்பரப்பில் செலுத்தும் அந்த கருவி தொடும் வசதியைத் தருகிறது.

இதன் மூலம் திரையைப் பெரிதாக்கலாம், விண்டோவை மூவ் செய்யலாம். லிங்கை கிளிக் செய்யலாம், என பல செயல்களையும் மேற்கொள்ளலாம். குறிப்பாக. கைவிரல்கள் மட்டுமல்லாது எந்த பொருளைக் கொண்டு திரையைத் தொட்டாலும் அது இயங்கும் என்பது கூடுதல் சிறப்பு.

### சாதனையை முறியடித்த அப்பிள்


கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை காலத்தில், அப்பிளின் அப் ஸ்ரோர் விற்பனை முந்தைய ஆண்டுகளின் சாதனையை முறியடித்துள்ளது.

அப்பிள் போன், ஐ பேட் போன்ற அப்பிள் சாதனங்களில் அப் ஸ்ரோர் என்ற விற்பனை தளம் செயற்படும்.

அவற்றில் பயனர் கணக்கு வைத்துக் கொண்டு அதில் இருந்து தேவையான கேம், பாடல்கள், ஆப் என அனைத்தையும் நாம் எமது அப்பிள் சாதனங்களுக்கு தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்நிலையில், அப்பிள் நிறுவனம் சமீபத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில், அப்பிளின் அப் ஸ்ரோரில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கால விற்பனை புதிய சாதனையைப் படைத்துள்ளது.

எங்கள் பயனாளர்கள் தங்களுடைய ஐபோன், ஐபாட், மேக், அப்பிள் கடிகாரம் மற்றும் அப்பிள் ரி.வி என அனைத்துக்கும் தேவையான அப்பிள்களை அதிகளவில்தரவிறக்கம் செய்து மகிழ்ந்துள்ளனர்.



மேலும்,கடந்தஆண்டு அப்பிள்களுக்காக மட்டும் எங்கள் பயனாளிகள் சுமார் 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்துள்ளனர் என அப்பிள் அறிவித்துள்ளது.

இந்த விடுமுறை காலத்தில் அப் ஸ்ரோரில் விளையாட்டு, சமூக வலையமைப்பு, பொழுதுபோக்கு போன்ற பிரபலமான அப்பிள்கள் பெரும்பாலானவர்களால் தரவிறக்கம் செய்யப்பட்டதாகவும் அப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சாதனை படைத்துள்ள பொன்டெரா

இலங்கைப் பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கும் பாலின் அளவை பொன்டெரா பிராண்ட்ஸ் சிறிலங்கா தொடர்ந்து முன்னெடுத்த வண்ணமுள்ளது. இந்நிலையில், செப்ரெம்பர் மாதத்தில் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 48 சதவீத அதிகரிப்பை ஃபொன்டெரா பதிவு செய்திருந்தது.

பொன்டெரா பிராண்ட்ஸ் சிறிலங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர் லியோன் க்ளெமன்ட் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவனத்தின் மூலமாக கடந்த ஐந்து மாதங்களில் சாதனை மிகுந்த பால் சேகரிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்ததன் மூலமாக நாட்டின் பால் உற்பத்திகளுக்குக்காணப்படும் கேள்வி உறுதி செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டார்.



ஒவ்வொரு ஆண்டும் நாம் பெருமளவு பாலைப்பதப்படுத்தி வெவ்வேறு வகையான அங்கர் மற்றும் அங்கர் நியுடேல் தயாரிப்புகளான யு.எச்.ரி பால், சுவையூட்டப்பட்ட பால், யோகட், கிறீம் மற்றும் தயிர் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறோம்- என்றார். பாலுற்பத்திப் பொருள்களை அதிகளவு நுகர்வதன் மூலமாக இந்தக்கேள்வி ஏற்பட்டுள்ளது.

இலங்கையர்கள் அதிகளவு போக்கை பெற்றுக் கொள்ளும் வகையில் பால் உற்பத்திகளை நாடுகின்றனர். உள்நாட்டிலிருந்து பெறப்படும் பாலுக்கு இந்தளவு உயர் கேள்வி காணப்படுவது என்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும், இதன் மூலமாக ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாது காக்கப்படுகிறது என கிளெமன்ட் மேலும் குறிப்பிட்டார்.

உள்நாட்டு பால் உற்பத்தி துறையை மேம்படுத்துவது என்பது இந்த கொள்கையில் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தது. அண்மையில் அங்கர் திரவப் பால் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததன் மூலமாக நாம் தொடர்ந்து இலக்கை எய்திய வண்ணமுள்ளோம்.

இந்த புதிய தயாரிப்பை அறிமுகம் செய்ததன் மூலமாக, எமக்கு பெருமளவு உயர் தரம் வாய்ந்த பாலை பெருமளவான பாற்பண்ணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதற்கு இலங்கையில் உறுதியான பாற்பண்ணைத் துறை ஒன்று காணப்பட வேண்டும்- என்றார். 1997 ஆம் ஆண்டு முதல் நாம் இந்தத் துறையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பாற்பண்ணையாளர்களுக்கு எமது விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினுடாக சிறந்த ஆலோசனைகளையும், பயிற்சி களையும் வழங்கியுள்ளோம். நாம் தற்போது எமது விநியோக செயலணியை வளர்த்து வருவதுடன், எமது பயிற்சிகளின் தாக்கத்தை மேம்படுத்தும் வகையில் எமது விநியோக உறவுகள் அதிகாரிகளையும் பணிக்குஅமர்த்தியுள்ளோம் என கிளெமன்ட் மேலும் குறிப்பிட்டார்.(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சலான ஊடகவியலாளர் கே.கே.ஆர் என்ற இரத்தினசிங்கம்

கடமை, கண்ணியம், கண்டிப்பு என்பதன் மறு உருவம்தான் மறைந்த எங்கள் குரு இரத்தினசிங்கம். கே.கே.ஆர். என எழுத்துத் துறையின் மூத்த உறுப்பினர்கள் அன்புடன் அடைமொழிக்குள் அழைக்கப்பட்டவர்.

நிமிர்ந்த நடை, முறுக்கிவிடப்பட்ட மீசை, கவர்ச்சியான வெண்தாடி இப்பொழுதும் கண்முன் நிற்கின்றன.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் தமிழ்ப் பத்திரிகைகள் மீண்டும் வருமா என்ற ஒரு நிலையும் இருந்தது. அப்போது ஊடகத்துறையில் முக்கிய பணிகளில் இருந்தவர்கள், பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் இடம்பெயர்ந்து வடக்கு - கிழக்கு நோக்கி சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டனர்.

அப்படி ஓர் இக்கட்டான நிலையிலும் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்று உலகம் ஏற்றுக்கொண்ட எஸ்.டி.சிவநாயகத்தின் தளபதியாக, பிரதி ஆசிரியர் என்ற பொறுப்புடன் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை தொடர்ந்து வெளியிட்ட ஒரு துணிச்சல் இரத்தினசிங்கம் அவர்களையே சாரும்.

இந்த நிலையில், 1984ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அலுவலக செய்தியாளர்களாக உள்வாங்கப்பட்டோம். தலைநிமிர்ந்து நிற்கும் சுதந்திர பத்திரிகை சமாசத்தின் நான்காவது மாடியில் அமைந்திருந்தது ஆசிரிய பீடம். ஒரே நேரத்தில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் என மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்தன. என்றாலும் எங்கள் தினபதி, சிந்தாமணி தனித்துவத்தை இழந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக நின்று செயற்பட்டவர்.

அலுவலக செய்தியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட நாங்கள் ஆசிரிய பீடத்துக்குள் நுழைவதற்கு முன்பே, பலர் எங்களுக்குப் பீதியை ஏற்படுத்தினர். அப்பப்பா! அந்த இரும்பு மனிதரிடம் எப்படித்தான் குப்பை கொட்டப் போகின்றீர்கள் என்றனர்.

என்னடா, எல்லோரும் இப்படிக் கூறுகின்றார்களே என்ற தயக்கம். ஒன்றாக தெரிவுசெய்யப்பட்ட நாங்கள் ஐந்து பேர். யார் முதலில் போவது என்று தயங்கிக்கொண்டிருந்தோம். ஒருபடியாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு முதலில் நான் செல்ல தொடர்ந்து எனது சக நண்பர்களும் வந்தனர்.

அந்த காலைவேளையிலும் எதையோ எழுதிக்கொண்டிருந்த அவர், தலைநிமிர்ந்து எங்களைப் பார்த்தார். ஒரே குரலில், "குட் மோனிங் சேர்" என்றோம். இடது கையால் மீசையை ஒதுக்கி தாடியை தடவிக்கொண்டே, "குட் மோனிங், குட் மோனிங். நீங்கள்தான் புதிதாக இணைந்துகொண்டவர்களா? ரொம்ப சந்தோசம். வேலையில் சேர்ந்துவிட்டீர்கள். இனி வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதானே'' என்று கூறிக்கொண்டே தொலைபேசி மூலம் செய்தி ஆசிரியரை அழைத்தார். சில நிமிடங்களில் அங்கு வந்த செய்தி ஆசிரியர் மிகவும் பணிவுடன், "சேர் அழைத்தீர்களா" என்று தணிவான குரலில் கேட்டார்.

"வந்துவிட்டீர்களா. ஆள் இல்லை என்று கவலைப்பட்டீர். இதோ ஐந்து இளம் வீரர்களை உங்களுக்குத் தருகிறோம். உமது படையில் சேர்த்துக்கொள்ளும் என்று சிரித்துக்கொண்டே கூறினார். நாங்களும் சிரித்து விட்டோம். பார்ப்பதற்குத்தான் மனிதர் இப்படித் தோன்றினாலும்



அன்பொழுகப் பேசுகின்றாரே. அதைத் தான் "கல்லுக்குள் ஈரம்" என்பார்களோ என்று தைரியம் அடைந்தோம்.

அப்போது அவர் எங்களுக்குக் கூறிய வார்த்தையை மறக்க முடியாது. அதாவது, "கடமையைச் செய்யுங்கள். அதனை கண்ணியத்துடன் செய்யுங்கள்" என்று கண்டிப்பாகக் கூறி அனுப்பினார்.

அவரிடம் படித்தது பல. அவற்றில் ஒன்றுதான் கண்டிப்பு. எவராகவும் இருக்கலாம். யாராவது தவறு செய்துவிட்டால் அதை மீண்டும்மீண்டும்செய்துவிட்டால் கோபத்தின் உச்சக்கட்டத்துக்கே சென்றுவிடுவார்.

எல்லோரும் பார்ப்பார்கள் எங்களுடைய மேசை ஒழுங்காக இருக்கின்றதா என்று. ஆனால், எங்கள் ஆசிரியர் குப்பைக் கூடைகளைத்தான் பார்ப்பார். அதாவது, எவருடைய குப்பைக் கூடை நிறைந்து கிடக்கின்றதோ அவர் எழுதிய செய்தியைத்தான் முதலில் எடுப்பார்.

ஒரு செய்தியை ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, பல முறை திருப்பித் திருப்பி எழுதச் சொல்வார். திருப்தி ஏற்படும் வரை திரும்பத் திரும்ப எழுதச் சொல்வார். சிலவேளைகளில் இது என்ன செய்தியா என்று கசக்கி எறிந்த சம்பவங்களும் பல. ஆனால், மறுநாள் பார்த்தால் அதே செய்தி பத்திரிகைகளில் சிறப்பாக வெளிவந்திருக்கும். நாங்கள் எழுதிய செய்தியை அவர் கைப்படத் திருத்தி எழுதிப் பிரசுரித்திருப்பார்.

மறுநாள் எங்களை அழைப்பார். இன்று பத்திரிகைகளை வாசித்தீர்களா என்பார். முதல் வேலையாக வந்தவுடன் எல்லாப் பத்திரிகைகளையும் வாசிக்க வேண்டும். நாம் எந்தச் செய்தியை தவறவிட்டுள்ளோம். எந்தச் செய்தியை நாம் மட்டும் போட்டுள்ளோம் என்று பார்க்க வேண்டும். தவறவிட்ட செய்திகளை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு கேட்டு மாற்று வடிவில் போடவேண்டும் என்பார். எவராவது பத்திரிகையை வாசிக்காமல் மேலும் கீழும் பார்த்தால் முன்னே நிற்கவேண்டாம் என்று பேசிக் கலைத்துவிடுவார்.

அன்று அவரால் உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி கண்டிப்பாக வளர்க்கப்பட்ட எவரும் சோடை போகவில்லை. பல ஊடகங்களில் பொறுப்பான பதவிகளில் இருக்கின்றனர். குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப் படவேண்டும் என்பதுபோல், அவருடைய பாசறையில் வளர்க்கப்பட்ட நாங்கள் இன்று அவர் பெயர் சொல்ல வாழ்கிறோம்.

இறுதியாக "சுடர் ஒளி"யில் அவர் கடமையாற்றியபோது, நாம் பெற்ற அனுபவம் எங்களுக்குப் பெரும் துணிவையும் – தைரியத்தையும் ஊட்டின. புகழ்ச்சி என்பது அவருக்கு அறவே பிடிக்காத சங்கதி. எவரிடமும் பணிந்து பேசமாட்டார். தனது போக்குக்கு உடன்படாதவர்களுடன் வாக்கு வாதப்படமாட்டார். அவர்களை நாகரிகமாக ஒதுக்கிவிடுவார்.

எவரிடமும் கைநீட்டி அன்பளிப்புகளையும், பரிசுகளையும் ஏன் ஒரு டயரியைக்கூட வாங்கமாட்டார். தவறாக நினைக்க வேண்டாம் என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பிவிடுவார். பத்திரிகை ஆசியர் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். இன்று அந்த மாமலை சாய்ந்துவிட்டது. என்றாலும் அவரால் வளர்த்துவிடப்பட்ட வாரிசுகள் அவர் பெயர் சொல்ல வந்திருக்கின்றோம். எங்களை வளர்த்துவிட்ட வாழவைத்த அந்த தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் அவருடைய பூதவுடல் அழிந்துவிட்டாலும் புகழ் உலகம் உள்ளவரை வாழும்.

■ இரா. புத்திரசிகாமணி


# வெளிநாட்டு இராஜதந்திரிகளின் அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளார் முதலமைச்சர் விக்கி

*பேரவை உருவாக்கத்தினால் என்கிறது கொழும்பு ஊடகம்*

கொழும்பு, ஜன.11

தமிழ் மக்கள் பேரவை தொடர்பாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வெளிநாட்டு இராஜதந்திர அழுத்தங்களை எதிர்கொண்டிருப்பதாக, கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டேலீடர் தனது பத்தியில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது விபரித்துள்ளதாவது:-



தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் விவகாரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடவும் கடும்போக்குடைய தமிழ் அரசியல்வாதிகளை உள்ளடக்கிய தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியுள்ள விடயத்திலேயே முதலமைச்சர் விக்னேஸ்வரன் இராஜதந்திர அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவை தொடர்பாகவும், தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பாக பேரவை எடுத்துள்ள நிலைப்பாடு குறித்தும், இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் மகிழ்ச்சியடையவில்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில், அடுத்த சில வாரங்களில் சில இராஜதந்திரிகள் விக்னேஸ்வரனைச் சந்தித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விவகாரத்தில், தற்போதைய அரசு முன்னெடுக்கும் நகர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்கவுள்ளனர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ள இராஜதந்திரிகளில், பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச்சர் ஹுகோ ஸ்வரும் அடங்குகிறார்.

இந்தவாரம் கொழும்பு வரும் ஹுகோ ஸ்வர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவுள்ளதுடன், யாழ்ப்பாணம் சென்று விக்னேஸ்வரனுடனும் பேசவுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவை தொடர்பாகவும், வடக்கு பிரச்சினைகள் தொடர்பாக அது எடுக்கும் தீவிர நிலைப்பாடுகளின் அச்சுறுத்தல் தொடர்பாகவும், பிரித்தானிய அரசின் கவலைகளை விக்னேஸ்வரனிடம், ஹுகோ ஸ்வர் பரிமாறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


தமிழர் பிரச்சினை தொடர்பாக இலங்கையின் புதிய அரசு முன்னெடுக்கும் முயற்சிகள் தொடர்பாக அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும், திருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விவகாரத்தில் மிதவாத அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என்பதால், தமிழ் மக்களின் எந்தக் கவலைகள், குறைபாடுகள் குறித்தும் கூட்டமைப்பே அரசுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் இந்த நாடுகள் விரும்புகின்றன.

தற்போது சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு வரும் விடயங்கள் தமிழ் மக்கள் பேரவையினால் குழப்பமடைவதை கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் விரும்பவில்லை என்றும், இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டேலீடர் ஆங்கில வார ஏடு குறிப்பிட்டுள்ளது. (வ)

# இன்புளுவன்சா வைரஸ் பரவும் அபாயமில்லை

கொழும்பு, ஜன.11

இன்புளுவன்சா வைரஸ் பரவும் அபாயமில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



வைரஸ் பரவுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

சில வைத்தியசாலைகளில் இன்புளுவன்சா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பதிவாகியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், நோய்த் தொற்று பரவுவது குறித்து யாரும் பீதியடைய வேண்டியதில்லை எனவும் கூறியுள்ளார். (வ)

31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர் கிட்டினன் கணேசன்

உதிப்பு 25.11.1945
உதிர்வு 12.12.2015

கடந்த 12.12.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (11.01.2016) காலை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

இந் நிகழ்வுகளில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதுடன் அதன் பின்னர் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

றெட்றோஸ்பாம், உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்குத் தொலைபேசி அழைப்பெடுத்த மகிந்த

கொழும்பு, ஜன.11

தம்மைக் கொலை செய்ய முயன்ற தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மன்னித்து விடுதலை செய்த நிலையில், அது தனது செயற்பாட்டை பின்பற்றுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதனை மைத்திரிபால சிறிசேனவிடமே தொலைபேசி ஊடாக மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கொழும்பு சிங்கள ஊடகமான லங்கா நியூஸ் வெப் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் போது 2006 ஆம் ஆண்டு அவரைக் கொலை செய்ய முற்பட்டதாக தெரிவிக்கப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வை கண்டியில் வைத்து பார்த்துக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார்.

இது மிகவும் சிறந்த செயற்பாடு நீங்கள் இவ்வாறு என்னைப் பின்பற்றி செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித் துள்ளார்.

இதனால் சற்று நிலைகுலைந்த மைத்திரி, நான் உங்களைப் பின்பற்றவில்லை என்னை கொலை செய்வதற்கு வந்த நபருக்கு அன்பு காட்டி அவரை விடுதலை செய்தேன் எனக் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வழமைபோன்று முன்னாள் ஜனாதிபதி வாய்விட்டு சிரித்துள்ளார். கொலை செய்ய வந்தவரை நீங்கள் விடுதலை மாத்திரமே செய்திருக்கின்றீர்கள். என்னைக் கொலை செய்ய வந்தவரை விடுதலை செய்தது மாத்திரமன்றி அவருக்கு அமைச்சுப் பொறுப் பொன்றையும் வழங்கி நூறு மதுபானசாலை களையும் அமைத்துக் கொடுத்து அவருடைய பரம்பரையையே வாழ வைத்துள்ளேன் என மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், ஜனாதிபதி அவர்களே எங்களுடைய ஜோனி, அவரை நாம் விடுதலை செய்தது மாத்திரமல்லாது, அவரது ஏழு தலைமுறையை நாம் உயர்த்திவிட்டுள்ளோம். அவருடைய பைல் ஒன்று என்னிடம் இருப்பதாக தெரிவித்து அவர் தான் என்னை விட்டுப் போவதில்லை. எனவே நான் செய்ததைத் தான் நீங்கள் செய்கின்றீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்று சிரிப்புடன் மகிந்த தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-5)

## அரசியலிலிருந்து ஓய்வெடுக்கிறார் ஞானசார தேரர்

மகிந்த ஆட்சியின் போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாத பரப்புரையை முன்னெடுத்து வந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் அரசிய லிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அத்துடன், பொதுபல சேனா அமைப்பின் பெயரும் மாற்றி யமைக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை குறித்த அமைப்பின் நிர்வாகக்குழு உறுப்பினரான டிலாந்த விதானகே நேற்று உறுதிப்படுத்தினார்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அரசியலிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளார். என்றார்.

(வ-சி)

## பாக். போர்

ளது.

இவ்வாறு இலங்கை அரசின் உயர்மட்ட தகவல்களைச் சுட்டிக்காட்டி இந்திய ஆங்கில ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மூன்று வாரங்களுக்கு முன்னர், புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட இராஜதந்திரக் குறிப்பு ஒன்றில், ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை ஏன் வாங்கக் கூடாது என்பதற்கான நியாயங்கள் விபரிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதில் குறித்த போர் விமானங்களின் தொழில்நுட்பத் தரம் தொடர்பான மதிப்பீடும், இலங் கைக்கு தற்போது போர் விமானங் கள் தேவை யில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாடும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன் போது, ஜே.எவ்.போர் விமானங்களைக் கொள் வனவு செய்யும் உடன்பாடு கையெழுத் திடப்படவுள்ளதாகப் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த போர் விமானங்களை கடன் அடிப்படையில் கூட விற்பதற்கு பாகிஸ்தான் தயாராக இருந்தது.

எனினும், நவாஸ் ஷெரீபின் பயணத்தின் போது. கையெழுத்திடப்பட்ட உடன்பாடுகளில், போர் விமானக் கொள்வனவு உடன்பாடு உள்ள டங்கவில்லை. இதற்கு இந்தியா தெரிவித்த எதிர்ப்பே காரணமாகும்.

பாகிஸ்தான் போர் விமானங்களை வாங்கும் நடவடிக்கையில் இலங்கை தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தகவல் கிடைத்த பின்னர், மூன்று வாரங்களுக்கு முன்னர், புதுடில்லியில் இருந்து கொழும்பு அரச உயர்மட்டத்துக்கு ஓர் இராஜ தந்திரக் குறிப்பு அனுப்பப்பட்டது.

கடிதத் தலைப்பில்லாத வெள்ளைத் தாள் ஒன்றிலேயே அந்தக் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன. அதில் கையொப்பம் கூட இருக்கவில்லை. இதில் விடுதலைப் புலிகளுடன் போர் முடிந்து ஆறு ஆண் டுகளாகிவிட்ட நிலையில், தற்போதைய நிலையில் இலங்கைக்குப் போர் விமா ணங்கள் தேவையில்லை என்று கூறப்பட்டிருந்தது.

ஜே.எவ்-17 போர் விமானங்களில் பொருத்தப்பட்டுள்ள ரஷ்ய இயந்திரங் கள் நல்லவையல்ல என் றும், சீனா கூட இந்த விமானங்களைப் பயன்படுத்தவில்லை என அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசிங்கம் ஜெயலட்சுமி (தேவி)



தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் ஜெயலட்சுமி (தேவி) கடந்த (08.01.2016) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிரவேலு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், ஈஸ்வரனின் அன்புத் தாயும், ஸ்ரீவாணியின் அன்பு மாமியும், ரிசிகேசினி, தர்மிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (08.01.2016) வெள்ளிக்கிழமை பி.ப.04.00 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில்.
077 4975896

தகவல்:
பா. ஈஸ்வரன் (மகன்)



பிறப்பு 07 - 03 - 1978

இறப்பு 10 - 01 - 2016

### கந்தசாமி லக்ஸ்மன்

50,டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி லக்ஸ்மன் நேற்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையினார் கந்தசாமி மற்றும் மரினா தம்பதிகளின் அன்பு மகனும் இமலின், சுவற் மன் (தொழில்நுட்ப உத்தியோகத்தார் - UNHABITAT), றிச்மன், இவாஞ்சலின் (சுகவாழ்வு நிலைய இணைப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெனி (இத்தாலி), கில்பேர்ட் (அஞ்சலி அகம்-பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும், ஆர்னோல்ட், றெனோல்ட் ஆகியோரின் மாமனா ரும் திசான், டில்சான், சஜித் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கந்தசாமி சுவற்மன்

## சாட்டிக் கடலில்

இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்பாணம், நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த டொன் பொஸ்கோ சுதர்சன் (வயது-44) என்ற வவுனியா கச்சேரியில் பணியாற்றுபவரே சாவடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்றுப் பிற்பகல் நண்பர்களுடன் சாட்டிக் கடலில் குளிக்கச் சென்றுள்ளார். இதன்போதே அவர் கடலில் மூழ்கிச் சாவடைந்துள்ளார். குறித்த குடும்பஸ்தரைக் காணவில்லையென நண்பர்கள் தேடி கடலுக்குச் சென்ற போதே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவடைந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள் ளது.இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (வ-106)

## வேலையற்ற

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்தக் குழு, வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்புக்கள் மாத்திரமன்றி தனியார் மற்றும் சுய தொழில் முயற்சிகளில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் நிரோன் பெரேரா குறிப்பிட்டார்.

அத்துடன் இவற்றை குறுகிய கால தீர்வாகவே முன்வைக்கவுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், வருடாந்தம் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கான நீண்டகால வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை நாட்டில் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்மிக முனசிங்க குறிப் பிட்டுள்ளார். (வ-5)

## மூத்த

ஜாம்பவானாக விளங்கிவந்த அவர் சுதந்திரன், வீரகேசரி நாளேடுகளின் உதவி ஆசிரியராகவும், தினபதி, சிந்தாமணி, சூடா மணி பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் அறுபது - ஆண்டுகளாக ஊடகத்துறையை அலங்கரித்தவர்.

அவரது அரவணைப்பில் இந்தத் துறையில் பணியாற்றிய பலரும் இப்போது எமது நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் ஊடகத்துறையில் முன்னணியில் திகழ்கின்றார்கள். அவருக்கான இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று எட்டு மணிக்கு இடம்பெறும். (அ)

## பிரபாகரனின்

கடித்தாலும் அவர்களின் இலக்கு மற்றும் செயற்பாடுகள் இன்னும் முற்றுப் பெற வில்லை. புலிகள் மற்றும் பிரிவினைக் காரர்களின் மனம் மாறும் என்று மைத்திரி தப்புக் கணக் குப் போடுகின்றார்.

முப்பது வருடங்களாக போராட்டம் என்றும் போர் என்றும் இருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் மனம் மாறிவிடும் என கணக்கு போட இயலாது. அவர்கள் சர்வதேச வலையமைப்பை இன்னமும் கொண்டிருக் கின்றார்கள். இன்றைய காலத்தில் மைத்திரிபால சிறிசேனவையும் அரசையும் இயக் கும் சர்வதேச சக்திகள் அன்றைய காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பாதுகாக்க முனைந்தது. அது கைகூடவில்லை. புலிகளின் எதிர் பாரப் பை அந்தச் சக்திகள் அரசின் ஊடாகச் செய்கின்றன. மனித உரிமை என்ற போர்வையில் உள்ளக விவகாரங்களில் சர்வதேச சக்திகள் தலை யிடுகின்றன. அரசு முன்னெடுக்கும் அனைத்து வேலைத் திட்ட மும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே முன்னெ டுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (து-5)

## தாஜுதீன்

சண்டேலீடர் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோசித ராஜபக்சவுக்கும், வசிம் தாஜு தீனுக்கும் இடையில் நிலவிய பனிப்போரின் காரணமாகவே, இந்தக் கொலை இடம் பெற்றதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனடிப் படையிலேயே யோசித ராஜபக்ச விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக குற் றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு நெருக்கமானவர்கள், முக் கிய பிரமுகர்கள் பலர் விரைவில் கைது செய் யப்படும் வாய்ப்பு இருப்பதாக, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கடந்த வாரம் தகவல் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த ஆண்டிலும் ராஜித இதனையே கூறியதாகவும் இந்த ஆண்டிலும் இதனைக் கூறி வருவதாகவும் ராஜிதவின் கருத்துக்களில் உண்மையில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் சாவடைந்திருந்தார். விபத்திலேயே அவர் உயிரிழந்ததாக அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவர் படுகொலை செய்யப்பட்டு அதனை விபத்து என்று காண்பித்திருந்த தாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பில் மீள் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. தாஜுதீன் படுகொலை செய்யப்பட்ட பின்னரே வாகனத்தில் இருத்தி வைக்கப்பட்டு, திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துமீறும்

கலுக்கு பின்னர் கைப்பற்றுமாறு கடற்படையினருக்கும் கரையோரக்காவல் படையினருக்கும் உத்தரவிட்டுள்ளாதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு வந்த அமைச்சர் நேற்று யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைதிணைக்களத்தில், யாழ்.மாவட்டத்திலுள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே, கடற் றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களினதும் கடற்றொழிலாளர் சமாசத்தினர் அமைச்சரிடம் தமது பிரச்சினைகளை முன்வைத்தனர்.

குறிப்பாக, தமது கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய மீனவர்கள் பலர் உள்ளபோதும் ஒருசிலரே கைது செய்யப்படுகின்றனர். இவர்களின் இழுவைப்படகுகள் எம்முடைய கடல் வளத்தையும் வலைகளையும் மொத்தமாக அழித்தும் வருகின்றன.

முன்னர் மீன்பிடிக்க வந்தவர்கள் தற்போது சண்டை செய்வதற்கு வருவதுபோல் திரண்டு வருகின்றனர். அத்துடன் தென்னிலங்கையில் இருந்து அட்டை பிடிக்கவரும் மீனவர்களும் றோலர் படகில் எமது வலையை அழித்துவருகின்றனர்.

ஏனைய துறையினர் பாதிக்கப்பட்டால் மானியங்கள் மற்றும் நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. எனினும் கடந்த 1983ஆம் ஆண்டுக்குபின்னர் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மீனவர்களுக்கு எந்த விதமான மானியங்களும் வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைத்தால், அவர்தான் நன்னீர் மீன்பிடிக்கு மட்டுமே அமைச்சராக உள்ளதாக தெரிவிக்கின்றார். மீன்பிடியில் நிலவும் பிரதேசவாதக் கொள்கைகள் தகர்க்கப்பட வேண்டும். நெடுந்தீவில் கடலரிப்பைத் தடுப்பதற்கான சுற்றுவட்ட தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும்.

மேலும், கூட்டுறவாளர் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பதவிநீக்கம், நியமனங்கள் தொடர்பாகவும் தீர்வுவேண்டும். புத்தூர், தொண்டமானாறு மீனவர்களைப் பாதிக்கும் நன்னீர் திட்டத்துக்கு மாற்றீடான வாழ்வாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் கரையோர காணிகள் விடுவிக்கப்படுவதுடன், மயிலிட்டியில் இறங்குதுறை அமைக்கப்பட வேண்டும். கரையோரப் பகுதிகளில் வெளிச்சவீடுகள் அமைக்கப்பட வேண்டும். எரிபொருள் மானியத்திற்கு மாற்றீடாக வழங்கப்பட்ட வலைகள் உரிய தரத்துடன் இல்லாமலும், முழுமையாகவும் வழங்கப்படவில்லை. இயந்திரப்படகு வைத்திருப்பவர்கள் தவிர்ந்த மற்றையவர்களுக்கும் மானியம் வழங்கப்படவேண்டும். கடற்றொழிலில் நவீன வகை உபகரணங்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கைகளை கடற்றொழிலாளர் சமாசங்கள் அமைச்சரிடம் முன்வைத்தன.

இந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளித்த அமைச்சர் மகிந்த சமரவீர,

கடந்த முறை இடர் முகாமைத்துவ அமைச்சராக இருந்தபோது, வடக்குக்கு பலநலத்திட்டங்களை வழங்கியுள்ளேன். எனவே நானும் வடபகுதி மக்களும் அன்னியப்பட்டவர்கள் அல்ல. கொழும்பில் நிலவும் கருத்துக்கு மாறாக இங்கே மக்கள் பிரச்சினை உள்ளது என்பதை கண்டுகொண்டேன். இனவாதம் பேசும் குழுவினர் வடபகுதி மக்களை புலிப் பார்வையில் பார்க்கின்றனர். இவர்களை அழைத்து வந்து உங்கள் பிரதேச முகாம்களைக்காட்டினால் இனவாதத்தை முற்றாக இல்லாது ஒழிக்கமுடியும்.

ஜனாதிபதி நாட்டை முன்னேற்ற பாடுபடுகிறார் ஆனால் முன்னேற்றகரமான செயற்பாட்டிற்கு தடையாக ஒரு சில குழுக்கள் செயற்படுவதை அனைவரும் அறிந்ததே.

யாழ். மாவட்ட பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க 38 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைகள் தோறும் அடுத்த ஆண்டு தொழில் சங்கங்கள் உருவாக்கப்படும். முதற்கட்டமாக இந்த ஆண்டு இரண்டு சங்கங்கள் உருவாக்கப்படவுள்ளன. இங்கு 80 உத்தியோகத்தர்களுக்கான நியமனங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந்திய மீனவர்களின் வருகையைத் தடுத்தல் மற்றும் உள்நாட்டில் இழுவைப்படகு பயன்பாட்டுக்குத் தடை போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதற்காக கடுமையான சட்டம் உருவாக்கியுள்ளோம்.

மேலும், வடக்கில் நீரியல் உயிரினவளர்ப்பு பூங்கா அமைப்பதற்கான செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நன்னீர் கிராம அபிவிருத்தி திட்டம் முதல் முறையாக இரணைமடுவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எங்கள் பிரதேசத்திலும் நன்னீர் குளங்கள் காணப்பட்டால் எமக்கு அறியத்தாருங்கள். பருத்தித்துறையில் 25 ஏக்கர் பரப்பளவில் துறைமுகம் இந்த ஆண்டு அமைக்கப்படவுள்ளது. குருநகர் துறைமுகம் நடப்பு வருடத்தில் சீர்செய்யப்படாது விடின் அடுத்த ஆண்டு நிறைவேற்றப்படும். அத்துடன் மாதகல் முதல் பருத்தித்துறை வரை காக்கைதீவை உள்ளடக்கியதாக திட்டத்துக்கான சாத்திய கூற்று அறிக்கைகள் அனுப்பப்படவுள்ளது.

மயிலிட்டி துறைமுகமும் கவனிக்கப்படும். ஐரோப்பிய நாடுகள் தற்போது மீன் ஏற்றுமதியை அனுமதிப்பதற்கான திட்டத்தை எண்ணுவதாக குறிப்பிட்டுள்ளன. இது எமது மீன் உற்பத்தியை ஊக்குவிப்பதாக அமையும்.

ஆள்கடல் மீன்பிடியை மேற்கொள்வதற்கு தயாராகுங்கள். உங்களுக்கான நவீன கருவிகள் வழங்கப்படும். மானியங்களும் உதவித்திட்டங்களும் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களுக்கான வங்கிக்கடன் நிவாரணத்திற்கு சட்டம் இயற்ற நாடாளுமன்றத்தில் வரைவுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளது.-என்றார். (வ-ரி5,10)

## அரசமைப்பு

ஏற்பாடொன்றை இணைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன.

முழு நாடாளுமன்றத்தையும் உள்ளடக்கிய தெரிவுக்குழு குறித்து குறிப்பிடவேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடாகக் காணப்பட்டது.

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ்குணவர்தன முன்வைத்த இந்த வேண்டுகோளுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் ஆதரவளித்துள்ளன. இதனைத் தொடர்ந்து அரச முழு நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைக்கொண்ட என்ற வார்த்தைகளை பிரேரணையில் இணைத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்தின் நாளைய அமர்வில் இந்த மாற்றங்களை அரசு இணைத்துக் கொள்ளவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சபாநாயகரை, கட்சிகளின் தலைவர்கள் சந்தித்தவேளையே இந்தத் தீர்மானத்தில் திருத்தங்கள் குறித்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. அவர்கள் பிரதமரையும் பின்னர் ஜனாதிபதியையும் சந்தித்தனர். இதன் பின்னர் அவர்கள் எழுத்துவடிவில் திருத்தங்களை முன்வைக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னர் பின்வரும் மாற்றங்களை அவர்கள் முன்வைத்தனர்.

நிலையியற் கட்டளை 86(1)இன் அடிப்படையில் இலங்கைக்கான அரசமைப்பை உருவாக்குவது மற்றும் நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்காக அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காகவும் மக்களின் கருத்தை ஆலோசனைகளைக் கேட்பது மற்றும் ஆழமாகப் பரிசீலிப்பதற்காக முழுநாடாளுமன்றத்தின் குழு வொன்றை நியமிக்கவேண்டும் என நாடாளுமன்றம் தீர்மானிக் கின்றது.

குறிப்பிட்ட குழுவுக்கு நிலையியற் கட்டளையின் 130ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். குறிப்பாக, 130(4)இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

நிலையியற் கட்டளையின் 130(2) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளலாம் - நிராகரிக்கலாம் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளலாம். பொருத்தமானதுதான் எனக் கருதும் அடுத்தகட்ட நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளலாம்.

கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரேரணையை அதன் மூலவடிவத்திலேயே சமர்ப்பித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து திருப்தியடைந்துள்ளபோதிலும், அனைத்து தரப்பினரும் அரசமைப்பு உருவாக்க முயற்சியில் பங்குகொள்வதை உறுதிப்படுத்துவதற்காக, அவர்களது கருத்தை செவிமடுக்க தான் தயார் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

சனிக்கிழமை நாடாளுமன்ற அமர்வைத் தொடர்ந்து கட்சிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற சபாநாயகரைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் பிரதமருக்கும் ஜே.வி.பி. தலைவருக்கும் இடையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை இரவு பிரதமருடனான சந்திப்பின்போது, ஜனாதிபதி எதிர்க்கட்சியினரின் கருத்துகளை செவிமடுக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-சி)

## ஒற்றையாட்சிக்கு

மாற்றம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

புதிய அரசமைப்புக்கான யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 1972ஆம் 1978ஆம் ஆண்டுகளில் அரசமைப்பு உருவாக்கப்பட்டபோது, மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எனினும், அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு முன்னர் மக்களிடம் கருத்து கோரப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

அந்தவகையில், மக்களின் கருத்துகளை உள்வாங்குவதற்காக சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிடம் மக்கள் அரசமைப்பு மாற்றம் குறித்து தமது கருத்துகளை ஆலோசனைகளை முன்வைக்க முடியும்.

அரசமைப்பு மாற்றம் சட்டவிரோத நடவடிக்கை என சிலர் விமர்சிக்கின்றனர். அது உண்மையல்ல. 1978ஆம் ஆண்டு அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அந்தவகையில் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவருவதற்கோ அல்லது அதை நீக்குவதற்கோ அல்லது புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கோ முடியும் என 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் 82 ஆவது சரத்தில் கூறப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு அரசமைப்பில் குளறுபடிகள் இருக்கின்றன என்று கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. சோல்பரி யாப்பை அடிப்படையாகக்கொண்டு 1972ஆம் ஆண்டு அரசமைப்பு உருவாக்கப்படவில்லை. சோல்பரி யாப்பில் மாற்றமுடியாத சரத்துகள் இருந்தன.

குறிப்பாக, சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சரத்துகள் இருந்தன. அப்போது ஆட்சியிலிருந்த அரசு, தமக்கு மக்கள் ஆணை இருப்பதாகவும், அதை அடிப்படையாகக்கொண்டு புதிய அரசமைப்பை உருவாக்குவதாகவும் கூறியது. அதை செய்வதற்கு அவர்கள் நாடாளுமன்றத்தில் கூடவில்லை. றோயல் கல்லூரியிலேயே கூடினர். அங்குவருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் அழைப்புக் கடிதம் விடுத்தார்.

எனினும் தற்போது, திருட்டுத்தனமாகவும் இரகசியமாகவும் அரசமைப்பை தயாரிப்பது அரசின் நோக்கம் அல்ல. அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும். பேச்சுகளில் கலந்துகொண்டு ஒரு கருத்தையும் வெளியில் வந்து மற்றுமொரு கருத்தையும் சிலகட்சிகள் கூறுகின்றன. வெளிப்படையாகவே நாம் செயற்படுகிறோம். அரசமைப்புக்குரிய பணிகள் நாடாளுமன்றத்தில் தான் இடம்பெறுகின்றன. அங்கு என்ன நடக்கின்றது என்பது தொடர்பில் செய்தி வெளியிடுவதற்கு ஊடகங்களுக்கு சுதந்திரம் இருக்கிறது.

அத்துடன், சகல கட்சிகளும் தமது கருத்துகளை முன்வைக்கலாம். சகல கட்சிகளையும் இணைத்துக்கொண்டு புதிய அரசமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். அது அரசின் செயற்பாடு அல்ல. நாடாளுமன்றத்தின் செயற்பாடு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களுள் 90 சதவீதமானவற்றை நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் வெளியிட்டுள்ளார். எனினும், சில சரத்துகளில் மாற்றம் கொண்டுவரவேண்டுமானால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. - என்றார்.

இதேவேளை, பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமை புதிய அரசமைப்பு ஊடாக இல்லாமல் போகும் என சிலர் கூறுகின்றனரே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

பழைய அரசமைப்புத் தான் தற்போது நடைமுறையில் உள்ளது. புதிய அரசமைப்பு யோசனையை இன்னும் நாம் முன்வைக்கவில்லை. புதிய அரசமைப்பினூடாக பௌத்த மதத்துக்கோ அல்லது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாது.- என்றார். (வ-சி)

## 30 நாள்களில்

ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்குமாறு வலியுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மகிந்த ராஜபச ஆட்சிக்கு வந்த 2005ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு பதவியிலிருந்துவெளியேறியவரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செலவுகளின் விவரங்களை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் திருமண மற்றும் மரணச்சடங்கு நிகழ்வுகளுக்கு சென்று செலவிட்ட விபரங்கள் மற்றும் கொள்வனவு செய்த மின்சாதன பொருட்கள் உள்ளிட்ட பொருள்களின் வகைகள், கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விவரம், தற்போதுள்ள சொத்து விவரம் போன்றவற்றின் விவரங்களையும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (து-5)

## சீனாவுக்கான

செயல் என்று தமது எதிராளிகள் பரப்புரை செய்வார்கள் என்று மகிந்த ராஜபக்ச அஞ்சுவதாகவும், எனவே, சீனப் பயணத்தை மேற்கொள்வதற்கு இது உகந்த தருணமல்ல என்றும் அவர் கருதுவதாகவும் அதனாலேயே பயணத்தை பிற்போட்டதாகவும் கூறப்படுகின்றது.

கண்டியில் இருந்த மகிந்த ராஜபக்சவைத் தொடர்பு கொண்டு சீனப் பயணம் தொடர்பாக கேள்வி எழுப்பிய போது, இந்தப் பயணம் பிற்போடப்பட்டதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார். தனது உடல்நிலை காரணமாகவே பயணம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (து-5)

## கிளிநொச்சியில்

கும், மாகாண சபை உறுப்பினர்களுக்குமான கூட்டத்தைக் கூட்டுமாறு பல தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர், கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தும் இருந்தனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதேபோன்று வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கூட்டமைப்பின் சகல உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து இந்தக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. அதற்கு மறுநாள், இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது மத்திய செயற்குழுக் கூட்டத்தை கூட்டுவ தற்கு திட்டமிட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமி விலகல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடருக்கான இந்திய அணியில் இருந்து சமி விலகியுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின்போது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக 9 மாதங்கள் அணியில் இடம்பெறாமல் தற்போதுதான் அணிக்குத் திரும்பியிருந்தார் சமி. ஆஸ்திரேலியாவை எதிர்கொள்வதற்காக பயிற்சியில் ஈடுபட்ட வேளையில் நேற்றுமுன்தினம் சமிக்கு மீண்டும் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் சுமார் நான்கு வாரங்கள் முதல் 6 வாரங்கள் வரை ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆஸ்திரேலியா தொடரில் இருந்து சமி விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக புவனேஸ்வர் குமார் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் நாளை இந்திய அணியுடன் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)







## மரணஅடி என்பது இதைத்தான் ரி-20 கிண்ணம் நியூசிலாந்திடம்

### 7 சிக்சர்களுடன் 14 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் முன்றோ

நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றிபெற்ற நியூசிலாந்து தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கடந்த ஆட்டத்தில் சிறிது தாக்குப் பிடித்த குணதிலக 8 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். டில்சானின் பிடியெடுப்பைத் தவறவிட்டார் போல்ட். ஜெயசூரிய, சந்திமல் இருவரும் முழுமையாக ஐந்து ஓட்டங்களையேனும் நிறைவுசெய்யவில்லை. நெருக்கடிகளில் கைகொடுக்கும் மத்தியூஸ் இந்த ஆட்டத்திலும் கைகொடுக்கத் தவறவில்லை. 3 சிக்சர்களுடன் 32 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் மத்தியூஸ். டில்சானின் இன்னிங்ஸ் 28 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ஒரே பந்தில் ஆட்டமிழந்தார் சிறிவர்தன. பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்கத்தை தாண்டவில்லை. மத்தியூஸின் மிரட்டலில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களை எடுத்தது இலங்கை. மத்தியூஸ் 81 ஓட்டங்களுடனும் வண்டர்சே 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக எலியாட் 4 இலக்குகளையும் மில்னி, சான்நெர் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

120 பந்துகளில் 143 ஓட்டங்கள். நியூசிலாந்து தற்பொழுது இருக்கும் போர்மில் இது ஒரு இலக்கேயில்லை. அதிரடியை ஆரம்பித்தார் குப்தில். வில்லியம்சனும் விடுவதாக இல்லை. முதல் பந்துப்பரிமாற்றத்தில் இருந்து மிரட்டல் ஆரம்பமானது. 3.4 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 19 பந்துகளில் அரைச்சதம் கடந்த குப்தில் 63 ஓட்டங்களுடன் பெரேராவிடம் ஆட்டமிழந்தார். வில்லியம்சனின் ஆட்டத்தில் மாற்றம் இல்லை. குப்திலை விட ஆபத்தான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் முன்றோ. சிக்சர்களை விளாசுவதிலேயே முன்றோவின் இன்னிங்ஸ் நகர்ந்துகொண்டிருந்தது. உதான, சமீர, வண்டர்சே, பெரேரா என்று எவரது பந்துப்பரிமாற்றங்களும் மிச்சமில்லை. அடித்து நொறுக்கினார். யுவராஜ்ஜின் 12 பந்துகளில் அரைச்சதம் கடந்த சாதனை முன்றோவால் தகர்க்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 14 பந்துகளில் அரைச்சதம் கடந்ததால் யுவியின் சாதனை தொடர்ந்தும் உயிர்ப்புடன் நீடிக்கிறது. முன்றோவின் இந்த இன்னிங்ஸ் ரி-20 ஆட்டங்களில் இரண்டாவது அதிவேக அரைச்சதம், நியூசிலாந்து வீரர் ஒருவர் பெற்ற வேகமான அரைச்சதம் என்று பதிவானது. பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் இலக்கை ஊதித்தள்ளி 2:0 என கிண்ணத்தைக் கைப்பற்றியது நியூசிலாந்து. (ம)

## இந்த வருட ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து வீரர்கள் பங்கேற்பு

இந்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து வீரர்களை பங்கெடுக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பெய்லிஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது வீரர்களை ஐ.பி.எல். தொடரில் இதுவரை அனுமதித்ததில்லை. ஆனால், இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து வீரர்கள் விளையாடுவார்கள் என்று அறியவருகிறது.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகள் இந்த வருடம் இங்கிலாந்து வீரர்களை ஐ.பி.எல். தொடரில் விளையாட வைக்கத் தயாராக இருக்கிறது. முதல் வீரராக ஜோஸ் பட்லர் இடம்பெற வாய்ப்பு இருப்பதாக இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பெய்லிஸ் தெரிவித்துள்ளார். மட்டுமல்லாமல் டெஸ்ட் ஆட்டங்களில் பங்கெடுக்காத வீரர்களும் இந்த வருடம் விளையாடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். நடப்பு வருடத்தின் ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் 8ஆம்



திகதி முதல் மே 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ம)

## இந்தியாவை வீழ்த்த ஆயுதம் பவுன்சர் பந்துவீச்சுத்தானாம்

இந்திய அணியை வீழ்த்துவதுக்கு சிறந்த ஆயுதமாக பவுன்சர் பந்துவீச்சையே பயன்படுத்தப் போவதாக ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் பின்ஞ் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றுள்ளது. இந்த தொடரின் முதல் ஒருநாள் ஆட்டம் பேர்த் நகரத்தின் வாக்கா மைதானத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ஆஸியின் பிரதானமான ஆயுதமாக பவுன்சர் பந்துவீச்சு இருக்கும் என்று பின்ஞ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் கடந்த சில ஆண்டுகளில் பேர்த் ஆடுகளம் மாற்றம் அடைந்துள்ளது. எனவே முன்பு போல் வேகபந்து வீச்சுக்கு சாதகமாக இருக்காது. ஆனால் ஆடுகளத்தில் அதிகமான பவுன்சர் இருக்கும். அதை நாங்கள் இந்தியாவிற்கு எதிராக பயன்படுத்துவோம். பவுன்சர் பந்துவீச்சில் இந்தியா தடுமாறும் என்ற நம்பிக்கை மிகையாக உள்ளது. கோக்லி, ரோகித் சர்மாவிடம் அதிக எச்சரிகையாக இருப்போம்- என்றார். (ம)

## பிளாட்டினியின் சபதம்



தன்மீது சுமத்தப்பட்ட முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டு தவறானது என விரைவில் நிரூபிப்பதாக ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மைக்கல் பிளாட்டினி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தில் (பிபாவில்) நடந்த பல்வேறு முறைகேடு தொடர்பாக, நன்னடத்தை குழு நடத்திய விசாரணையில் பிளாட்டினிக்கு 8 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. பிபாவின் அடுத்த தலைவராக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்த தடை அவரது கால்பந்து நிர்வாக வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வருவதாக அமைந்து விட்டது. இது தொடர்பாக தெரிவித்த மைக்கல் பிளாட்டினி என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தவறானது என்று விரைவில் நிரூபிப்பேன். எனக்கு தரப்பட்ட தடைக்காலம் மிகவும் வருத்தமடையச் செய்கிறது. நான் குற்றமற்றவன் என்று நிரூபித்துவிட்டால் தடை தானாக எடுத்துக்கொள்ளப்படும். இந்த வருடத்துக்குள் இதை சாத்தியமாக்குவேன்-என்றார். (ம)



## சானியா கிங்கிஸ் இணை பிரிஸ்பெயினிலும் சம்பியனானது

பிரிஸ்பெயின் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா சுவிற்சர்லாந்தின் கிங்கிஸ் இணை சம்பியனாகியுள்ளது.

இந்த வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி மெல்பேர்னில் ஆரம்பமாகிறது. இதற்கு வீர, வீராங்கனைகளைத் தயார்ப்படுத்தும் விதமாக பிரிஸ்பெயினில் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. இதில் இந்தியாவின் சானியா மிர்சா சுவிற்சர்லாந்தின் கிங்கிஸ் இணையை எதிர்த்து கெர்பர் - பெட்கோவிக் இணை மோதியது. அனுபவம் வாய்ந்த சானியா கிங்கிஸ் இணைக்கு கெர்பர் - பெட்கோவிக் இணை முதல் செற்றில் கடும் சவால் கொடுத்தது. கடும் முயற்சிக்குப்பின் சானியா கிங்கிஸ் இணை 7:5 என முதல் செற்றை கைப்பற்றியது. ஆனால், இரண்டாவது செற்றில் சானியா கிங்கிஸ் இணை நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த செற்றை 6:1 என எளிதில் வென்று 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**மாவத்தை வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 11

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி அணியை எதிர்த்து அராலி சென் நியூஸ்ரார் அணி மோதவுள்ளது.

**உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடர்**

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

**பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சங்கம்**

யாழ். பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 19வயது அணிகளுக்கான ஆட்டங்கள், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணக்கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும், கொற்றாவத்தை அ.மி.கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ம-422-23)

# நடுவரைத் தாக்கிய சர்ச்சையில் றேஞ்சர்ஸுக்கு ஒரு வருடம் தடை

கரணவாய், ஜன. 11

கால்பந்தாட்டத் தொடரின் போது நடுவரைத் தாக்கிய கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் ஒருவருடம் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் தாக்கிய வீரருக்கு 2 வருடங்கள் தடையும் விதிக்கப்பட்டது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரில் கடந்த 25 ஆம் திகதி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் அணிவீரர் ஒருவர் விதிகளுக்கு முரணாக விளையாடியதால் நடுவரால் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். இந்த ஆட்டத்தில் கலைமதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றிருந்தது.

ஆட்டம் நிறைவடைந்த பின்னர் றேஞ்சர்ஸ் அணியின் வீரர்கள் சிலர் ஒன்று சேர்ந்து நடுவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டு, வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. இப்பின்னணியில் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஒழுக்காற்றுக் குழு பிரதான நடுவரையும் துணை நடுவர்களையும் கொழும்புக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டது. நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட கழகத்துக்கு ஒரு வருடம் சகல ஆட்டங்களிலும் பங்குபற்ற தடைவிதித்ததுடன் நடுவரைத்தாக்கிய வீரருக்கு 2 வருடங்கள் விளையாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டது மட்டுமல்லாது 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச்செலுத்துமாறும் உத்தரவிட்டது. (ம-108-23)

லக்கிஸ்ரார், உருத்திரபுரம் அணிகளுக்கு

# கரைச்சி கால்பந்தாட்டத் தொடரில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 11

கரைச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் லக்கிஸ்ரார், உருத்திரபுரம் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதிக் கொண்டது. இதில் லக்கிஸ்ரார் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சந்திரோதய அணியை எதிர்த்து உருத்திரபுரஅணி மோதிக் கொண்டது. இதில் உருத்திரபுரம் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# யாழ். பிராந்திய அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 11

கிறிஸ்தீபன், பிறோம்சன், ரவிவர்மன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் மன்னார் பிராந்திய அணியை வெற்றி கொண்டு இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது யாழ். பிராந்திய அணி.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் தாழ்வுபாடு ஆயர் ஜோசப் ஆண்டகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். பிராந்திய அணியை எதிர்த்து மன்னார் பிராந்திய அணி மோதிக் கொண்டது. யாழின் ஆதிக்கம் முதல் பாதியிலேயே வலுவாக அமைந்தது. 3:1 என்ற ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இதில் யாழ். பிராந்திய அணி சார்பில் கிறிஸ்தீபன் ஓர் கோலையும் றேம்சன் 2 கோலையும் பதிவு செய்தனர்.

இரண்டாம் பாதியிலும் யாழின் ஆதிக்கம் தொடர்ந்தும் நிலைபெற்றிருந்தது. கிறிஸ்தீபன், றோம்சன், ரவிவர்மன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பதிவு செய்ய முடிவில் யாழ். பிராந்திய அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றது. (ம-23)

# ஜெயந்திநகர் இளந்தளிர் அணிகளுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 11

கரைச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 19வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் உதய தாரகை அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதிக் கொண்டது. இதில் ஜெயந்திநகர் அணி 1:0 என்ற கோல் கணகில் வெற்றி பெற்றது. இரண்டவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சந்திரோதய அணியை எதிர்த்து இளந்தளிர் அணி மோதிக் கொண்டது. இதில் இளந்தளிர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# சென்.மேரிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 11

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமாரன் அணி மோதிக் கொண்டது.இதில்நாச்சிக்குடாசென். மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றது. (ம-23)



# யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாண பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்-

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 11:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனக்கல்லூரி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை நீடித்த இந்த ஆட்டத்தில் மகாஜனக்கல்லூரி அணி 10:9 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலையில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 7:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து அருணோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குலிதான் சிறந்த தலைவர் அடித்துக்கூறுகிறார் அஸ்வின்



தான் சந்தித்த தலைவர்களில் கங்குலிதான் சிறந்த தலைவர் என்று தெரிவித்துள்ளார் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின். இந்திய அணி தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. தொடரின் முதலாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது. தொடர் தொடர்பாக அஸ்வின் நேர்காணல் வழங்கிய பொழுது அவரிடம் டோனி, கோல்கி மற்றும் கங்குலி இதில் யார் உங்களின் மனம் கவர்ந்த அணித்தலைவர் என்று கேள்வி கேட்கப்பட்டது. தற்போது டோனியின் தலைமையில் விளையாடி வரும் அஸ்வின் சற்றும் தயங்காமல் கங்குலி தான் சிறந்த தலைவர் என்று தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில், 'கங்குலி தலைவராகப்பொறுப்பேற்ற பின்னர் இந்தியா அதிக வெற்றிகளைக்குவிக்கத் தொடங்கியது. அவர் இளம் வீரர்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றதோடு அணியின் வெற்றிக்கும் முக்கிய காரணமாக இருந்தவர். நான் அவரைப் பார்த்து வளர்ந்தவன்' என்றார். (ம)

# அக்மலுக்குத் தடை



பாகிஸ்தானின் அதிரடி வீரரான உமார் அக்மலுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாட பாகிஸ்தானின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை விதித்துள்ளது.

கடந்த வாரம் நடந்த உள்ளூர் ஆட்டத்தின் போது வீரர்களுக்கான ஆடை வழிகாட்டுதலை இவர் பின்பற்றவில்லை. அதாவது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அங்கீகரித்த விளம்பர சின்னத்தை பயன்படுத்தாமல் வேறு சின்னத்தை உடையில் பயன்படுத்தினார். இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உமர் அக்மல் மீது நடவடிக்கை எடுத்து ஓர் ஆட்டத்தில் விளையாடத்தடை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து வருகிற 15ஆம் திகதி நியூசிலாந்துக்கு எதிராக நடைபெறும் முதல் ரி-20 ஆட்டத்தில் அவர் விளையாட முடியாத நிலை உள்ளது (ம)

# நியூஸ்ரார் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 11

அராலிமாவத்தைவிளையாட்டுக் கழகம் உழவர்திருவிழாவை முன்னிட்டு நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலிமாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி சில்வேஸ்ரார் அணியை எதிர்த்து அராலி சென். நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது இதில் அராலி சென்நியூஸ்ரார் அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ரியல் மட்ரிட் அபாரவெற்றி




லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொருண்யா அணியை வீழ்த்தியது ரியல் மட்ரிட்.

ரியல் மட்ரிட்டின் பயிற்சியாளராக சிடான் பதவியேற்ற பின்னர் முதலாவது ஆட்டமாக கொருண்யாவுடன் ரியல் மட்ரிட் மோதியிருந்த நிலையில், ரியல் மட்ரிட் 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தின் 15ஆவது மற்றும் 90ஆவது நிமிடங்களில் கரீம் பென்சிமா இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார். 22ஆவது 49ஆவது 63ஆவது நிமிடங்களில் கோல் களை விளாசியதன் மூலம் கரீத் பலே ஹற்றிக் கோல்களைப் பதிவுசெய்தார். தற்போது 40 புள்ளிகளைப் பெற்றுள்ள ரியல் மட்ரிட், லா லிகா புள்ளிகள் தர வரிசையில் முதலிடம் பெற்றுள்ள பார்சிலோனாவை விட இரண்டு புள்ளிகளே குறைவாகப் பெற்றுள்ளது. (ம)

# சவுத்தி விலகல்



பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரிலிருந்து காயம் காரணமாக நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான சவுத்தி விலகியுள்ளார்.

நியூசிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் மற்றும் ஒருநாள் தொடர் இந்த மாதம் நடைபெறவுள்ளது. முதலில் ரி-20 தொடர் வரும் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. இதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந்து புறப்பட்டுள்ளது. ரி-20 தொடருக்கான நியூசிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் சவுத்தி இடம்பெற்றிருந்தார். இவருக்கு இலங்கை அணிக் கெதிரான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தின்போது கால் பாதத்தில் காயம் ஏற்பட்டது. இந்த காயத்தின் வீரியம் குறையாத கார ணத்தில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ரி-20 தொடரில் இருந்து விலகியுள்ளார். அதன்பின் பிறகு ஜனவரி 25ஆம் திகதி தொடங்கும் ஒருநாள் தொடரில் விளையாடுவாரா? என்பது உறுதியாகத் தெரியவில்லை. (ம)

பொருளியல்
திரு. P. சண்
Paper Class
A/L 2016 & 2015
Day
WEEKLY
10 Hours
ஆரம்பம்:-
12.01.2016
செவ்வாய்-
5.00pm
வினைல்ஸ்
சுன்னாகம்.

ANNAMALAI ACADEMY
அண்ணாமலை அக்கடமி
ஆங்கிலம், சிங்களம்
O/L, A/L பல்கலைக்கழகம்
மற்றும் உத்தியோகத்தர்களிற்கான வகுப்புக்கள்
மத்திய கல்லூரி அருகில், இணுவில்.
காரைநகர் வீதி, பண்ணாகம்.




# தொடர்ந்தும் முதலிடத்தில் பார்சிலோனா



லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்ற பார்சிலோனா, தரப்படுத்தலில் தனது முதலிட அந்தஸ்தை தக்க வைத்துள்ளது.

பார்சிலோனாவுக்கும் கிரனடாவுக்கும் இடையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மெஸ்ஸியின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் பார்சிலோனா அபாரவெற்றி பெற்றது. ஆட்டத்தின் 8ஆவது, 14ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி இரண்டு கோல்களைப்பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 58ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மேலும் ஒரு கோலை விளாசினார். நெய்மர் 83ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்று வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)

# சல்மான் பட், மொகமட் ஆசிப் இருவரும் உள்ளூர் ஆட்டங்களுக்குத் திரும்பினர்

சூதாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர்களான சல்மான் பட், மொகமட் ஆசிப் இருவரும் உள்ளூர் ஆட்டங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற தொடரில் பட், ஆசிப், ஆமிர் மூவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அவர்களுக்கு ஐந்தாண்டுகள் தடை விதிக்கப்பட்டது. ஆமிருக்கு கடந்த ஏப்ரல் மாதம் தடை முடிந்தது. அதனைத் தொடர்ந்து உள்ளூர் ஆட்டங்களில் விளையாடி சிறப்பான வகையில் திறமையை நிரூபித்துக்காட்டி முதன்முறையாக நியூசிலாந்து அணிக்கெதிரான தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து புறப்பட்டுள்ளார்.

ஆனால், சல்மான் பட் மற்றும் மொகமது ஆசிப் ஆகியோரின் தடை கடந்த செப்டம்பர் மாதம்தான் முடிவடைந்தது. அதன்பின் நான்கு மாதங்கள் முடிந்த பின்னர் தற்போதுதான் அவர்கள் உள்ளூர் ஆட்டங்களில் விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org